KALAIKESARI

# கலைக்கேசரி

• CULTURE • HERITAGE • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 04 ISSUE : 0 … i Lanka under No. QD / 127 / News / 2012



நூறு ஆண்டுகள் கடந்த யூனியன் கல்லூரி

ராஜஸ்தான் ஒட்டகத்திருவிழா

www.kalaikesari.com / JANUARY 2013


ISSN 2012-6824

9772012682008

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |


பாரம்பரிய பெருமைமிக்க எங்கள் மண்ணின்
உணர்வுகள் இணையத்தில்...
யாழ் மண்
Yarl Mann
Connect with Jaffna
www.yarlmann.lk

1951-2011
60 Glittering Years
Pure | Timeless



Lalitha
fine jewellery since 1951

105, Sea Street, Colombo 11. T: +94 11 232 3691 / 247 0682  F: +94 11 243 6343
442, RA De Mel Mawatha, Kollupitiya, Colombo 03. T: +94 11 257 7451 / 2  F: +94 11 257 7454

info@lalithajewellers.lk | www.lalithajewellers.lk

## அட்டைப்படம்:

திருப்பெருந்துறையில் உள்ள ஆவுடையார்
கோவிலில் காணப்படும் குதிரைச்சிற்பம்


## உள்ளடக்கம்:


30 மொழிபெயர்ப்புக்கலையை இங்கிதமாக்கிய சோ.நடராசன்

44 நாடக உலகில் ஒரு சகாப்தம் கலையரசு கே.சொர்ணலிங்கம்

48 "குறையொன்றுமில்லை இசைக்கு"

52 உணவே மருந்து



12


22


56


60


26

# ஆசிரியர் பக்கம்



## புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.

*கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம்!*

*2013 ஆம் ஆண்டு மலர்ந்துள்ள இவ்வேளையில் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!*

*அத்துடன் தையில் மலரும் தமிழர்தம் தனித் திருநாளாம் தைப்பொங்கல் வாழ்த்துகளும் அனைவருக்கும் உரித்தாகட்டும்.*

*மேலும் வாசகர்களே இப்புது வருடப்பிறப்பில் உங்கள் அபிமான கலைக்கேசரி மூன்றாண்டுகள் இனிதே வலம் வந்து, நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது என்ற நற்செய்தியும் நீங்கள் அறிந்ததொன்றல்லவா!*

*தமிழ் கூறும் நல்லுலகில் ஒரு காத்திரமானதும் கவர்ச்சியானதுமான இதழ் என வாசகப் பெருமக்கள் அளித்து வரும் ஆதரவு மேலும் தொடர வேண்டுமென்பதே எமது பேரவா. அதற்கிசைந்தாற் போல், அறிஞர்களின் ஆதரவுடன் மேலும் பல புதிய விடயங்களைத் தர நாம் ஆவலோடு இருக்கிறோம்! அது பழைமையில் வரலாறு படைத்து நம்மினத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்ற சுவடுகளின் சித்திரிப்புகளாகவே அமையும் என்பதைக் கூறித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை!*

*2013 ஆம் ஆண்டில் தைத் திங்கள் இதழான, இவ்விதழும் நீங்கள் விரும்பும் பல விடயங்களைக் கொண்டிருக்கிறது. கலைக்கேசரி கடந்த ஓராண்டில் கடந்து வந்த பாதையில் தன்னளவில் சாதிக்க முடிந்தவையும் இங்கு சித்திரமாகியுள்ளது என்பதும் விசேஷ அம்சந்தான்!*

*கடந்த ஆண்டு நம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தமிழ் பண்பாட்டை சித்திரிக்கும் விழாக்களும் கொண்டாட்டங்களும் நிறையவே இடம்பெற்றன. எனினும் சோதனைகளுக்கும் குறைவில்லை. யாரோடும் நிம்மதியாக வாழும் சூழ்நிலைக்கான சிந்தனைத் தெளிவு, அன்பு, கருணை, மனிதாபிமானம் மேலும் தோன்ற வேண்டுமெனப் பிரார்த்திப்போம். தமிழறிஞர்கள் எழுத்தாளர்கள் வாசகர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரதும் ஆதரவை வேண்டி விடை பெறுகிறோம்.*

*மீண்டும் சந்திப்போம்!*

*நன்றி வணக்கம்*

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை


**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 7209830
www.kalaikesari.com

**EDITOR**
**Annalaksmy Rajadurai**
luxmi.rajadurai@yahoo.com

**SUB EDITOR**
**Bastiampillai Johnsan**
johnsan50@gmail.com

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Prof. C. Pathmanathan
Prof. S. Sivalingaraja
Prof. Saba Jeyarasa
Mrs. Vasantha Vaithyanathan
Kalaimamani Pon. Theivendran
Mrs. Sharmila Ranjithkumar
Ms. Subashini Pathmanathan
Dr. Viviyan Sathyaseelan
Mrs. Rajashwary Jaganathaguru

**PHOTOS**
S. M. Surendran
J. Sujeewakumar
Umapathy
L. Thev Athiran

**LAYOUT**
K. Kulendran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
A. Praveen
marketing@virakesari.lk

**CIRCULATION**
K. Dilip Kumar

**SUBSCRIPTIONS**
J. K. Nair
subscription@kalaikesari.lk

**PRODUCTION**
L. A. D. Joseph

ISSN 2012 - 6824

# ‘கலைக்கேசரி ஒரு கலைக் களஞ்சியம்’

## 2012-கலைக்கேசரி இதழ்கள் குறித்த ஒரு கண்ணோட்டம்

-அன்புமணி, ஆரையம்பதி.




ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் புதிய தடம் பதித்து சர்வதேச சஞ்சிகையாக உருவான கலைக்கேசரி 2013 இல் நான்காவது ஆண்டில் காலடி வைக்கிறது. இதன் ஆசிரியையான திருமதி அன்னலட்சுமி இராஜதுரையின் நெறிப்படுத்தலில் ஒவ்வொரு இதழும் ஒரு வரலாற்று ஏடாக அமைந்திருப்பது கண்கூடு.

ஈழத்து, வாழ்வியல், வரலாறு, சமூகவியல், தொல்பொருள், கலாசாரம், பாரம்பரியம் மட்டுமல்லாது அண்டை நாடுகளான இந்தியா, கம்போடியா முதலிய நாடுகளின் வரலாற்றுத் தடங்களையும் அது ஆவணப் படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்து வாழ்வியல் மறந்தவையும் மறைந்தவையும் (சிவலிங்கராஜா) தொடர் கட்டுரை யாழ்ப்பாணத்து மக்கள் சமூகத்தை ஆணவப் படுத்தியுள்ளது. அவ்வாறே தொல்லியல் ஆய்வாளர் செல்வி க.தங்கேஸ்வரியின் ஆய்வுக்கட்டுரைகள் நாம் அறியாத பல வரலாற்றுத் தகவல்களை வெளிப்படுத்துகிறது.

அவ்வாறே பேராசிரியர் சி.பத்மநாதனின் வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள், நம்மை ஒரு புது உலகுக்கு அழைத்துச் செல்கிறன. யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற வாழ்வியல் கண்காட்சி தொடர்பாக கலைக்கேசரி வெளியிட்ட சிறப்பு மலர் ஒரு முக்கியமான ஆவணவப்பதிவாகும். பல்வேறு துறைகள், கலைக்கேசரியில் இடம்பெறுகின்றன. பழம் பெரும் கலைஞர்கள் வரலாறு இடம்பெறுகின்றது. உதாரணமாக எம்.கே. தியாகராஜ பாகவதர், என்.எஸ். கிருஷ்ணன், இசைத்துறையில் வீணை சண்முகவடிவு, யூ. ஆர். ஜீவரத்னம், ஜீ. ராமநாதன், வீணை பாலச்சந்தர், ஜிக்கி போன்றவர்களின் வரலாறு இளம் சந்ததியினருக்கு நல்ல நினைவூட்டலாக அமைகிறது. பத்மா சோமகாந்தன், பொன்.தெய்வேந்திரன், பஸ்ரியாம்பிள்ளை ஜோன்சன் முதலியோர் இத்தகைய ஆக்கங்களை தந்துள்ளனர்.

வரலாற்றைப் பொறுத்தவரை, இலங்கையில் உள்ள தொன்மையான ஆலயங்கள் இடம்பெறுகின்றன. இவை விரிவாக ஆராயப்பட வேண்டியவை. அயல்நாட்டு வரலாற்று தொன்மங்களும் மிக விஸ்தாரமாக சொல்லப்பட்டுள்ளன.

நாம் அனைவரும் அறிந்திருக்கும் சிந்து வெளிநாகரீகம் பற்றிய விரிவான தகவல்கள் ஒரு கட்டுரையில் இடம் பெற்றன. மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்னும் தேசங்களை உள்ளடக்கிய சிந்துவெளி நாகரீகம், திராவிட மக்களாகிய நமது தொன்மைக்கு ஆணித்தரமான சான்றாகும். தொன்மைச்சின்னங்கள் பற்றிய பல புகைப் படங்களுடன் இக்கட்டுரை மிக விஸ்தாரமாக எழுதப்பட்டுள்ளது.







இலங்கையில் நமது தொன்மை வரலாற்றை நிறுவும் வகையில் அமைந்துள்ள லங்காதிலக ஆலயம் (ஆகஸ்ட் 2012) லக்கந் குன்று, பொலனறுவை சைவ விஷ்ணு கோயில்கள் (ஒக்டோபர் 2012) கண்டி இராச்சியத்தின் காவலரண், தெவனகல குன்று, பொலனறுவை சிவன் ஆலயம் முதலிய கட்டுரைகள் அபாரமானவை. பொலனறுவையின் பழைய பெயர் ஜனநாத மங்கலம். பேராசிரியர் சி.பத்மநாதன் இக்கட்டுரையை விரிவாக எழுதியுள்ளார்.

பாரம்பரியக் கலைகள், இசை வடிவங்கள், வாத்தியங்கள் பற்றிய கட்டுரைகளும் பல தகவல்களை முன் வைக்கின்றன.

இந்து ஆலயங்களின் பாரம்பரிய வாத்திய இசை வடிவங்கள் (அக்டோபர் 2012) மட்டக்களப்பு பறை மேளக் கலை (ஜூலை 2012) அண்மைக்கால சமூக மாற்றத்தில் பறை மேளக் கலை பெற்றுள்ள தனித்துவம் பற்றி ஷர்மிளா ரஞ்சித்குமார் (சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவனம்) விரிவாக எழுதியுள்ளார்.

கிராமிய கலைகளுக்குப் பெயர் பெற்ற இடம் மட்டக்களப்பு. இங்கு கூத்து, வசந்தன் கூத்து, கொம்புமுறியாட்டம் முதலியவை அருகி வருகின்றன. இவற்றுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் கலைக்கேசரி கட்டுரைகள் அமைந்துள்ளன.

கதிர்காமம் சமாது மடத்துப்பட்டயம் மிக முக்கியமான ஒன்று. இதுவரை அதை யாரும் வாசிக்கவில்லை. தொல்லியல் ஆய்வாளர் செல்வி. க. தங்கேஸ்வரி அதை வாசித்து கலைக்கேசரியின் 5 இதழ்களில் (ஜூன் - ஒக்டோபர் 2012) விரிவான கட்டுரை எழுதியுள்ளார். இது ஓர் முயற்சியாகும்.

ஆதிவாசிகள் பற்றிய சிறந்த கட்டுரைகள் பல அபூர்வமான புகைப்படங்களுடன் கலைக்கேசரியில் வெளிவந்துள்ளன. இவற்றைப் படிக்கும் போது அவர்கள் காலத்துக்கே நாம் சென்று விடுகிறோம். இவற்றுள் அமேசன் காடுகளில் வதியும் யனோமி ஆதிவாசிகள் கட்டுரை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையும் அத்துடன் இணைந்த புகைப்படங்களும் பல செய்திகளை நமக்குச் சொல்கின்றன.

அவ்வாறே நீலகிரி பிரதேசத்தின் தோடர் பற்றிய கட்டுரையும் (டிசம்பர் 2012) அமைந்துள்ளது. தோடர்களின் வாழ்க்கைப் பின்புலம் முதலியவையும் நம்மைக் கவர்கின்றன. அவர் களைச் சுற்றுலாப் பயணிகள் சந்தித்து உரையாடும் காட்சி யதார்த்தமாக உள்ளது. இடையர் குலத்தினரான இத்தோடர் இப்போது விவசாயம் மற்றும் தொழில்களையும் செய்கின்றார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலைக்கேசரியின் மற்றொரு முக்கிய அம்சம் பாரம்பரிய புகழ் பெற்ற தலங்களையும் இடங்களையும் பற்றிய கட்டுரைகளாகும். ஒரு சில வருமாறு:

போர்த்துக்கேயர் கோட்டை (ஜூன் 2012) ரிம்னாபள்ளத் தாக்கு (ஜூன் 2012) கிளிநொச்சி மாவட்ட வரலாறு (ஜூன் 2012) கடலுக்கடியில் கிளியோபட்ரா அரண்மனை (ஜூன்-2012) 2000 ஆண்டு பழைமை வாய்ந்த திருவாரூர் பெரிய கோயில் (ஜூன் 2012), திருச்சி குடைவரைகோயில்கள் (ஜூலை 2012) கிழக்கின் வெனிஸ் எனக் கொள்ளப்படும் அயுத்தயா (ஜூலை 2012) கஜுராஹோ சிற்பக்குகை (ஜூலை 2012) திருக்கோணேஸ்வரம் (ஜூலை 2012) 1000 ஆண்டு பழைமை வாய்ந்த திருக்கேதீஸ்வரம் (ஜூலை 2012) கம்பளை சிவன் கோயில், எம்பெக தேவாலயம் (செப் 2012)

கலைக்கேசரியில் மற்றொரு அம்சம் சித்த வைத்தியம். இது பற்றிப் பல கட்டுரைகள் வெளியாகின்றன. தமிழில் மருத்துவம் (ஜூன் 2012) வரலாற்றில் சித்தமருத்துவம் பல சித்தர்களின் படங்கள் உட்பட (ஜூன் 2012) தமிழர் பண்பாட்டில் சித்த மருத்துவம் (ஜூலை 2012) இவையும் பயனுள்ள கட்டுரைகளே.

யாழ் மகாஜனாக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, பற்றிய கட்டுரைகள் பழங் காலப் புகைப்படங்களுடன் வெளிவந்துள்ளன. அக் கல்லூரிகளின் பழைய வரலாற்றை அறிய ஆனந்தமாக இருக்கிறது. ஈழத்தின் தமிழ் அறிஞர்கள் பற்றிய கட்டுரைகள் அவர்களுடைய இளமைக் கால புகைப் படங்களுடனும் வரலாற்றுத் தகவல்களுடனும் வெளிவந்துள்ளன. சுருங்கக்கூறின் கலைக்கேசரி ஒரு கலைக் களஞ்சியம் எனலாம்.











# தைத்திருநாள் மங்கலம்

- கலாபூஷணம். திருமதி.இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

சித்திரைப் புத்தாண்டு போன்று தை மாதப் பிறப்பும், தமிழ் மக்களிடையே விசேடமாகக் கொள்ளப் படுகின்றது. தை பிறந்ததும் தைமகள் வந்தாள் தைரியம் தந்தாள் என தமிழ் மக்கள் மனங்கள் குதூகலிப்பது வழமை. தை மாதப் பிறப்போடு தைப்பொங்கல், சூரிய பகவானுக்கு உழவுப் பெருமக்கள் தமது நெல் விளைச்சலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தமைக்கு நன்றிக்கடன் செலுத்தும் பூசையாகவும் நிகழ்வாகவும் அமைதல் கண் கூடு.

பொங்கல் அன்று, இல்லத்தின் முன்றலில் பசு சாணத்தினால் மெழுகி, அழகுக் கோலமாக மாக் கோலமிட்டு, வாழை தோரணம் கட்டி, சிறு பந்தல் அமைத்து, புது அடுப்பு, புதுப்பானை புத்தரிசி கொண்டு குடும்பத் தலைவன், தலைவி, குழந்தைகள் அதிகாலை தூய நீராடி, புத்தாடை புனைந்து முன்றலில் பிள்ளையார் பிடித்து, தூய தீபம் ஏற்றி, அடுப்பில் அக்கினி மூட்டி புதுப் பானையில் நீர் நிரப்பி, பசும்பால் ஊற்றி, பொங்க விடுவர். அதனுள் பச்சையரிசி, பயத்தம் பருப்பு, சர்க்கரை, நெய், முந்திரிப்பருப்பு, முந்திரி வத்தல் யாவும் இட்டு சுவையான பொங்கல் பொங்கி, சூரிய பகவானுக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் நிவேதித்து குடும்பத்தாரும் உண்டு களித்து, பெரியோரைத் தரிசித்து, ஆசீர்வாதம் பெற்று 'பால் பொங்கிற்றா' என ஒருவரை விசாரித்து ஏழைகளுக்கும் பொங்கல் வழங்கி தைத் திருநாளைக் கொண்டாடுவது வழமையும் மரபும் ஆகும்.

தைப்பொங்கல் திருநாளோடு, தொடர்புடைய ஏனைய பொங்கல் நிகழ்வுகளும் வைபவங்களும் உண்டு. அவற்றை நோக்கின், போகிப் பண்டிகை, ஆன்மிகப் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல், வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு ஆகியவற்றையும் இங்கு குறிப்பிடலாம்.

தைப்பொங்கலுக்கு முதல் நாள் ஒவ்வொருவரும் தமது இல்லங்களையும் சுற்றுப் புறத்தையும் துப்புரவு செய்வர். இப்பணியை 'போகி' என்றழைப்பர். இதனால், அகமும் புறமும் சுத்தமடைகின்றது. போகி என்பது இந்திரனையும் குறிக்கும். விவசாய முறைப்படி மழையைத் தந்துதவும் மேகங்களுக்கு தலைவனான இந்திரனை வழிபட்டு எடுக்கும் விழாவும், போகிப் பண்டிகை எனப்படும். இது இந்திரவணக்கம் ஆகும்.

இவ் விழா பாரதத்தின் வடக்கே விமரிசையாக கொண்டாடப் பெறுதல் மரபு. இந்திரனை மகிழ்வித்தால் மாரி பொய்க்காது என்பது நம்பிக்கை.





அடுத்து, ஆன்மிகப் பொங்கல். இதன் தத்துவத்தை நோக்கின், எமது உடம்பு ஒரு குடிசை போன்றது. அதனுள் ஆன்மா வாழ்கிறது. அதனுள் இருந்து ஐம்புலன்கள் எம்மை அடக்கி ஆள முயற்சிக்கின்றன.

இவர்களை அடக்க, வெல்ல நாம் அன்றாடம் மதுரச் சோறு ஆக்கி உண்டு வாழ வேண்டும். இது அன்றாடம் நிகழும் ஆன்மிகப் பொங்கல் ஆகும்.அடுப்பில் மூன்று கற்களும், அன்பையும் பொறுமையையும் ஆசையை அறுத் தலையும் குறித்து நிற்கின்றன. எரியும் விறகே ஞானக்கனல் ஆகும்.

கலசம் உயிர், அருள், கருப்பஞ்சாறு இதனால் பெறும் சிவானந்தமே மதுரச்சோறு ஆகும்.

இதுபற்றி சிதம்பர சுவாமிகள் பாடியுள்ளவற்றைப் பாருங்கள்.

*அடியார் நிமலத்திரு அகத்துள் அன்பு, பொறுமை அவா அறுத்தல்*
*அடுப்பு ஆங்கு அமைத்து, மலமகல ஞானக்கனல் மூட்டி*
*மடியாதிருந்த உயிர்கலசம் வழிய, அருள் பேர் உலைவார்த்து*
*மாறாப் பெருமைச் சிவானந்த மதுரச் சோறு வார்த்து தினம்*
*பொங்கி....*

அடுத்து, மாட்டுப் பொங்கல் பற்றி நோக்கின், மாடு என்பது 'செல்வம்' என்றும் பொருள் பெறும். தமிழ்ப் பெருமக்கள் மாடுகளைச் செல்வத்துடன் செல்வமாக போற்றி வந்தமை கண்கூடு. பொங்கலுக்கடுத்த நாள் தமது மாடுகளை நன்றாகத் தேய்த்து, குளிப்பாட்டி, அலங்கரித்து, மாலைசூட்டி, பொட்டிட்டு, மாலையில் மாட்டுக் கொட்டிலில் கட்டி, பொங்கல் செய்து, படைத்து வழிபடுவார்கள். அன்று எருதுகளை வண்டியில் பூட்டி ஆரவாரமாக ஊர்வலம் வருவர். அன்று எருதுகளிடம் வேலை வாங்குவதில்லை. இப்பொங்கலை பட்டிப் பொங்கல் என்றும் அழைப்பர். பசுவை தமிழ்ப் பெரு மக்கள் தெய்வமாக மதித்து கோமாதா என பூசிப்பது கண்கூடு. அடுத்து காணும் பொங்கல். தம்மைப்போல மற்றவர்களும் தரணியில் வாழ்கின்றார்களா என விரும்பியதன் விளைவே காணும் பொங்கலாயிற்று. பொங்கலன்று மாலை, வெளியே போய் தமது உற்றார், உறவினரை தரிசித்து, சுகம் விசாரித்து அத்தோடு சுற்றார், அல்லாதாரையும் கண்டு நலம் விசாரித்து அவர்களுக்கு உதவும் நாளே காணும் பொங்கல் ஆகும்.

அடுத்து கன்னிப்பொங்கல். அன்றைய தினம் கன்னியர் கூட்டமாகக் கூடி கும்மி அடித்து, ஆற்றங்கரையை அடைந்து, அங்கு கூட்டாஞ்சோறு சமைத்து, பொங்கி, ஆற்றுக்குப் படைத்து உண்டு மகிழ்வர். இதனைப் பூப் பொங்கல் என்றழைப்பர்.

ஆற்றுக்கு 'கன்னி' என்றோர் நாமமுண்டு. ஆற்றை அசுத்தப்படுத்தாது அதனை கன்னி அம்மனாக கருத வேண்டும். எம் முன்னோர் அவ்வண்ணம் கருதினர். வான் பொய்த்தால், கைகொடுப்பது

பொங்கல் திருநாளன்று பொங்கிப் படைக்கும்போது, சூரிய பகவானுக்கு, அக்கினிக்கு, இந்திரனுக்கு, கணபதிக்கு, தீபத்திற்கென ஐந்து படையல் படைத்து ஆராதித்தாக வேண்டும்.

மாட்டுப் பொங்கலன்று மாலை முக்கியமாகக் கிராமப் புறங்களில், 'மஞ்சிவிரட்டு' எனும் இளைஞர்கள் காளைகளை அடக்கும் வீர விளையாட்டும் இடம்பெறும். காளையை அடக்கிய வீரத் திருமகனை, கன்னியர் கடிமணம் புரியும் வழக்கமும் தமிழ்ப் பெருமக்களிடையே உண்டு.

இந்த வகையில் தமிழ் மக்கள் பண்டிகைகளுள் தைத்திரு நாள், தைப்பொங்கல் மிகவும் தொன்மை வாய்ந்ததும், நன்றி மறவாமை பண்பை சித்திரிக்கும் நல்லதோர் விழாவுமாகும். தைப்பொங்கல் விழா உழவுப்பெரு மக்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது என்றால் மிகையாகாது.

*அலகிலா மறைவிளங்கும் அந்தணர் ஆகுதி விளங்கும்*
*பல்கலையாம் தொகை விளங்கும் பாவலர் தம் பாவிளங்கும்*
*மலர் குலாந்திருவிளங்கும், மழைவிளங்கும் மனு விளங்கும்*
*உலகெலாம் ஒளி விளங்கும் உழவர் உழும் உழவாலே*



# யாழ்ப்பாணப் பண்பாடு - மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா


(சென்ற இதழ் தொடர்ச்சி)

பேச்சுத் திருமணங்களிலே சாதகப் பொருத்தம் பார்க்கும் வழக்கமும் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. பொருத்தம் பார்ப்பதானாலும் அதற்குப் பெருமளவு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. இன்று திருமணத் தரகர்களால் வலியுறுத்தப்படும் 'பாவக்கிரகம்' பற்றிய பேச்சு ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன் இருந்ததாகத் தெரியவில்லை. சிற்சில இடங்களிலே 'செவ்வாய் தோஷம்' பற்றிய கருத்து நிலவிய போதும் அதற்குப் பரிகாரமும் இருந்தது. தனது குல தெய்வங்களுக்கு முன்னாலே பூ கட்டி வைத்துத் தனது முடிவை எடுக்கும் வழக்கமும் இருந்தது. பெரும்பாலும் இரு வீட்டாரும் இணைந்தே பூக்கட்டி வைத்துப் பார்ப்பது மரபு. பூ கட்டி வரும் முடிவைத் தெய்வத்தின் தீர்ப்பாக ஏற்றுக் கொள்ளுவர்.

சாதகம் பார்க்காது மூத்தோரால் தீர்மானித்த பேச்சுத் திருமணங்களிலே 'பெண் பார்க்கும்' வழக்கமும் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆண், பெண் இருவரும் ஒருவரைஒருவர் ஏற்கனவே அறிந்திருக்கும் சந்தர்ப்பங்கள் இயல்பாகவே இருந்தன. (தோட்டம், தண்ணீர் எடுக்கச் செல்லும் இடம், நீராடச் செல்லும் இடம், திருவிழாக்கள், சடங்குகள் முதலியன) ஒருவரோடொருவர் பழகி இராவிட்டாலும் பார்த்திருக்கும் வாய்ப்புக்கள் இருந்தன.

பேச்சுத் திருமணங்களிலும் இரண்டு பிரதான போக்குகள் இருந்தன. மூத்தவர்கள் திருமணத்தைப் பேசி முடிவு செய்ததும் 'சோறு கொடுப்பித்தல்' என்ற சடங்கு நடைபெறும். இந்தச் சடங்கே திருமணச் சடங்காகக் கருதப்படும். சோறு கொடுப்பித்தல் நடைமுறை மிகவும் சுவாரஸ்யமானது. சோறு கொடுப்பித்தல் நடைமுறையிலே குடும்பத்து மூத்தவர்களே பிரதானமானவர்களாகக் கருதப்படுவர். சோறு கொடுப்பிப்பதற்கு முன் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று உண்டு உறவாடி, மாப்பிள்ளையைக் குளிப்பாட்டிப் புது வேட்டி, சேட் அணிவித்துப் பெண் வீட்டுக்கு அழைத்து வருவர். இந்த இடத்திலேதான் 'தோழன்' என அழைக்கப்படும் மைத்துனனின் வகிபாகம் முதன்மைப்படுவது உண்டு.

பெண்ணைக் குளிப்பாட்டி (அலங்கரித்து) ஏற்கனவே கொடுக்கப்பட்ட புதுச் சேலை கட்டுவித்துத் தயாராக வைத்திருப்பர். மணமகன் பெண் வீட்டுக்கு வந்ததும் இரு வீட்டாரும் விருந்து உண்ணுவர். மணமகனுக்கு மணமகள் தனியாக உணவு பரிமாறுவார். மணமகனின் தாய், மாமி முதலியோர் சுவையான உணவு தயாரித்து வைத்திருப்பர். இவ்வாறு வைக்கப்பட்ட உணவைப் 'பூதாக்கலம்' என்று அழைப்பர். பிராமணிய நிலைப்பட்ட திருமணச் சடங்குகளிலும் பூதாக்கலம் என்ற நடை முறையுண்டு.



பூதாக்கலம் மணமக்களுக்கு என்றே தனியாகச் செய்யப்படுவது. சுமங்கலிப் பெண் (வாழ்வாடிச்சி) முதற் பிள்ளையாக (தலைப்பிள்ளை) ஆண் மகவைப் பெற்றவளே பெரும்பாலும் பூதாக்கலத்துக்கான உலையை வைப்பாள்.

மணமகள் மணமகனுக்கு உணவு பரிமாறிய பின் இருவரும் பள்ளியறையில் ஒன்றாகத் தங்குவர். இத்துடன் திருமண நிகழ்வு நிறைவு பெற்று விடும். அடுத்த அடுத்த நாட்கள் உறவினர்கள் பொம்பிளை மாப்பிள்ளையைப் பார்க்க வருவார்கள். (பகலிலே) நான்கு நாட்களுக்கு பின்னர் வசதியான ஒரு நாளிலே கோயில்களுக்குப் போவார்கள். பின் உறவினர் வீடுகளுக்குச் செல்வார்கள். பெரும்பாலும் விருந்துக் கொண்டாட்டங்கள் கிட்டத்தட்ட ஒரு மாத காலம் வரை நடைபெறும். அன்றைய யாழ்ப்பாணச் சமூகத்திலே மிக எளிமையாக அழகாக நடைபெற்ற திருமண நிகழ்வாகச் சோறு கொடுத்தல் (சோறு கொடுப்பித்தல்) நிகழ்வைக் குறிப்பிடலாம்.

சோறு கொடுப்பித்தல் நிகழ்வுக்குச் சற்று வேறுபட்ட விதத்திலே நடைபெற்ற திருமண நடைமுறைகளும் உண்டு. பிள்ளையார் பூசை வைத்து பிராமணரல்லாத ஊர் அல்லது உறவுப் பெரியவர் ஒருவர் குடும்ப நட்பு உறவினர் சூழ மணமக்களை ஆசிர்வதித்துத் தாலியை எடுத்து மணமகனின் கையிலே கொடுத்துப் பெண்ணின் கழுத்திலே கட்டுவிப்பார். இவ்வளவோடு பூதாக்காலம் உண்ணல் நடைபெறும். திருமணம் நிறைவேறி விடும்.

இந்த இரண்டு வகைத் திருமணங்களிலும் உடனடியாகப் பதிவுத் திருமணம் செய்வதில்லை. பின்னர் பல்வேறு தேவைகளை ஒட்டி வசதியான நேரத்திலே திருமணப்

பதிவுகளைச் செய்து கொள்வார்கள். திருமணம் நடைபெற்றுப் பத்து, இருபது வருடங்களுக்கு பின்னர் பதிவுத் திருமணம் செய்தவர்களும் இருந்தார்கள்.

பேச்சுத் திருமணங்களிலே மிகப் பிரதானமானதாகக் கருதப்படுவது பிராமணிய நிலைப்பட்ட ஓமம் வளர்த்துத் தாலி கட்டும் சடங்கே ஆகும். இச்சடங்கு நடைமுறைகளிலும் இடத்திற்கு இடம், சமூகத்திற்கு சமூகம் சிற்சில வேறுபாடுகள் இருந்தபோதிலும் பெரும்பாலான நடைமுறைகள் பொதுத் தன்மையுடையனவாகவே காணப்படுகின்றன. பிராமணிய திருமணச் சடங்குகளைப் பார்க்கும் பொழுது பாரதி குறிப்பட்ட ''சகுனமந்திரத் தாலி மணியெலாம் யாத்தெனைக் கொலை செய்தனர் அல்லது யாதுதர்ம நெறியெனக் காட்டிலர்'' பாடலடியே நினைவுக்கு வரும்.

இற்றைக்கு அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே நிலவியதிருமண ஒழுங்கு பற்றிய ஒரு செய்தியையும் இந்த இடத்திலே நினைவு கூருவது நன்று. குழந்தைகள் பிறந்த சில நாட்களுக்குள்ளேயே (மைத்துனன், மைத்துனி உறவு) பெரியவர்கள் காலம் வரும்போது இவர்கள் திருமணம் செய்ய வெண்டுமென்று எழுதாத ஒப்பந்தம் செய்வர். இதனைச் 'சாணைக்கூறை போடுதல்' என்ற பெயரால் அழைத்தனர். சாணைக்கூறை போடப்பட்ட எல்லோரும் பின்னர் திருமணம் செய்வதென்ற நியதியிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் சாணைக்கூறை போட்டவர்களுக்கு இடையே திருமணம் நடைபெறாவிட்டால் முரண்பாடுகள் தோன்றிக் குடும்பப் பிரச்சினைகளும் எழுவதுண்டு. இன்று இந்த வழக்காறு முற்றாக மறைந்து விட்டது. பேச்சுத் திருமணங்களிலே குடும்ப வசதிக்கேற்ப (பிராமணியநிலைப்பட்ட) திருமணச் சடங்குகள் மிகவும் ஆடம்பரமாக நிகழ்வதுண்டு. இன்றைய ஆடம்பரங்களுக்கும் அன்றைய (50, 60 வருடங்களுக்கு முந்திய) ஆடம்பரங்களுக்குமிடையே வேறுபாடுகள் பல இருந்தன.

திருமணம் பேசி நிச்சயக்கப்பட்டதும் இரு வீட்டாரும் கலந்து ஆலோசித்துத் திருமணச் சடங்கு பற்றிய ஒழுங்குகளை மேற்கொள்வர்.

(தொடரும்)

**GET கலைக்கேசரி KALAIKESARI DELIVERED TO YOUR HOME**

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700
For more details, please contact : Overseas & Local Subscriptions **M.Mohan** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

**Online Payment : www.kalaikesari.com / Subscription**

**ORDER FORM :**

கலைக்கேசரி KALAIKESARI
www.kalaikesari.com

**Manager Subscriptions**
**Kalaikesari**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**

**Tel : +94-11-7322783 / +94-11-7767700**
**Fax :+94-11-7767700**
**E-mail : subscription@kalaikesari.lk**

Cheque should be drawin in favour of
**Express Newspapers (Ceylon) (Pvt) Limited**

FOLD HERE

| | |
|---|---|
| Title | : Mr. ☐ Mrs./ Miss ☐ Dr. ☐ Prof. ☐ |
| First Name | :.................................................. |
| Last Name | :.................................................. |
| Institution | :.................................................. |
| Apartment/Other Nos | :.................................................. |
| Street / Road | :.................................................. |
| Town/City/State | :.................................................. |
| Country | :.................................................. |
| Amount Enclosed | : ..........................................(12 / 6 Issues) |
| Mode of payment | : ☐ Cheque / ☐ Money Order |
| Online Payment | : www.kalaikesari.com / Subscription |



# இத்தாலியின் பழம்பெரும் மொடேனா நகரம்

இத்தாலியப் பழம்பெரும் நகரங்களுள் ஒன்று மொடேனா நகரம் (Modena). இத்தாலியின் எமிலியா ரோமக்னா பிராந்தியத்தில் உள்ள மொடேனா மாகாணத்தில், போ பள்ளத்தாக்கின் (Po valley) தென் பகுதியில் அமைந்துள்ள நகரம் இதுவாகும்.

பண்டைய இந்நகரம் மேற்றி ராணியார் ஒருவரின் ஆசனமாக இருந்தது. ஆனால் தற்போது இது 'பொறியியலாளரின் தலைநகரம்' எனப் பெயர் பெற்றிருக்கிறது. அதற்குக் காரணம் இத்தாலியின் பெயர் பெற்ற மோட்டார் வாகன உற்பத்தியாளர்களான பெரரி, டி ரொமாஸோ, லம்போர்கினி, பகானி, மஸேரரி ஆகியோரின் தொழிற்சாலைகள் இங்குதான் அமைந்துள்ளன. பெரரியின் தயாரிப்பிலான ஒரு கார் கூட '360 மொடேனா' என இந்நகரின் பெயரில் அழைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.



1175ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மொடேனா பல்கலைக்கழகம், 1686ஆம் ஆண்டில் 2ஆம் பிரான் செஸ்கோ டி எஸ்தேயினால் விஸ்தரிக்கப்பட்டது. இங்கு பொருளாதாரம், வைத்தியம், சட்டம் ஆகியன கற்பிக்கப்படுகின்றன. இத்தாலியின் இப்பல்கலைக்கழகம் இரண்டாவது மிகப் பழைய பல்கலைக்கழகமாக விளங்குகிறது. உலகில் பழைமையான பல்கலைக் கழகங்களில் இந்நிறுவனம் ஆறாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. மொடேனாவில் உள்ள இத்தாலிய இராணுவ அக்கடமியில் இத்தாலிய ராணுவ அதிகாரிகள் பயிற்றப்படுகின்றார்கள். பிபிலியோரெக்கா எஸ்ரென்ஸ் (Bibliotheca Estense) என்னும் நிறுவனத்தில் வரலாற்று ஆவணங்களும் 3000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் இந்நகரம் இரு தடவைகள் கைப்பற்றப்பட்டபோதும், கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை மிக முக்கியமான நகரம் என்ற இடத்தையே பிடித்திருந்தது. இருப்பினும் 7ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பெருவெள்ளம் இந்நகரத்தை அழித்ததுடன் அது கைவிடப்பட்டது.

2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், இத்தாலிய புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் பண்டைய ரோம இராச்சியத்தில் பாவிக்கப்பட்ட எரிபொருள் எண்ணெய் விளக்குகளைத் தயாரித்த மட்பாண்ட நிலையத்தைக் கண்டு பிடித்தார்கள். இது மத்திய வடக்கு இத்தாலியில் உள்ள மொடேனாவிலாகும். நகரின் பண்டைய சுவருக்குப் பக்கத்தில் வதிவிட வீட்டுத் தொகுதியை அமைப்பதற்காக நிலத்தைத் தோண்டிய போது, இது கண்டுபிடிக்கப்பட்டது. மட்பாண்டத் துண்டுகளால் நிரப்பப்பெற்ற பண்டைய ரோமன் புதையலைக் கண்டோம். இங்கு மலர்ச்சாடிகள், போத்தல்கள், செங்கட்டிகள் ஆகியன மட்டுமன்றி, நூற்றுக் கணக்கான எண்ணெய் விளக்குகளையும் கண்டு பிடித்தோம். அவற்றில் தயாரிப்பாளர்களின் பெயர்கள் இருந்தன என புதை பொருள் ஆய்வாளர் டொனேடோ லபேற் (Donato Labate) கூறினார்.




9ஆம் நூற்றாண்டின் இறுதியில் மொடேனா அதன் மேற்றிராணி லுடோவிகஸ் என்பவரால் மீட்கப்பட்டது. மீண்டும் அதனைச் சுற்றி அரண் அமைக்கப்பட்டது. கிட்டத்தட்ட இக்காலத்தில் தான் மொடேனாவின் காவல்காரன் பாடல் ஆக்கப்பெற்றது. பின்னர் இந்நகரம் டஸ்கனியின் தலைவி மற்றில்டாவின் கைகளில் இருந்து, 12ஆம் நூற்றாண்டில் இருந்து சுதந்திர கம்யூனானது. (நகரசபை) மன்னன் 2ஆம் பிறெடெரிக்கிற்கும் பாப்பாண்டவர் 9ஆம் கிறெகொரிக்கும் இடையில் நடந்த போர்களில் மொடேனா மன்னனை ஆதரித்து நின்றது.

1288ஆம் ஆண்டில் இருந்து மெடோனாவின் தலைவர்களாக எஸ்தே (Este) குடும்பம் இனங்காணப்பட்டது.


1336ஆம் ஆண்டளவில் அதிகாரத்தில் எஸ்தே குடும்பம் இருந்தது. போர்ஸோ டி எஸ்தேயின் கீழ் நகரம் டச்சுப் பிரதேசமாக ஆக்கப்பெற்றது.

எனினும் இந்நகரம் அந்நியரின் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகி அழிவுகளைச் சந்தித்தே வந்தது.


1848ஆம் ஆண்டு ஏற்பட்ட ஐரோப்பிய புரட்சிகளின் போது, அப்போது ஆட்சியில் இருந்த 5ஆம் பிரான்ஸிஸ் அரசன் மெடோனா நகரை விட்டு வெளியேற்றப்பட்டான். ஆயினும் மக்களின் வரவேற்புக்கு மத்தியில் ஆஸ்திரிய துருப்புகளினால், அவன் மீள ஆட்சிக்கு கொண்டு வரப்பட்டான். பத்து வருடங்களுக்குப் பின் புரட்சியாளர்கள் மீண்டும் நகரை ஆக்கிரமித்ததையடுத்து (1889 ஆகஸ்ட் 20) மொடேனா இத்தாலியின் சவோயார்ட் தேசத்துடன் இணைக்கப்பட்டு இத்தாலி அரசின் ஒரு பகுதியானது.


















இங்குள்ள பிரதான சுற்றுலாப் பகுதிகளில் மொடேனா தேவாலயமும் அதனோடிணைந்த கட்டிடப்பகுதிகளும் குறிப்பிடத்தக்கவை. அவை யுனெஸ்கோ உலக பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களாகும்.

டஸ்கனியின் தலைவி மற்றில்டாவின் பணிப்பின் பேரில் கட்ட ஆரம்பிக்கப்பட்ட இத் தேவாலயத்துக்கான முதலாவது கல் 1099ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6ஆம் திகதி வைக்கப்பட்டது. 1184ஆம் ஆண்டு இத்தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது. கி.பி. ஆயிரமாம் ஆண்டளவில் சதுப்பு நிலம் பயன்படுத்தப்பட்டு, நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அரண்கள் கட்டப்பட்டன. மீண்டும் வர்த்தகமும் கலையும் புத்துயிர் பெற்றன. இக்காலகட்டத்தில் இருந்து ரோமானிய கட்டிடக் கலைக்குச் சிறந்த உதாரணங்களாக விளங்கக்கூடிய கட்டிடங்கள் மாகாணத்தில் கட்டப்பட்டன.

1099ஆம் ஆண்டு, நகரத்தின் போஷகர் சுவாமியும், பாதுகாவலருமான சன் ஜெமினியானோவுக்குச் சமர்ப்பணமாக தேவாலயம் (அல்லது டுமோ) கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டிடம் ஐரோப்பாவில் மிகச் சிறந்த சோமானியக் கலை நுட்பம் நிறைந்த ஒன்றாகக் கருதப்படுவதுடன் யுனெஸ்கோ மரபுரிமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனோடு, பியாஸ்ஸ கிரன்டேயும் (Pizza Graude) கிர்லன்ட்டினா கோபுரமும் இப்பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

இக்கட்டிடக்கலைத் திட்டம் மற்றும் மேற்பார்வை லன்பிரன்கோ என்னும் கட்டிடக்கலை விற்பன்னரிடம் கையளிக்கப்பட்டது. அலங்கார வேலையில் முதலில் அவருக்கு விலிகெல்மோ என்பவரும், பின்னர் கம்பியனீஸ் மாஸ்டர்களும் உதவியாளராக இருந்தனர்.

தேவாலயத்தின் அற்புதமான பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட முன்பக்கம் 'ஜெனெஸிஸ்' (Genusis) என்ற புத்தகத்தில் சித்திரிக்கப்பட்ட காட்சிகளை வைத்து முனைப்போவியங்களால் அலங்கரிக்கப்பட்டன.

'பொன்ரிவிசியா' எனப்படும் மத்திய வாயிலையும் ரோமர் காலத்தைய வகையான இரு சிங்கங்கள் தாங்கி நிற்கும் முன் கூடத்தையும் விலிஜெல்மோ உருவாக்கினார். 1167ஆம் ஆண்டு இவர்களிடம் சேவை செய்த சிறந்த சிற்பக்கலைஞர்களான அன்செல்மோ டா கம்பியன் வழி வந்த சிறந்த சிற்பக்கலைஞர்கள் 13ஆம் நூற்றாண்டில் அதி அற்புதமான இளஞ்சிவப்பு ஜன்னல்களைக் கட்டினார்கள். தேவாலயத்தின் உள்ளே சன் ஜெமினியானோவின் பூதவுடல் வைக்கப்பட்ட நிலவறையின் மேல், மிக அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. 1184 ஆம் ஆண்டு போப்பாண்டவர் 3ஆம் லூசியஸ் அவர்களால் தேவாலயம் திருநிலைப் படுத்தப்பட்டது.

அதற்கருகிலே 88 மீட்டர் உயரத்துடன் கட்டப்பட்டுள்ள கேர்லன்டினா (Ghirlandina) கோபுரம் மொடேனா நகரின் சின்னமாக ஆகவுள்ளது. இதுவும் லன்பிரான்கோவினால்

வடிவமைக்கப்பட்டு, கம்பினீஸ் நிபுணர்களால் கட்டி முடிக்கப்பட்டது. இங்கு இரண்டு வகையான கட்டிடக் கலைகள் சங்கமித்துள்ளன. தேவாலயத்தின் சதுரமான அடித்தளம் ரோமானிய கட்டிடக் கலையைச் சார்ந்ததாகவும் மேல் எண்கோணப்பகுதியும், பிரமிட்டின் மேற்பகுதியும் கோதிக் கட்டிடக்கலை அமைப்பிலும் உள்ளன.

ரோமானிய கட்டிடக் கலைக்கு மற்றுமொரு அதிசிறந்த உதாரணமாக விளங்குவது அபாசியா டி சான் சில்வஸ்ற்றோ என்ற மாளிகை. மொடேனாவுக்கு 10 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளது. 752ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கட்டிடம் சில தடவைகள் அழிக்கப் பட்டு மீண்டும் கட்டப்பட்டதாகும். 1117ஆம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து கடைசியாக மீளக் கட்டப்படத் தொடங்கி 1914ஆம் ஆண்டுக்கும் 1917ஆம் ஆண்டுக்குமிடையில் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, புதுப்பிக்கப்பட்டது.

மொடேனாவின் டுகல் மாளிகை அடுத்து குறிப்பிடத் தக்க மகத்தான அமைப்பாகும். 1634ஆம் ஆண்டு 1ஆம் பிரான்செஸ்கோ ஐ எஸ்தே அரசனால் கட்ட ஆரம்பிக்கப் பட்டு, 5ஆம் பிரான்சிஸ் அரசனால் கட்டிமுடிக்கப்பட்டது. இம்மாபெரும் மாளிகை, 17ஆம் நூற்றாண்டில் இருந்து 19ஆம் நூற்றாண்டு வரை, எஸ்தே அரசர்களின் அரசபீடமாக விளங்கியது. இந்த மாளிகை முற்காலத்தில் நகரின் முக்கிய இடத்தில் இருந்த முன்னாள் எஸ்தே மாளிகையின் பகுதியை தன்னில் அடக்கியுள்ளது.

இம்மாளிகையில் தற்போது, மொடேனா இராணுவ பயிற்சி நிலையம், இராணுவ அருங்காட்சியகம், மற்றும் பொக்கிஷமான ஒரு நூலகமும் உள்ளன.

யுனெஸ்கோ உலக மரபுரிமை இடமான பியஸ்ஸா கிரண்டிக்கு (Piazza Grande) எதிர்ப்புறமாக உள்ளது மொடேனாவின் நகரமண்டபமாகும். 1046ஆம் ஆண்டிலிருந்து, மாநகர காரியாலயங்களாகக் கட்டப்பட்ட முன்னைய சில கட்டிடப் பகுதிகளில் இருந்து 17- 18ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டது இந்நகரமாகும். கடைசி எஸ்தே ஆட்சியாளர்களின் பிற்போக்கு கொள்கைகளினால் உள்ளூரில் கஸ்டங்கள் ஏற்பட்டதையடுத்து, மொடேனாவின் பிரதிநிதிகள் 1859 ஆம் ஆண்டு மொடே னாவை இத்தாலிய அரசின் ஒரு பகுதியாக பிரகடனம் செய்தனர். நவீன மொடேனா நகரம் குடியிருப்பு மனைக ளோடு, கைத்தொழில் பகுதிகளையும் கொண்டிருக்கிறது. இவை நகர சுவர்களில் இருந்து அப்பாலும் விஸ்தரிக்கப் பட்டுச் செல்கிறது.மோட்டார் வாகன உற்பத்தி மிக முக்கியமானதாகும். அத்துடன் அங்கு கனிம வேலைகள், இரும்பு உருக்குதல் , யந்திரக் கைத்தொழில்கள் மிகப் பெரும் அளவில் காணப்படுகின்றன. அத்துடன் ஒரு விவசாய நகரமாகவும் விளங்கும் மொடேனாவில் கால் நடைச் சந்தைகள், தோல் வேலைத் தொழிற்சாலைகள் போன்றனவும் மிகப்பெரும் அளவில் உள்ளன.

- கங்கா





# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**டானியல் பூவரும், அவரது பின்னணியும்**

அமெரிக்காவில் உள்ள மசாசூசெட்ஸ் என்னும் மாநிலத்தில் வாழ்கின்றவர்களில் பலர், பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்து சென்று குடியேறிய தூய்மைவாதிகளின் சந்ததியாவார்கள். தூய்மைவாதிகள் என்று அழைக்கப்படும் தீவிர புரட்டஸ்தாந்துவாதிகள் தமது இலட்சியங்களுக்கு ஏற்ப ஒரு நாட்டை அமைக்கும் நோக்குடன் அமெரிக்கா சென்றவர்கள். இம் மாநிலத்து மக்கள் சமயப் பக்தியிலும், அறிவாற்றலிலும் சிறந்து விளங்கியதுடன், எழுத்துச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் முதலியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். 18ஆம் நூற்றாண்டில் உருவான பக்தி இயக்கம் ஒன்றின்பால் பல்கலைக்கழகக் கல்லூரிகளின் மாணவர்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். அதிலும் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் அமைந்திருந்த வில்லியம்ஸ் கல்லூரி மாணவர்கள் மத்தியில் பக்தியுணர்வு அதிகமாகக் காணப்பட்டது.

அக்கல்லூரியைச் சேர்ந்த ஐந்து மாணவர்களின் ஊக்கமான உழைப்பால் 1810ஆம் ஆண்டு மிஷன் சங்கம் ஒன்று உருவானது. அவர்களின் அரிய முயற்சியால் உருவாக்கப்பட்ட அமெரிக்கன் மிஷனரிச் சங்கம் A.B.C.F.M. என்றழைக்கப்பட்டது. 'பிறநாடுகளுக்கு மிஷனரிமாரை அனுப்பும் அமெரிக்க ஆணையாளர் குழு' என்பது அதன் பொருளாகும். 1812ஆம் ஆண்டு அம்மிஷனரியைச் சேர்ந்த மதத் தொண்டர்கள் ஆசியாவில் பணியாற்றும் பொருட்டு அனுப்பப்பட்டார்கள். அவ்விதமான சமய மாற்றங்கள் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கல்லூரி மாணவனாக இருந்தவர் டானியல் பூவர் (Danial Poor) என்பவர். அவருடைய அன்னை அவருக்குச் சிறுவயதில் இருந்தே பக்தியையும், வேதாகம அறிவையும் ஊட்டி வந்தார்.

டானியல் பூவர் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் அமைந்திருந்த டாற்மவுத் கல்லூரியில் (DARTMOUTH) கல்வி கற்று, 1811ஆம் ஆண்டு எம்.ஏ. பட்டதாரியானார். கணிதம், வான சாஸ்திரம், பௌதீகவியல் என்பன அவர் கற்ற பாடங்களாகும்.

பட்டதாரியான பின்னர் அண்டோவர் நியூட்டன் (ANDOVER NEWTON) கல்லூரியில் இணைந்து இறையியல் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு, குருத்துவ பணியில் ஈடுபடுவதற்கு அவர் தயாரானார்.

அம் மாநிலத்தில் அமைந்திருந்த கொங்கிறிகேஷனல் திருச் சபையில் மதகுருவாக அபிஷேகம் பெற்ற இவர், இளமைக் காலத்தில் இருந்தே பிற நாடுகளுக்குச் சென்று மதப் பணியாற்ற விரும்பியவர். ஆகவே பிற நாடுகளில் நற்செய்திப் பணியாற்றும் பொருட்டு மதத் தொண்டராக U.C.B.W.M என்னும் மிஷனரிச் சங்கத்தில் தன்னை ஒப்புக் கொடுத்தார். 25.06.1815 இல் நியூ பெறி போட் என்ற இடத்தில் டானியல் பூவர் கொங்கிறிகேஷனலிஸ்ற் திருச்சபையின் ஒரு மத குருவாக அபிஷேகம் பெற்றார்.



**டானியல் பூவரின் யாழ்ப்பாண வருகை**

அமெரிக்காவில் இருந்த மிஷனரிச் சங்கம் தனது இரண்டாவது மிஷனரிமார் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப முடிவு செய்ததன் பொருட்டு, 1815ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 திகதி ட்றியட் (DRYAD) என்னும் பாய்மரக் கப்பலில் ஒன்பது மிஷனரித் தொண்டர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களில் டானியல் பூவரும், அவருடைய மனைவியும் அடங்குகின்றனர். சரியாக ஐந்து மாதங்களின் பின்னர் 1816 ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி அக்குழுவினர் கொழும்புக்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர்களில் வண. வாரன் என்பவர் முதலில் துணிச்சலுடன் குதிரை மூலம் யாழ்ப்பாணம் சென்றார். டானியல் பூவரும், அவருடைய மனைவி சூசனும் 1816ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி வில்கின்ஸ் என்னும் ஆங்கிலேய வர்த்தகருடன் கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்குப் பயணப் பட்டார்கள். யாழ்ப்பாணம் சென்ற அனைத்து மிஷனரிமாரும் முதலில் வண. வாரன் யாழ்ப்பாணத்தில் வாடகைக்குப் பெற்ற வீட்டிலேயே தங்கினார்கள். சிறிது காலம் அங்கு தங்கிய பின்னர் வட்டுக்கோட்டைக்கும், தெல்லிப்பழைக்கும் செல்வது என மிஷனரிமார் முடிவு செய்தார்கள்.

இதன் பிரகாரம் பூவர் தம்பதியர் மற்றும் வண. வாரன் ஆகியோர் தெல்லிப்பழை செல்வது என முடிவாயிற்று. தெல்லிப்பழையில் இருந்த டச்சுத் தேவாலயத்தையும், குருமனையையும் திருத்திச் செப்பனிட்ட பூவர், 1816 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் திகதி அங்கு குடி புகுந்தார். தொடர்ந்து வந்த காலப் பகுதியில் தெல்லிப்பழையில் பணியாற்றிய வண. வாரன் மற்றும் வட்டுக்கோட்டையில் பணியாற்றிய றிச்சேட்ஸ் ஆகியோரின் மறைவு டானியல் பூவரைத் தாக்கினாலும், சமயப் பணிகளிலும், கல்விப் பணிகளிலும் மனம் தளராது ஈடுபட்டார்.

**தெல்லிப்பழையில் கல்விப்பணி**

டானியல் பூவர் மிகவும் ஒளி பொருந்திய சமுதாயமான மசாசூசெட்ஸ் மாநிலத்தில் இருந்து வந்தவர். அமெரிக்காவில் புகழ் பெற்ற பல்கலைக்கழகக் கல்லூரியில் கல்வி கற்ற டானியல் பூவர், கல்வியை மற்றவர்களுக்கு வழங்குவதில் அதிக ஈடுபாடு காட்டினார். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு வாசிக்கும் சமுதாயம் ஒன்றை உருவாக்கும் தேவையை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். ஆகவே வாசிப்பதன் மூலம் சிந்திக்கத் தூண்டி அதன் மூலம் மத மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என அவர் உறுதியாக நம்பினார். இதன் பொருட்டு யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பள்ளிக் கூடங்களை அமைக்கத் தொடங்கினார்.

1816ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தெல்லிப்பழையில் தமிழ்ப் பள்ளி ஒன்றை நிறுவினார். அப்பள்ளியின் பொறுப்பாசிரியராக டானியர் பூவரே செயற்பட்டார். ஒரு சிறிய விதை விருட்சமாவதற்கான முதல் முயற்சி



போர்த்துக்கேயர் காலத்து தேவாலயம்

அவ்வேளையில் மேற்கொள்ளப்பட்டது. இதுவே ஆயிரம் ஆயிரம் மாணவர்களுக்கு அறிவூட்டி பெரு விருட்சமாக விளங்கும் யூனியன் கல்லூரிக்கு வித்தாக அமைந்தது. இலங்கை வந்த அமெரிக்கன் மிஷனரிமாரின் பிரதானமான நோக்கம் மத மாற்றம் ஆகும். அதன் பொருட்டு 1818 ஆம் ஆண்டு குடும்ப விடுதிப் பாடசாலை (Family Boarding School) ஆறு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் மாணவனான சாமுவேல் லொசெஸ்ரர் 1828ஆம் ஆண்டு தனது கல்வியை நிறைவு செய்து, பாடசாலையின் முதலாவது சுதேச கிறிஸ்தவ ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

மேலும் 1818ஆம் ஆண்டில் இப் பாடசாலையில் கல்வி கற்பதற்காக இணைந்த 05 பெண் பிள்ளைகளில் மிராண்டா செல்லாத்தை என்னும் சிறுபான்மை குலத்தைச்சேர்ந்த மாணவியும் ஒருவர். யாழ்ப்பாணத்தில் ஆதிக்கத்தில் இருந்த சாதி வேறுபாடு அக்காலத்தில் அப் பாடசாலையில் இருப்பதை மிஷனரிமார் ஆதரிக்க வில்லை. 1816ஆம் ஆண்டு தொடக்கம் 1823ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய வண. பூவர், 1823ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை செமினரி (இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரி) நிறுவப்பட்டபோது அதன் அதிபராகப் பொறுப்பேற்றுச் சென்றார். அதன் பின்னர் பாடசாலைக்கு அதிபராக வண. ஹென்றி வூட் வேட் (Rev. Henry Wood Ward) பொறுப்பேற்றார்.

ஆனால் அதேகாலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பல மிஷனரிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதால் தெல்லிப்பழையின் கல்வி ஒளி மங்கத் தொடங்கியது. இந்நிலைமையில் 1855ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்த அண்டர்சன் - தொம்சன் குழு, மத மாற்ற முயற்சிகளுக்கு ஆங்கில மூலமான கல்வி பெருந்தடையாக இருந்தது என இனங்கண்டு, அங்கு ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகளை மூடுமாறு சிபார்சு செய்தது. அக்குழுவின் அறிக்கையால் 40 ஆண்டுகள் கல்விச் சேவையாற்றிய தெல்லிப்பழை வளாகத்தின் கல்விப் பணிகள் நிறுத்தப்பட்டன.

இதேவேளை 1859ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் ஆசிரியர் பயிற்சி இறையியற் கல்வி நிறுவனம் (Training & Theological Instituion) ஆரம்பிக்கப்பட்டது.

1872ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமையால் அந்நிறுவனம் வண. ஹோலண்ட் (Rev.W.W.Holand) தலைமையில் தெல்லிப் பழை வளாகத்துக்கு மாற்றப்பட்டது. இதன் மூலம் தெல்லியூரில் கல்விப் பயிர் மீளத் துளிர்க்க ஆரம்பித்தது. தெல்லிப்பழையின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய மும்மூர்த்திகளில் ஒருவரான வண. சிமித் (Rev. T. S. Smith) 1878ஆம் ஆண்டு தெல்லிப்பழைக்கு வருகை தந்ததன் மூலம் தெல்லியூரில் சூழ்ந்திருந்த இருள் நீங்கி, ஞான ஒளிச் சுடர் பரவ ஆரம்பித்தது. அவர் அதே ஆண்டு தொழிற்பாடசாலை ஒன்றை நிறுவியதுடன், ஆசிரியர்

பயிற்சிப் பாடசாலையில் சீர்திருத்தங்கள் பலவற்றையும் மேற்கொண்டார். தெல்லிப்பழை வளாகத்தில் இருந்த பல கல்வி நிறுவனங்களை ஒன்றிணைத்து, ஆரம்ப, இடை நிலை, உயர்நிலை ஆகிய பிரிவுகளைக் கொண்ட முழுமையான பாடசாலை ஒன்றை அவர் நிறுவினார். அவரைத் தொடர்ந்து வண. கோல்ற்றன், வண. கோஸ்ரிங் ஆகியோர் தெல்லிப்பழையில் பணியாற்ற நியமிக்கப் பட்டார்கள்.

*1900*ஆம் ஆண்டில் வருகை தந்த வண. டிக்சன், பாடசாலையின் வளர்ச்சியில் கருத்துடன் செயற் பட்டதுடன், சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கக் கருதி *1901*ஆம் ஆண்டு தொடக்கம் வேளார் குலத்தைத் தவிர்ந்த ஏனைய குலத்தவர்களையும் பாடசாலையில் இணைத்தார். சைவ வேளாள ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த அன்றைய யாழ்ப்பாணம் அதைக் கடுமையாக எதிர்த்தது.

*1905*ஆம் ஆண்டில் பாடசாலையில் கல்வி கற்ற அனைத்து மாணவர்களுக்கும் சரியாசனம் வழங்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் உணர்வுபூர்வமான கடுமையான எதிர்ப்பலை உருவானது.

ஆசிரியராக இருந்த சின்னப்பா அவர்களின் வீடு எரிக்கப்பட்டு, பாடசாலையில் இருந்து 65 மாணவர்கள் வெளியேறிய போதும், வண. டிக்சன் தலைமையிலான குழு மன உறுதியுடன் பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றது. விலகிய மாணவர்களில் சுமார் 45 மாணவர்கள் கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்குள் மீளவும் தம்மைப் பாடசாலையில் இணைத்துக் கொண்டனர்.

*1909*ஆம் ஆண்டு வண. வோட் அவர்கள் தெல்லிப்பழை வளாகத்தின் பொறுப்பாளராக இணைந்து கொண்டு பாடசாலை வளர்ச்சிக்கு அரிய தொண்டாற்றினார்.

வண. சிமித், வண. டிக்சன் மற்றும் வண. வோட் ஆகியோரே பாடசாலையின் வளர்ச்சியில் பங்காற்றிய மும்மூர்த்திகள் என அழைக்கப்படுகின்றனர். தற்காலத்தைப் போலன்றி அக்காலத்தில் தொலைதூரப் பயணங்கள் மிகக் கடினமாக இருந்தன. மாதக் கணக்கில் கடலில் பயணிக்க வேண்டும். கடற்பயணங்கள் ஆபத்துக்கள் மிகுந்த பயணங்களாகக் கருதப்பட்டன. அவ்வாறு கஷ்டப்பட்டு வருபவர்களுக்கு மாதக் கணக்கான கடற்பயணம், புதிய இடம், குடிநீர், காலநிலை முதலியவற்றால் மரணங்கள் ஏற்படுவதுமுண்டு. இன்னல்கள் நிறைந்த கடற் பயணத்தை துச்சமாக எண்ணி, தங்கள் உயிரைப் பணயம் வைத்து, பல்லாயிரம் மைல்கள் தூரத்தைக் கடல் வழியாகக் கடந்து வந்து எம் நாட்டில் அறிவொளியை ஏற்றி வைத்தவர்கள் அவர்கள். அவர்களின் சேவையை யூனியன் கல்லூரி மைந்தர்கள் இன்றும் மனதில் வைத்துப் பாராட்டுகிறார்கள்.

இதேவேளை அக்காலப் பகுதியில் ஆசிரிய பயிற்சிப் பாடசாலையும் தெல்லிப்பழை வளாகத்தில் இயங்கி வந்தது. எஸ். றோமையா (*1884 - 1897*), வண. எஸ்.






வீரகத்தி (1897 - 1915) ஆகியோர் அதன் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள்.

பின்னர் ஆசிரிய பயிற்சிப் பாடசாலை வண. வோட் அவர்களால் பொறுப் பேற்கப்பட்டது. ஆனாலும் 1916ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால், தெல்லிப்பழையில் இயங்கிய ஆசிரிய பயிற்சிப் பாடசாலை மூடப்பட்டது.

தெல்லிப்பழை ஆங்கிலப் பாடசாலையானது 1829 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்களில் இரு மொழி விருத்திப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. 1930 ஆம் ஆண்டு திரு. G.A.இரத்தினவரதர் அதன் அதிபராகப் பொறுப்பேற்றதுடன், அங்கு சுமார் 75 விடுதி மாணவர்கள் உட்பட 255 மாணவர்கள் கல்வி கற்றார்கள். 1930 - 1931 காலப் பகுதிகளில் செல்வி. L.G. புக்லால்ரர் அதன் மேற்பார்வையாளராகப் பணியாற்றினார்.1935ஆம் ஆண்டில் இரு மொழிப் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்ற ஐ.பி.துரைரட்ணம் அவர்கள் இன்றைய நவ யூனியன் கல்லூரியின் சிற்பி எனப் போற்றப்படுபவர்.


யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய அவர், தெல்லிப்பழையில் கல்வி வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தைப் பரிபாலிப்பதற்குமாக தெல்லிப்பழை வளாகத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடைய வருகையால் தெல்லியூர் பாடசாலை துரித வளர்ச்சி கண்டது. 1937ஆம் ஆண்டு சித்திர கூடம், விஞ்ஞான கூடம், புவியியற் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய வோட் நினைவு மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதேவேளை எஸ்.செல்லப்பா என்பவர் 1869 இல் தெல்லிப்பழையில் ஆங்கில பாடசாலை ஒன்றை ஆரம்பித்து, தொடர்ந்து நடந்த முடியாமல் 1901 இல் அதை மிஷனரிமாரிடம் கையளித்தார். அதே ஆண்டு அவர் அமரத்துவம் அடைந்ததைத் தொடர்ந்து அருளம்பலம் டானியல் - துரையப்பாபிள்ளை செயிலர் அப்பாடசாலையின் தலைமை ஆசிரியரானார். இவர் 1800 இல் இப்பாடசாலையில் சைவ மாணவனாக இணைந்து, பின்னர் வட்டுக்கோட்டை செமினரியில் இணைந்து கிறிஸ்தவராக மதம் மாறினார். 1910 ஆம் ஆண்டு மீளவும் சைவராக மாறிய இவர், பதவி துறந்து, தெல்லிப்பழை மகாஜனா உயர்நிலைப் பாடசாலையை (மகாஜனாக் கல்லூரியை) நிறுவினார். அவரைத் தொடந்து திரு. ஜே.வி.செல்லையா 1937ஆம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றினார். தொடர்ந்து சி.சி.கணபதிப்பிள்ளை, எஸ்.கே.இராசையா ஆகியோர் பதவியேற்றனர்.

இவ்வாறு 1939 களில் தெல்லிப்பழையில் இயங்கிய இரு பாடசாலைகளையும் ஒன்றாக இணைப்பதன் மூலம் இட நெருக்கடியைத் தவிர்த்து, மூல வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி, சிறந்ததோர் கல்விக் கழகத்தை உருவாக்க ஐ.பி.துரைரட்ணம் அவர்கள் அவாக் கொண்டார். அவருடைய தீர்க்க தரிசனமான முடிவுக்கு சில எதிர்ப்பலைகள் தோன்றின.

இரண்டு பாடசாலைகள் ஒன்றாக்கப்படும் வேளையில் அங்கு கற்பிக்கப்படும் ஆசிரியர் தொகை குறைக்கப்படும் என்ற அபாயமே அவற்றுள் பிரதானமானதாக இருந்தது. ஆனாலும் எடுத்த பணி சிறக்க ஆளுநர் வரை சென்ற ஐ.பி.






29 ஆண்டுகள் அன்னைக்குத் தொடர் சேவையாற்றிய ஐ.பி.துரைரட்ணம் 1964ஆம் ஆண்டு தைத்திங்கள் ஓய்வு பெற்றார். தொடர்ந்து கல்லூரியைப் பொறுப்பேற்றுக் கொண்ட அதிபர்கள் பலர் எடுத்த பணி சிறக்கவும், அக்கல்லூரியை உயர் நிலைக்கு இட்டுச் செல்லவும் முன்னின்று உழைத்தார்கள்.

1795ஆம் ஆண்டில் உதயமான லண்டன் மிஷனரி சங்கத்தால் 1806 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட புகழ்பெற்ற மிஷனரிகள் அறுவரில் ஒருவரான பாம் மதகுரு தெல்லிப்பழையில் பணியாற்ற வந்து இறங்கிய வேளையில், தெல்லிப்பழை

தனது கனவை நனவாக்கினார். அதன் பலனால் 1939ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 1ஆம் நாள் தெல்லிப்பழை யூனியன் உயர்நிலைப் பள்ளி உருவாயிற்று. அப்பாடசாலைக்கு ஐ.பி.துரைரட்ணம் அதிபராகவும், ஆங்கிலப் பாடசாலையின் முன்னைய அதிபர் எஸ்.கே.இராசையா துணையதிபராகவும் பொறுப்பேற்றனர். அங்கு லண்டன் மெற்றிக் தேர்வு வரை வகுப்புக்கள் நடைபெற்றன.

யூனியன் உயர்நிலைப் பள்ளியானது, யூனியனின் பொற் காலத்தை உருவாக்கும் ஐ.பி.துரைரட்ணம் அவர்களின் முயற்சியால் 07.10.1940 இல் யூனியன் கல்லூரியாகத் தரம் உயர்ந்ததுடன், அதே ஆண்டு கல்லூரியின் சஞ்சிகையான The Union Magazine முதன் முதலாக வெளியிடப்பட்டது.


1947ஆம் ஆண்டு நடைபெற்ற களியாட்ட நிகழ்வையொட்டி The Union Pictorial வெளியிடப்பட்டது. அது யூனியன் கல்லூரி வரலாற்றைக் கற்போருக்கு மாத்திரமன்றி, யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் ஒரு அரிய பொக்கிஷமாகவும் பேணப்படுகிறது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை 1962ஆம் ஆண்டு அரசு பொறுப் பேற்றுக் கொண்டதுடன், அடுத்த ஆண்டு யூனியன் கல்லூரி சைவ ஆசிரியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆழமான கிறிஸ்தவ சமயப் பாரம் பரியத்தில் ஊன்றியிருந்த கல்லூரி, மெல்ல மெல்ல சமரச சன் மார்க்கப் பாதையில் செல்ல ஆரம்பித்தது. அதே ஆண்டு கல்லூரியில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.

கிறிஸ்தவ தேவாலயம் மாத்திரமல்லாமல், காலப் போக்கில் அம்பிகைக்கும் கல்லூரியில் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது.

வளாகத்தில் இருந்த புளிய மரம், தெல்லிப்பழையில் இறந்த டானியல் பூவரின் மனைவியான சூசன் பூவரின் கல்லறை, மிகப் பழைமையான தேவாலயம் முதலியவை மூன்று தசாப்த கால மிகக் கடுமையான யுத்தத்தைத் தாக்குப் பிடித்து இன்றும் தெல்லிப்பழையின் கல்விப் பாரம்பரியத்தை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. மிகுந்த சவாலுக்கு மத்தியில் பல நல்ல உள்ளங்களால் உருவாக்கப்பட்ட தெல்லியூர் யூனியன் கல்லூரி, யுத்தம் நிறைவடைந்த பின்னர் தனது பழைய இடத்தில் தலைநிமிர்ந்து கல்விச் சேவை ஆற்றி வருகின்றது. ஆனாலும் கல்லூரி வளாகத்தில் உள்ள பழைமையான சின்னங்களைப் பாதுகாக்கவும், கல்லூரியில் புதிய வளங்களைச் சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவும் உலகமெல்லாம் பரந்து வாழும் நம் யூனியன் மைந்தர்கள் முன்வர வேண்டும் என்பதே கல்லூரிச் சமூகத்தின் எதிர் பார்ப்பாகும்.

-உமா பிரகாஷ்



## பொலன்னறுவை சைவ வைணவக் கோயில்கள்

# சிற்பங்களும் படிமங்களும்

-கலாநிதி சி. பத்மநாதன், தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை,பேராதனைப் பல்கலைக்கழகம்.

பொலன்னறுவையிலுள்ள சைவ,வைணவ கோயில்களைப் பொறுத்தவரையில் மிகக் கூடுதலான கற்சிற்பங்களும் வெண்கல படிமங்களும் ஐந்தாம் சிவாலயமான ஐந்நூற்றுவர் ஈஸ்வரத்திலிருந்துதான் கிடைத்துள்ளன.

ஐந்நூற்றுவர் சமயம் என்னும் குழுமத்திலே அக்கசாலையினர் என்னும் உலோகத் தொழில் வினைஞர் முக்கியமான ஒரு பிரிவினர். இக்கோயிலில் முன்பு வைக்கப்பட்டிருந்த படிமங்களை உருவாக்கினார்கள் என்று கருதலாம். ஆலய வளாகத்திற்கு அண்மையில் அல்லது அது அடங்கியிருந்த ஐந்நூற்றுவரின் நகர மொன்றில் உலோகத் தொழிற்சாலையொன்று அமைந்திருந்ததென்று கருதலாம்.

ஐந்தாவது சிவாலயத்தின் சுற்றுப் புறங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளிற் கிடைத்த கற்சிற்பங்களில் மேல்வருவன சிறப்புடையவை.

1. ஆசனக் கோலமான விநாயகர்
2. நான்கு கரங்கள் பொருந்திய ஸ்தானக விஷ்ணு
3. ஸ்தானக நிலையிலுள்ள அம்மன்
4. நந்தி
5. தோளிலே தண்டத்தைத் தாங்கிய ஆசனக் கோலமான திருமேனி
6. சப்தமாதர்; பிராஹமி, சரஸ்வதி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி
7. விநாயகரின் படிமம் செதுக்கப்பட்ட கற்றூண்
8. சிவலிங்கம்
9. வெண்கலப் படிமங்கள்


மண்டபத்தின் தென்புறமாக உள்ள சாலை ஓரமாக அகழ்வு செய்த பொழுது, ஒரு கிடங்கிலே வைக்கப்பட்டிருந்த உலோகப் படிமங்கள் கிடைத்தன. கோயிலுக்குரிய படிமங்கள் பாது காப்பற்ற சூழ்நிலை நகரில் ஏற்பட்ட சமயத்திலே, இவ்வாறு புதைக்கப்பட்டன என்று அகழ்வுக்குப் பொறுப்பாகவிருந்த எச்.சி.பி.பெல் கூறியுள்ளார். பொலன்னறுவையில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் இங்குதான் முதன் முதலாக உலோகப் படிமங்கள் கிடைத்தன. அவற்றில் ஏழு உருப்படிகள் வரலாற்றுச் சிறப்புடையவை. வார்ப்பு முறையின் செம்மையாலும் சைவ சமய வழிபாட்டு நெறி, சமத்துவ சிந்தனை என்பவற்றின் சின்னங்கள் என்ற வகைளிலும் அவை மிகுந்த சிறப்பு உடையவை.

இருவேறு காலகட்டங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளிற் பெருந்தொகையான வெங்கலப் படிமங்கள் இங்கு கிடைத்தன. 1908ஆம் ஆண்டில் எச்.சி.பி. பெல் அகழ்வாய்வுகளை









நடத்திய பொழுது பெருந்தொகையான வெண்கலப் படிமங்கள் கிடைத்தன. அவற்றில் நான்கு சிவபெருமானின் வடிவங்கள். வேறு நான்கு படிமங்கள் உமாதேவியாரின் வடிவங்களாகும். அத்துடன் சமயகுரவர் நால்வருள் நாயன்மார் மூவரது படிமங்களும் கண்டெடுக்கப் பெற்றன.

ஐந்தாம் சிவாலயத்தின் வளாகத்தில் 1960ஆம் ஆண்டிலே தொல்பொருள் திணைக்களத்தின் ஆணையாளராகவிருந்த சீ.ஈ.கொடகும்புறவினால் அகழ்வுகள் நடத்தப்பெற்ற பொழுது மேலும் பல வெண்கலப் படிமங்கள் கிடைத்தன.

இவ்வடிவங்கள் சிற்பசாஸ்திர, ஆகம விதிகளுக்கேற்ப அமைந்தவை. உமாதேவியாரின் படிமங்கள் ஸ்தானகக் கோலமானவை. திரிபங்கமானவை. மற்றைய இரண்டு படிமங்களும் திருநாவுக்கரசு நாயனார், திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் ஆகியோரின் படிமங்களாகும். இரண்டும் நின்ற கோலமானவை. இப்படிமங்கள் மிக நேர்த்தியாக அமைந்தவை. இவை வனப்பிலே சமகாலத் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட தலை சிறந்த நாயன்மார் படிமங்களுக்கு நிகரானவை. திருநாவுக்கரசரின் படிமத்திலே உளவாரகப் படை தெரிகின்றது. உளவாரம் புல், பூண்டுகளை நிலத்திலிருந்து செருக்கி எடுப்பதற்கான கருவி. அண்மைக் காலம் வரை ஆடுமாடுகளுக்கு தீனி போடுவதற்கென எம்மவர்கள் வயல்களிலும் தரவைகள், தோட்டங்கள் என் பவற்றிலும் புல்லினைச் செருக்குவதற்கெனப் பயன்படுத்தும் கருவி உழவாரம் மந்தை வளர்ப்போடு தொடர்புடைய கருவி. நிலத்தைப் பயன்படுத்துவதற்கோ பயிர்கள் விளைந்த பின் தானியங்களை அறுவடை செய்வதற்கோ அதனைப் பயன்படுத்தும் வழக்கமில்லை. தமிழர் சமுதாயத்தில் விவசாயிகளின் சின்னமாக கொள்ளப்படுவது மேழி, சித்திரமேழி. எனவே திருநாவுக்கரசர் தாங்கியிருக்கும் உளவாரம் அவரது குலத்தவரின் சின்னமன்று. கோயில் வளாகத்திலே புல் பூண்டுகள் அதிகமாக வளர்வதுண்டு. அவற்றை உளவாரக் கருவியினைக் கொண்டு தான் அகற்றலாம். திருநாவுக்கரசர் ஆலயங்களில் உளவாரப் பணி புரிந்தவர் என்பது ஐதீகம். அது ஒரு நம்பிக்கையாகி விட்டது. அதன் உருவகமே அவரது உலோகத் திருமேனியிற் காணப்படும் உளவாரப் படை இதனைப் பற்றிய புரிந்துணர்வு அறிஞர் சிலரிடையில் இல்லாது போய் விட்டதால் கடந்த சில தசாப்தங்களாக ஏற்பட்ட அனர்த்தங்கள் இந்நூற்றாண்டிலாவது உயர் கல்வி நிலையங்களிற் பயிலும் மாணவர்கள் அறிவியல் பூர்வமாகச் சிந்திக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

திருஞானசம்பந்தரின் திருமேனியிலே தளங்களின் உருவங்கள் உண்டு. தளங்களைப் பிராமணரின் சின்னங்களென்று யாராவது கூறமுடியுமா? சம்பந்தரின் கைகளிலுள்ள பொற்றாள வடிவம் அவரைப் பற்றிய ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்டது. அவற்றைப் பற்றிப் பொன்னம்பலம் அருணாசலம் புலமை நோக்கில்

எழுதிய கட்டுரைகள் சில நூல்களில் வெளிப்பட்டுள்ளன.[16] அவற்றின் விபரங்கள் மேல்வருவனவாகும்.

**1. நடராசர் :** உயரம் 90.4 சென்ரிமீற்றர்

பிரபாமண்டலம் வட்டமானது. அதனடியில் இரு பக்கங்களிலும் மகர வடிவங்கள். சிகையின் மேற்பாகம் வத்தவேணியாகும். முடி கொக்கின் இறகுகளை அடுக்கினாற் போன்றது. பின்தலையில் வட்டமான முடிச்சுப் போன்ற சிகைச் சக்கரம் தெரிகிறது. சிகையின் கீழ்ப்பாகம் தாண்டவத்தில் வீசித் தொங்கும் லம்ப வேணியாகும். வலப்பக்கத்திற் சங்கையும் இடப்பக்கத்திலே பிறையும் பாம்பும் தெரிகின்றன.


உருவத்தில் நெற்றிக்கண் தெரிகின்றது. வலது பக்கத்தில் மகர குண்டமும் இடது பக்கத்திலே தாடங்கமும் காதணிகளாய் உள்ளன. சிவம் ஆணாகியும் பெண்ணாகியும் அப்பேதங் கடந்துமுள்ள பரத்துவ நிலையினை இவை உணர்த்தும். கழுத்திலே கபாலமாலை அமைந்துள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியன மாறி மாறி நிகழும்.

அநந்தமான ஊழியின் முதல்வன் சிவன் என்பதற்கு அது அடையாளம்.[17] சிவனின் கழுத்தில் உருத்திராக்க மாலை அமைந்துள்ளது. சிவனடியார்கள் மீது இறைவன் கொண்டுள்ள அளவில்லாத அன்பிற்கு உருத்திராக்கம் அடையாளமானது என்பார் அருணாசலம். அவர்களின் துன்பங்களைக் கண்டு இறைவன் உகுத்த கண்ணீர்த்துளிகள் உருத்திராக்க வடிவம் பெற்றன என்றும் அன்னார் கூறுகிறார். இடது தோள் மேலும் வலது கரத்தின் கீழும் உப வீதம் உள்ளது. அது 96 நூல்களால் இழைத்து; பிரபஞ்சத்தின் இயக்கத்துக்கு ஆதாரமாக 96 தத்துவங்களைக் குறிப்பது உப வீதம் தெரியாத எவரும் கிரியைகளைச் செய்யலாகாது. சிவன் சர்வகர்மாக்கதன் எல்லாக் கிரியைகளுக்கும் நாயகன் என்பதால் அவன் உபவீதன் அணிந்துள்ளான்.


சிவனுடைய அங்கங்களையும் சிகை மண்டலத்தையும் நாக பாம்புகள் சுற்றிச் சுழல்கின்றன. யோக மார்க்க சிந்தனையாளர் பிரபஞ்ச சக்தியின் ஒடுங்கிய நிலையின் அடையாளமாக நாகத்தைக் கொள்வர். நடராசர் படிமத்திலே தெரிகின்ற நாகங்கள் சிவன் வசமாயுள்ளன. மூலாதாரப் பிரபஞ்ச சக்தியின் அடையாளங்களாகும்.

உருவத்தில் நான்கு கரங்கள் உள்ளன. மேல் வலக் கரம்டமருகம் ஏந்திய வண்ணமாயுள்ளது. கீழ் வலக்கரம் அபயகரமாகும். மேலிடக்கரம் அக்கினி குண்டத்தை ஏந்திய கோலத்தில் உள்ளது. இடக்கால் உயர்த்தி, வீசிக் கீழ் நோக்கித் தொங்கிய கோலத்தில் உள்ளது.

இடையிலே புலிதோல் போர்த்த கோலந் தெரிகிறது. கால்களில் வீரக் கழல்கள் உள்ளன. படிமம் தாமரைப் பீடத்தில் அமைந்துள்ளது. வட்டமான திருவாசி பிரபஞ்சத்தின் அடையாளம் சிவபெருமான் பிரபஞ்சத்தில் நிறைந்தும் அதற்கு அப்பாவாகியும் அமைந்துள்ள நிலையின் உன்னதமான, தத்துவார்த்தமான வடிவமே நடராசர் படிமம்.












**2. நடராசர் :** உயரம் 64.5 சென்றி மீற்றர் (25.8)
இது பிரபா மண்டலம் இல்லாதது. கிரீடம் முன்னயதில் உள்ளதைக் காட்டிலும் வேறுபட்டது. அது கரண்ட மகுடம் போன்றது. சிகை பின்னலானது. ஒவ்வொரு பக்கத்திலும் ஐவ்வைந்து பின்னல்கள் அகலப்பாட்டில் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிய கோலத்திலே தெரிகின்றன. அங்க லக்ஷணங்கள் பொருத்தமான முறையிலும் வனப்பான கோலத்திலும் அமையவில்லை.

**3. நடராசர் :** உயரம் 61.5 சென்றி மீற்றர். வடிவம் தனித்து வமான அம்சங்கள் பொருந்தியது. பிரபா மண்டலம் இல்லை. பீடமுமில்லை. இறைவர் திருமேனிமுயலகன் மேல் அமைந்துள்ளது. அதன் வலபுறத்திலே பாம்பும் இடப் புறத்திலே பிறையும் தெரிகின்றன. கால்கள் கனதியான, அகன்ற தோற்றங்கொண்டவை. முகத்திலே குமுண் சிரிப்புத் தெரியும் வண்ணமாக அமைக்கப்பட வில்லை.[20]

**4. நடராசர் :** உயரம் 1 அடி 6 அங்குலம். பத்மாசனம் அமைந்த பீடமுள்ளது. பிரபா மண்டலம் வழமை போல வட்டமான தோற்றங் கொண்டது. பிரதிமா லக்ஷணங்கள் முதலாவது உருவத்திற் போல அமைந்தவை. வடிவம் வனப்பு மிக்கது. சமகாலத் தென்னிந்தியக் கோயில்களில் இருந்தவற்றைப் போன்றது

**5. பிரதோஷமூர்த்தி (1907)**
உயரம் 47 சென்றி மீற்றர் உமாதேவியார் சகிதமான சிவனின் வடிவம். உருவங்கள் ஸ்தானகக் கோலமானவை. அவற்றில் ஒவ்வொன்றும் ஒரு பொதுவான பத்திராசன பீடத்தில் மேலுள்ள தனித்தனியான பத்மாசனத்தில் அமைந்துள்ளன. சிவனின் உருவம் திரிபங்கமானது. வலப்பக்கத்துப் பின்கரம் பழுவேந்திய கோலமானது. முக்கரம் அபயகரம் இடப்பக்கத்துப் பின் கரம் தேவியை அணைத்த வண்ணமானது. முன்கரம் கடகஹஸ்தமாய் உள்ளது. மகுடம் உயரமான கரண்ட மகுடமாகும். அதிற் பாம்பும் பிறையும் அமைந்துள்ளன. நெற்றியின் மேலே பட்டமாலை தெரிகின்றது.

**உமாதேவியாரின் படிமம் 1907**
திரிபங்கமான ஸ்தானக வடிவம் முத்தள பீடத்தின் மேலமைந்த பத்மாசனத்தில் உருவம் உருவாக்கப் பட்டுள்ளது. அதன் உயரம் 78.7 சென்றி மீற்றர். வஸ்திரம் அலங்காரமான துகில் போன்றது. நாட்டியக் கோலத்துப் பெண்கள் அணியும் ஆடை போன்று கால்களைச் சுற்றி மடிப்புகளும் காணப்படுகின்றது. நாட்டியப் பெண்கள் அணியும் ஆடை போன்று கால்களைச் சுற்றி மடிப்புகளுடன் காணப்படுகின்றது. இருப்பின் கீழும் கால்களின் பக்கங்களிலும் அலங்காரமாகத் தொங்கும் மடிப்புகள் உள்ளன. வலக்கரம் மலர் மொட்டினை ஏந்திய கோலமானது, இடக்கரம் லோலஹஸ்தம்.

அம்மனின் மகுடம் கரண்டமகுடம். காதணிகள் அகன்ற தோடுகள், கழுத்தில் மூன்று ஆரங்கள் தெரிகின்றன. அவற்றில் இரண்டு பெரிய மலைகளாகும். உபவீதம் இடது தோளின் மேலிருந்து வலப்பக்கத்திலே உதரபந்தத்தை அணையும் நிலையில் உருவாக்கப் பட்டுள்ளது. இப்படிமம் முற்றிலும் சிற்பநூல் விதிகளுக்க மையச் செய்யப்பட்ட வார்ப்பாகும். இதனைப் 12 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளலாம்.




# இலங்கை வாழ் மக்களின் வாழ்வில் ஓலையின் பங்களிப்பு

- சுபாஷினி பத்மநாதன்


பனை மற்றும் தென்னை ஓலையின் பயன்பாடானது பண்டைக் காலம் தொட்டு இன்று வரை இலங்கை வாழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து வந்துள்ளது எனலாம். கீழைத்தேய நாடுகளில் பண்டைய கால ஓலைச் சுவடிகள் எழுத்தாணிகளால் எழுதப்பட்டு சமய, சாஸ்திரீக இலக்கிய, இலக்கண, சரித்திர, சம்பிரதாய வரலாற்றுக் குறிப்புகள் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஓலைப் பயன்பாடு என்னும் அம்சமானது அடிப்படையில் இரண்டு வகைப்படுகின்றது. ஒன்று பனை ஓலைப் பயன்பாடு, மற்றையது தென்னோலைப் பயன்பாடு. ஆரம்ப காலத்தில் இவ்வோலையானது கல்வி, எழுத்து மற்றும் மனிதப் பண்பாடு ஆகியவற்றுக்கு பெரிதும் பயன்பட்டு வந்தது.

ஆரம்பத்தில் புனித குரான் மற்றும் புனித விவிலிய நூல் போன்ற பிற மொழி அரிய சமயசார் தத்துவ நூல்கள் கூட அடிப்படையில் ஓலையிலேயே எழுதப்பட்டு உலகிற்கு அளிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அடிப்படையில் அரிய ஆதாரங்கள் அரம்பத்திலேயே உலகளாவிய ரீதியில் ஓலைச் சுவடிகளிலேயே எழுதப்பட்டிருந்தன. தமிழ் இலக்கிய குறிப்புகள், தேவாரங்கள் உட்பட பல வகைப்பட்ட வரலாற்றுக் குறிப்புகள் என்பனவும் ஓலையினையே அடிப்படை மூலமாகக் கொண்டு எழுதுகோல் மூலமாக எழுதப்பட்டு தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்பட்டு வந்தன எனலாம்.









தென்னோலை மற்றும் பனை ஓலை ஆகியவற்றால் செய்யப்பட்ட வீட்டுப்பாவப் பொருட்களாவன கூடை, பாய், வாசல் கடகம் பெட்டி, பை, நீற்றுப்பெட்டி, உமல், உறி,. சுளகு, வட்டில் வரவேற்பு ஓலை விரிப்புகள், பல வர்ணங்கள நிறமூட்டப்பட்ட பலதரப்பட்ட தொப்பிகள் எனப் பல உள. மேலும் ஓலை இழைகளால் செய்யப்பட்ட கயிறுகள் பலவகைப்பட்ட நாளாந்தக் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முற்காலத்தில் மீன்பிடி வலைகள் கூடப் பனை ஓலையினால் செய்யப்பட்டிருந்தன.

கூரையை வேய்வதற்கும் வேலி அடைப்பதற்கும் பெரும்பாலும் பனை ஓலை மற்றும் தென்னோலை ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுகின்றன. பனை ஓலையை வெறுமனே நேரடியாகவும் தென்னோலையைப் பின்னியும் பயன்படுத்துகின்றனர்.

பணப் புழக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் கொட்டைப் பெட்டிகள் பெரும்பாலும் பனை ஓலைகளால் வனையப்பட்டு ஆங்காங்கே நிறமூட்டம் அளிக்கப்பட்டுப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

இன்றைய நடைமுறையில் ஓலைக்குப் பதில் பிளாஸ்டிக் நாரிழைகள் பயன்படுத்தப்பட்ட போதும் ஆரோக்கிய அடிப்படையில் இயற்கைப் பொருளான ஓலை முக்கிய இடம்பெறுகின்றது.


தென் ஓலையானது தமிழ் - சிங்கள மக்களின் நாளாந்த வாழ்க்கை முறையுடன் ஒட்டிக் காணப்படுகின்றது. தமிழ் பண்பாட்டியலில் மாவிலை தோரணம் முக்கியமானது. மங்களகரமான சுப முகூர்த்த விழாக்களிலும், பல தரப்பட்ட கோயில் உற்சவங்களிலும் தோரணம் பயன் பட்டு வருவதை நடைமுறையில் காண முடிகின்றது. மேலும் இளம் குருத்து ஓலைகளால் பல வகைகளான அழகுணர்ச்சி ததும்பும் வகையில் தோரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஓலை மற்றும் தென்னம் பூக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களும் அலங்காரப் பொருட்களும் பயன்படுத்தப்படுகின்றன.


இதுவரை தமிழரின் நாளாந்த வாழ்க்கை முறைமையுடன் பண்டைய காலம் தொட்டு இன்று வரை பின்னிப் பிணைந்து வளர்ந்து வந்துள்ள ஓலைப் பயன்பாடானது பொதுவாக இலங்கையின் சரித்திர சம்பிரதாய கலாசார பின்னணியின் பாரம்பரியத்தை எடுத்து நோக்கும் போது, சிங்கள மக்களிடையேயும் இக்குருத்தோலைப் பாவனை மிகையாக உள்ளதைக் காணலாம்.

அவர்களின் தனித்துவக் கலை வனப்பை தென்னோலையினாலான கலைப் பொருட்கள் எடுத்துக் காட்டுகின்றன. எத்தகைய முக்கிய இடம்பெறுகின்றதோ அதே வகைப்பாட்டிற்கமைய ஏட்டுச்சுவடுகள் முதல், இன்றைய அலங்கார கைவினைப் பொருட்கள் வடிவமைப்பு வரை தென்னோலை முக்கிய இடம்
















பெறுகின்றது என்றால் அது மிகையாகாது. சிங்கள மக்களின் வாழ்க்கை முறைமையுடன் ஓலைக் கலையம்சம் இரண்டறக் கலந்துள்ளது.

சிங்கள மக்களின் பொது வைபவங்கள், கலாசார விழாக்கள், பௌத்த கோயில் விழாக்கள், போன்றவற்றில் அலங்கார பொருட்கள் உட்பட குருத் தோலையினால் வடிவமைக்கப்பட்ட அலங்கார அம்சங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அக்குருத்தோலை வடிவங்களை மேலும் மெருகூட்டும் வண்ணம் தென்னம் பூக்களுடன் பிணைக்கப்பட்ட கைவேலைப் பொருட்கள் முக்கிய இடம்பிடித்துள்ளன. இவ்வரிய தென்ஓலை வடிவங்களை மின் விளக்குகளால் அலங்கரிப்பதால் மேலும் மெருகேறி மக்களைப் பெரிதும் கவர்கின்றன.


வெசாக் கூடுகள், வெசாக் அலங்காரங்கள், வெசாக் பந்தல்கள் என்பவற்றை அலங்கரிக்க சிங்கள மரபிலான ஓவியங்கள் பயன்படுத்தப்பட்ட போதும், கணிசமான அளவு குருத்தோலைப் பயன்பாடும் ஆங்காங்கே கலந்து இடம்பெற்று சிங்களப் பாரம்பரியத்தைப் பறைசாற்றுகின்றன.


நம்பிக்கை அடிப்படையில் எழுந்த சிங்கள மக்களின் கிரியா முறை, சம்பிரதாய நிகழ்வுக்கு பெரிதும் ஓலையால் இழைக்கப்பட்ட கலை அம்சக் கூடை வடிவமைப்பினாலான ஓலை அம்சப் பொருட்கள் இடம் பெறுகின்றன.

பொதுவாக கலை நிகழ்வுகளிலும் பெரிதும் திறந்த வெளி கலை அரங்கங்களில் இடம்பெறும் நாடோடி நடனங்களிலும் ஓலை கலைப் பொருட்களின் பங்களிப்பு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

குறிப்பாக தென் இலங்கை நாடோடி நடனங்கள் 'கோலம்' ஓலையினால் ஆன கைவினை அலங்காரம் செறிந்ததாக அமைந்துள்ளன. குருத்தோலை, பச்சை ஓலை ஆகிய இரண்டுமே அலங்காரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.










EXPRESS NEWSPAPERS (CEY) (PVT) LIMITED




வீரகேசரியின் விறுவிறுப்பான செய்திகள்...

உடனுக்குடன் உங்கள் கையடக்கத்தொலைபேசியில் தெரிந்துகொள்ளுங்கள்

டயலொக் : reg (space) virakesari என type செய்து

77007 என்ற

இலக்கத்துக்கு sms அனுப்புங்கள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மாதாந்த கட்டணமாக ரூபா. 30/- + வரி அறவிடப்படும்.

# தமிழில் மொழிபெயர்ப்புக் கலையை இங்கிதமாக்கிய நவாலியூர் சோ.நடராசன்

- பேராசிரியர் சபா ஜெயராஜா



உலகளாவிய கல்விப் பெருக்கினுக்கு வளமூட்டிவரும் புலமைச் செயற்பாடுகளுள் ஒன்றாக அமைவது மொழி பெயர்ப்புக் கலையாகும். ஒவ்வொரு மொழிக்குமுரிய வள நிறைவிலே மொழி பெயர்ப்புக்கள் பெரும் பங்கு கொண்டு வருகின்றன. இருபதாம் நூற்றாண்டிலே தமிழ் நிலைப்பட்ட மொழிபெயர்ப்புச் செயற்பாட்டிலே தடம் பதித்த புலமையாளராக விளங்கியவர் நவாலியூர் சோ.நடராசன்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம், பாளி, சிங்களம், இலத்தீன் முதலாம் பன்மொழி ஆற்றலும், தந்தையால் சோமசுந்தரப்புலவர் வழிமுகிழ்த்தெழுந்த கவிபுனையும் திறன்களும் ஆழ்ந்து நிறைந்த வாசிப்பு வளமும், அவரது மொழி பெயர்ப்புகளைத் தர நிலையிலும் ஆக்கவனப்பிலும் உயர்த்திச் சென்றன. அவர் கல்வி திணைக்களத்திலே வித்தியாதரிசகராக இருந்து பெற்ற ஆசிரிய நிலை மற்றும் மாணவர் நிலை தொடர்பான பட்டறிவும், 'எவ்வாறு எடுத்தியம்ப வேண்டும்' என்ற அறிவுக் கையளிப்புச் செயற்பாட்டுக்கு வளமூட்டின.

மொழிபெயர்ப்பிலே மிகவும் கடினமான முயற்சி கவிதை மொழிபெயர்ப்பாகும். கவிதை குறித்த பண்பாட்டுப் பின்புலத்தைத் தழுவியும் ஊடறுத்தும் எழும் கலை வடிவமாகும். அதனை இன்னொரு பண்பாட்டுத்தளத்துக்கு நகர்த்தி வருதல் மிகவும் கடினமான புலமைப் பணியாகும். கவிதை மொழிபெயர்ப்புப் பற்றிய ஒரு முக்கியமான கருத்து வருமாறு,

*'கவிதையை மொழி பெயர்க்கும்*
*பொழுது இழக்கப்படுவது கவிதையே'*

அவ்வாறு சிக்கல் பொருந்திய கவிதை மொழிபெயர்ப்பு முயற்சியை மூல மொழியின் கவிச்சுவை குன்றா வண்ணம் தமிழில் நீட்சி கொள்ளச்செய்த ஆற்றல் மிக்கவராக சோ. நடராசன் விளங்கினார்.

அவரது மொழிபெயர்ப்புக்களிலே மிகவும் உன்னத ஆக்கங்களுள் ஒன்றாக அமைவது கவியரசர் தாகூரின் கீதாஞ்சலியைத் தமிழாக்கம் செய்தமையாகும்.

கீதாஞ்சலியைத் தமிழாக்கம் செய்தல் மிகவும் கடினமான செயற்பணியாகும். தாகூர் வங்க மொழி ஆற்றலுடன் இசையாற்றலும் கொண்டவர். அவரது கவிதைகளில் வங்க இசை நுட்பங்களும் தாள நுட்பங்களும் இலகுவிலே மொழிபெயர்க்க முடியாத கவி நயங்களும், புதிய சந்த விருத்திகளும் இடம்பெற்றுள்ளன. அதேவேளை வங்கச் சூழலிலே வளர்ச்சி பெற்றிருந்த பக்திப் பிரவாகமும் அவரது கவிதைகளை நிறைவித்திருந்தன. அத்துடன் வங்கத்தின் கிராமிய இசையும் கீதாஞ்சலிக் கவித்தைகளிலே சங்கமமாயிருந்தது.

அத்தகைய கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நோபெல் பரிசுக்கு இட்டுச் சென்றது. கீதாஞ்சலியை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்த வேளை சோ.நடராசன் அவர்கள் ஆங்கிலப் பிரதியை மட்டும் கருத்திலே கொள்ளவில்லை. வங்க மொழியைப் படித்தும் அந்நாட்டுப் பண்பாட்டுக் கோலங்களை வாசிப்புவழிப் புலக்காட்சி கொண்டும் தமிழாக்கம் செய்தமையால், மொழிபெயர்ப்பு நிலையில் அவரது ஆக்கம் உன்னதங்களை எட்டியது.

'அவர் தமிழ்ப்படுத்திய கீதாஞ்சலியைப் படித்து மகிழ்ந்தேன். இனிய எளிய தமிழில் கனியும் தேனும் கலந்த பஞ்சாமிர்தப்பாகு போன்ற அவர்கள் பாக்களை யாவரும் பருகி இன்பமும் பயனுமெய்துமாறு மேற்கொள்ளப்பட்ட முயற்சி' இது அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் ச.சோமசுந்தர

பாரதியார் சோ.நடராசனுடைய மொழிபெயர்ப்புத் தொடர்பாக வெளியிட்ட கருத்து. (1950)

மொழிபெயர்ப்பில் தமிழ் மரபை அடியொற்றிய யாப்பு விதிகளையும் புணர்ச்சி விதிகளையும் அவர் இறுகப் பின்பற்றினார். அதேவேளை ஆக்க மலர்ச்சிக் கவித்துவத்தை அவர் விட்டுக் கொடுக்கவில்லை. எடுத்துக் காட்டாகக் கீதாஞ்சலி தமிழாக்கத்தின் முதற் கவிதையில் முதல் நான்கு அடிகளும் வருமாறு.

*'அந்தமில் வாழ்வெனக் கருளினை ஐயனே
அதுவுமுன் றிருவுள்ளமே
அழிகாய மாமிக் கலங்கவிழ்த்த துக்கவிழ்த்
தரியபுது வாழ்வு பெய்தாய்'*

அகவல், சிந்து, செந்துறை வகைகள், துள்ளலோசைக் கவி நிலைகள் முதலியவற்றை தமிழாக்கச் செயற் பாடுகளில் அவர் முன்னெடுத்து கீதாஞ்சலி யாக்கத்தை வளப்படுத்தியுள்ளார். வகை மாதிரிக்கு ஒரு சிந்து;

*'வண்ண வண்ணப் பதுமை - உனக்கு
வாங்கி வருகையிலே
விண்ணில் விளங்குமைந்து - வருண
வில்லை நினைத்திடுவேன்'*

நவாலியூர் சோ.நடராசனின் மொழிபெயர்ப்புப் பங்களிப்பை மேலும் முக்கியப்படுத்துவது வட மொழி இலக்கியங்களைத் தமிழாக்கம் செய்தமையாகும். வட மொழியில் சூத்திரமகாகவி இயற்றிய மிருச்ச கடிகத்தைத் தமிழாக்கம் செய்த வேளை நூலின் முன்னுரையிலே தமிழ் அரங்கியல் தொடர்பான சில முக்கியமான கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவை வருமாறு,

(அ) தமிழ் நாடகத்தை வளர்க்க வேண்டுமானால் நாட்டுக் கூத்தை நல்ல முறையில் மறுமலர்ச்சியடையச் செய்வதோடு அந்தப் பாணியில் புதிய நாடகங்களை அமைக்கவும் வேண்டும்.

(ஆ) நாடக ஆசிரியன் போலவே நாடகத்தைத் தயார் செய்து அரங்கேற்றுபவரும் சிறந்த சிருட்டிக் கவிஞர்.

(இ) சிங்கள நாடகம் கடந்த பத்து வருடங்களில் பிரமிக்கத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. அதற்கு ஒரு காரணம் படித்த புலவர்களும் மேனாட்டு நூல்களில் அறிவு நிரம்பியவர்களும் இக்கால நாடக இயல்களை நன்கு அறிந்தவர்களும் அதில் ஈடுபட்டிருப்பதே.

வடமொழியிலும் மேனாட்டு மொழிகளிலுமுள்ள நாடகங்களைத் தமிழாக்கம் செய்த வேளை அவரிடத்து எழு கோலம் கொண்ட கருத்துக்களாக அவை அமைந்தன.

வடமொழியில் அமைந்த நாடக உரையை இயல்பாகவே தமிழ் வடிவுக்குக் கொண்டு வந்தமை மொழிபெயர்ப்புச் செப்பத்துக்கு எடுத்துக் காட்டாகும். பொம்மை வண்டியில் வரும் பிரதான பாத்திரமாகிய சாருதத்தர் உரைப்பகுதி ஒன்று வருமாறு;


'கிணற்றை இறைக்கும் யந்திரவாளிகளிற் சில நீரை ஊற்றும் சில நீரை நிரப்பும், சில உயரும், சில தாழும், சில விழும், சில சரியும், இவ்வாறு ஒன்றுக்கொன்று மாறானவற்றை ஒன்று சேர்க்கும், விதியின் விளையாட்டு இப்படிப்பட்டதே - எனவே,


பரதவாக்கியம்: ஆனினம் பாலை நிறையப் பொழிக மானிலம் எல்லா விளைவுகளையுந் தருக...'

வடமொழியில் உள்ள மிகச்சிறந்த பனுவல்களுள் ஒன்றாக விளங்குவது காளிதாச மகாகவி இயற்றிய மேக தூதமாகும்.

குபேரன் இட்ட சாபங்காரணமாகத் தனது கடமையிற் பிழைத்து வீழ்ந்த இயக்கன் ஒருவன் தன் காதல் மனைவியைப் பிரிந்து சித்திர கூட மலைச்சாரலில் அல்லலும் அவதியுமுற்று வாழ்ந்த நிலையில் கண்டதொரு மேகத்தை அவள் பால் தூது அனுப்பியமையே அந்நூலின் சாராம்சமாகும்.




சிறு காப்பியங்களுள் மேக தூதம் மணிமகுடமாகக் கருதப்படுகின்றது. அணிநலன்களும் கவிநயமும் கொண்ட அந்தப் பனுவலை அதன் மூல வீச்சுக் குன்றாது தமிழாக்கம் செய்த அவரின் முயற்சியைத் தமிழறிஞர்கள் பலர் விதந்து குறிப்பிட்டுள்ளனர். பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை வித்துவான் ந.சுப்பையாபிள்ளை, பண்டிதமணி சு.நவநீதகிருஷ்ண பாரதியார், வட மொழி வியாகரண மகோபாத்யாய வை. இராம சாமிசர்மா, திரு. அ.சே.சுந்தரராஜன் முதலியோர் மூலத்தையும், மொழி ஆக்கத்தையும் ஒப்பு நோக்கி சோ.நடராசனது மொழியாக்கப் புலமையைச் சான்றுப்படுத்தினர்.

அவரின் மொழியாக்கத்தைக் கண்டறிவதற்கு வகை மாதிரியாக அமையும் கவிதை ஒன்று வருமாறு. இயக்கன் மேகத்தைக் காணுதல்,

*'பொன்மணிக் கடகஞ்சோரப் பூங்கொடி பிரிவாற் - றேம்பித்*
*தன்னுயிர் சின்னாள் காறுந்தாங்கினன் - தலைநா ளாடி*
*மண்ணினைக் கோட்டிற் கொள்ளும் மதகமே - யனைய மேகம்*
*விண்ணுயர் சிகர மேவக் கண்டனன் விரக மிக்கான்'*

சோ.நடராசனின் அதிசிறந்த மொழிபெயர்ப்புக்களுள் ஒன்றாகக் கருதப்படுவது சாகுந்தல மொழியாக்கமாகும். அந்நாடகத்துக்கு அவர் எழுதிய முன்னுரை மிக முக்கியமானது. அரங்கியல் பற்றிய விரிவான தரிசனத்தை அங்கே விரிவாக முன்மொழிந்துள்ளார். அவரிடத்துக் காணப்பெற்ற ஆழ்ந்த வட மொழி அறிவை அடியொற்றி பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் பற்றிய குறிப்புக்களையும் தந்துள்ளார்.

காளிதாசர் 'மாளவி காக்னித்திரம்', 'விக்கிர மோர் வசீயம்', 'சாகுந்தலம்' முதலாம் நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் சாகுந்தலம் உன்னத நிலையை



*கீதாஞ்சலியைத் தமிழாக்கம் செய்தல் மிகவும் கடினமான செயற்பணியாகும். தாகூர் வங்க மொழி ஆற்றலுடன் இசையாற்றலும் கொண்டவர் அவரது கவிதைகளில் வங்க இசை நுட்பங்களும் தாள நுட்பங்களும் இலகுவிலே மொழிபெயர்க்க முடியாத கவி நயங்களும், புதிய சந்த விருத்திகளும் இடம்பெற்றுள்ளன.*

எய்தி உலகெலாம் பயிலப்பட்டு வருகின்றது. பலர் அதனைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளனராயினும் நடராசனது மொழி பெயர்ப்பு தனித்துவமானது. மொழி பெயர்ப்புக்களின் வழியாகத் தமிழ் நாடகத்தின் தர நிலையும் மேலோங்க வல்லது என்ற திடமான நம்பிக்கை யினையும் அவர் கொண்டிருந்தார்.

மொழி பெயர்ப்பின் போது நாடக விளைவைக் (DRAMATIC EFFECT) குன்றாது பராமரித்துக் கொள்ளும் மொழி ஆளுகையும் அவரிடத்தே காணப்பட்டது. 'மொழிபெயர்க்கப்பட்ட வடிவம்' என்று சிந்திக்க முடியாதவாறான தமிழ் வடிவமாக ஆக்கும் முயற்சியை முன்னெடுத்துள்ளார்.

ஒரு சிறிய காட்சி வருமாறு:

அரசன் பாகனோடு கையில் வில்லும் அம்பும் ஏந்தியவாறு புள்ளிமானைத் தொடர்ந்து வரும் வேளைபாகன் இயம்பல்.


*'பொய்யிலாக் கணைவில் தாங்கிப்*
*புள்ளிமான் தொடரும் கோலம்*
*கையிலே பினாக மேந்துங்*
*கடவுளின் காட்சி தானோ!'*


வடமொழி, ஆங்கிலம், சிங்களம் முதலாம் பன்மொழி நூல்களை அந்தந்த மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்த, 'பன்மை நிலை' மொழிபெயர்ப்பாளராக நவாலியூர் சோ.நடராசன் விளங்கினார்.


சிறீ இராகுல மகாதேரர் அவர்கள் சிங்கள மொழியில் அருளிய,'செலலிஹினி சந்தேச' என்ற நூலை, 'பூவை விடுதூது' என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்தார். சிங்கள மொழி நூல்களை தமிழாக்கம் செய்யும் நடவடிக்கைகள் பல்கிப் பெருகும் சமகாலத்தில் அச் செயற்பாட்டை முன்னெடுத்த முன்னோடிகள் வரிசையில் சோ.நடராசனுக்குத் தனியிடம் உண்டு.

அவரது மொழியாக்கம் பற்றி வித்தியாலங்கார முன்னாள் துணை வேந்தர் கிரிவத்துடுவே தர்மகீர்த்தி சிறீப்ரஞ்ஞாசார நாயக தேர சுவாமிகள் முன்மொழிந்த கருத்துக்கள் வருமாறு:

'எமது இலக்கியத்திலுள்ள சிறந்த நூல்கள் இது காறும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட வில்லையெனலாம். அதனை நிறைவேற்றுவதற்குத் தமிழிலும் சிங்களத்திலும் நிரம்பிய புலமையுடையோர் எம்மிடைச் சிலரே. அவர்களில் நவாலியூர் சோ.நடராசன் ஒருவராவர். இதன் மூலம் தமிழ் இலக்கிய அன்பர்க்கும் சிங்கள இலக்கிய அன்பர்க்கும் ஒரு புதிய யுகம் உதயமாகிறது'.




ஆறாவது பராக்கிரமபாகு (1412-1467) மன்னன் ஆட்சிக் காலத்திலே சிங்கள இலக்கியம் உன்னத நிலையை அடைந்திருந்தது. அக்காலத்தில் வாழ்ந்த இராகுலதேரர் செலலிஹினி சந்தேசம் மற்றும் காவிய சேகரம் ஆகிய நூல்களை எழுதினார்.

களனியில் கோயில் கொண்டுள்ள விபீடண தெய்வத்துக்கு அரச பரம்பரையை விளங்கச் செய்ய வேண்டும் என்ற பிரார்த்தனையை முன்வைத்து நாகண வாய்ப்புள் தூது விடப்படுகின்றது.

அக்காலத்தைய தென்னிலங்கைப் பகுதியின் ஆறு, மலை, ஊர், சோலை, முதலாம் இயற்கை வளங்களின் அழகும் மக்களது வாழ்க்கைக் கோலங்களும் கற்பனை நயங்களுடன் கவிதைகளாக்கப்பட்டுள்ளன. அதே அழகினைத் தமிழுக்குக் கொண்டுவரும் முயற்சியினை சோ.நடராசன் அவர்கள் முன்னெடுத்துள்ளார். வகை மாதிரிக்கு பூவை விடுதூதில் அமைந்துள்ள ஆக்கம் ஒன்று வருமாறு:

*'மருவிய சிகரம் பூத்த மல்லிகைக் காடு - சூழத்*
*தருநிறை மலரின் தாது ததைந்தவெண் - மணற்காடேறி*
*முருகெழுவாச வன்னம் மொய்ம் மலரப் - பொய்கை தாண்டிப்*
*பெருவழி படர்ந்து செவ்வாய் பேறென வந்த நண்ப'*

அவரிடத்துக் காணப்பெற்ற வடமொழி ஈடுபாடும், ஆங்கில இலக்கிய ஈடுபாடும் நாடகத் துறையிலே பதிவுகளை நீட்சி கொள்ளச் செய்தன. 'மிருச்சகடிதம்', 'சொப்பனவதத்தம்' முதலிய வடமொழி நாடகங்களை அவர் தமிழாக்கம் செய்தார்.

அதேவேளை 'போலி அதிகாரி', 'கல்யாணத்தரகர்', 'ஆனந்தமே ஆனந்தம்' முதலிய மேலைப்புலத்து நாடகங்களையும் தமிழாக்கம் செய்தார். மேலும், தாகூரினுடைய 'மாலினி', 'சித்திரா', 'தபாற்கந்தோர்', சந்நியாசி' முதலான நாடகங்களையும் தமிழாக்கினார்.

தொடர்பாடல் துறையிலிருந்து அவர் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மொழிபெயர்ப்பின் வளப்பாட்டுக்கு அனுகூலமாக அமைந்தது.

வீரகேசரி நாளிதழில் வா.ராவுடன் இணைந்து பணிபுரிந்தமையும், இலங்கை வானொலியில் நிகழ்ச்சி அதிகாரியாக இயங்கியமையும், உலகப் போர்க்காலத்திலே இலங்கை அரசின் தகவல் பிரிவிலே இதழாசிரியராகக் கடமையாற்றியமையும் அவரது மொழிபெயர்ப்புக் கலையின் உன்னதத்துக்குப் பின்புலமாயின.

தேசிய மொழிகள் கல்வி மொழியாகிய நிலை மாற்றத்தின் போது, கற்பதற்குரிய முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை அவர் தமிழாக்கம் செய்தமை குறிப்பிடத்தக்கது. அவரளவுக்குப் பெருந்தொகையானதும் தரமானதுமான தமிழாக்கங்களை இற்றை வரை எவரும் முன்னெடுக்க வில்லை.

'சமகாலம் மொழி பெயர்ப்பின் காலம்' என்று குறிப்பிடப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் மொழிபெயர்ப்புத் தொழிற்சாலைகளாக மாறி வருகின்றன. மொழிகளுக்கிடையே பரிவர்த்தனைகளும் கையளிப்புக்களும் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் வழியாக சிதறிய அறிவுப் பரம்பல் விரிவான ஒன்றிணைப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது.

அத்தகைய ஒரு நீட்சியில் சோ.நடராசனுடைய மொழிபெயர்ப்புக்கள் தரத்தையும், கலைச் செழுமையினையும் திட்பநுட்பங்களையும் குவிமையப் படுத்துகின்றன. அதேவேளை அவர் சொற்களைப் பிரித்தெழுதாது புணர்ப்பு நிலைக்கு உள்ளாக்கியிருத்தல் சாதாரண வாசகருக்கு இடர்மிக்கதாக அமைந்துள்ளது.

# மாணிக்கவாசக சுவாமிகள் கட்டிய கோவிலின் மகோன்னதங்கள்

## ஆழம் காண முடியாத ஆத்மிக சிந்தனைகளும் கலைப்படைப்புக்களும்

தமிழ் நாட்டில், புதுக்கோட்டை மாவட்டத்தில், திருப்பெருந்துறை ஊரில் 1300 வருடங்கள் பழைமையான ஆவுடையார் அல்லது ஆத்மநாதர் கோவில் மகோன்னதங்கள் நிறைந்த திருத்தலமாக விளங்குகின்றது. இந்தக் கோவிலில் புதைந்திருக்கும் வரலாற்றுப் பெருமைகள், ஆழம் காண முடியாத ஆத்மிக சிந்தனைகள் காரணமாக பூலோக கையிலாயம், சிவபுரம், திருவாசகத்திருவூர், சதுர்வேதி மங்கலம் என்று போற்றப்படுகின்றது. தமிழர் பண்பாடு, தமிழர் கலாசாரம், தமிழர் பேராண்மை, தமிழர் கலைகள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் சிறப்புப் பெற்றதாக இத்திருத்தலம் விளங்குகிறது. இங்கிருந்து தான் பக்திச் சுவையும், மனதை மயக்கும் மந்திரங்களும் நிறைந்த திருவாசகப் பாடல்கள் கருப்பெற்றன.

96 அடி உயரம் 51 அடி அகலம் உடைய ராஜகோபுரத்தைத் தரிசித்து கோவிலுக்குள் நுழைந்தவுடன் முதலில் காண்பது கொடுங்கை எனும் கற்தாழ்வாரமாகும். கற்தாழ்வாரத்தில் கீழே பாயும் ஒரு குரங்கும் மேலேறும் ஓர் உடும்பும் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. பணத்தைத் தேடுவதே வாழ்கை என்ற வழமையாகிப்போய்விட்ட இன்றைய வாழ்க்கை நெறிமுறைகளில் குரங்கைப் போன்ற அலையும் மனம் படைத்தவர்களாக பிரதிபலிக்கப்படுகின்றார்கள் மனிதர்கள். உடும்புப் பிடியாக இறைவனது பாதங்களைப் பற்றினால் மட்டுமே உண்மையான, நிம்மதியான வாழ்க்கை வாழ முடியும் என்பதை இச்சிற்பங்கள் ஆலயத்திற்குள் நுழையும் போதே உணர்த்துகின்றன.

**தலவரலாறு**

முதலாம் வரகுணபாண்டியன் கி.பி. 792 முதல் 815 வரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்து வந்த காலகட்டம்... மதுரைக்கு கிழக்கே 30 கிலோ மீட்டர் தூரத்தில் திருவாதவூர் என்ற சிறிய கிராமம். அங்கே வாதவூரார் என்ற எட்டு வயதுச் சிறுவன் பெரும் அறிவுக் கூர்மை உள்ளவனாக விளங்கினான். சிறுவன் என்று கருதாமல் அவனைத் தனது அமைச்சரவையில் சேர்த்து 'தென்னவன் பிரம்மராயன்' என்றும் பெயர் சூட்டினார் பாண்டிய மன்னன்.

ஒருதொகுதி அரபு நாட்டு உயர் இனக் குதிரைகள் சோழ நாட்டிலுள்ள மீமிசல் மணமேற்குடி துறைமுகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதை அறிந்த மன்னன் வரகுண பாண்டியன், தென்னவன் பிரம்மராயன் என்ற மந்திரியிடம் 49 கோடி பொன்னைக் கொடுத்து குதிரைகளை வாங்கி வர அனுப்பி வைத்தார்.

பாண்டிய நாட்டின் வடக்கு எல்லையாகவும் சோழ நாட்டின் தெற்கு எல்லையாகவும் இருந்த திருப்பெருந்துறைக்கு வாதவூரார் வந்தபோது, தனது நித்தியக் கடனான இறை வழிபாடு செய்ய சிவாலயத்தைத் தேடிச் சென்றார். அங்கிருந்த 'மொய்யார் தடம் பொழில்' என்ற திருக்குளத்தில் மூழ்கி எழுந்ததும், பரவசநிலையை அடைவது போன்ற உணர்வு அவருள் எழுவதை உணர்ந்தார். சிவாகம ஒலி கேட்கும் திசை நோக்கிச் சென்றார். குருந்த மரங்கள் நிறைந்த சோலையில் ஒரு மரத்தின் அடியில் ஞானாசிரியனாகிய இறைவன் சிவபோதனை செய்து கொண்டிருந்தார். வாதவூராரின் வருகைக்காகவே காத்திருந்தது போன்று இறைவன், அவரது செவிகளில் 'நமசிவாய' என ஓதி நயன தீட்சை, பஞ்சாட்சர தீட்சை, சென்னி (தலை) தீட்சை என்ற மூன்று தீட்சைகளையும் அளித் தார்.

'வானோர்க்கும் அறியாததோர்
வளம் ஈந்தனன் எனக்கே'

எனப் பாடி வாதவூரார் நெஞ்சம் நெகிழ்ந்தார்; உள்ளம் உருகினார்; திருவாசகம் அங்கே உருப்பெற்றது.

'ந ம ச் சி வ ா ய
வாழ்க நாதன்தாள்
வாழ்க



ஆவணி மூலமும் வந்தது. குதிரைகள் வரவில்லை. பாண்டியன் மாணிக்கவாசகரை சிறையிலடைத்தான். உடனே சிவபெருமான் சிவகணங்களை குதிரை வீரர்களாகவும் நரிகளை குதிரைக ளாகவும் உருமாற்றி, அவற்றிற்குத் தாமே தலைமை தாங்கி மதுரைக்கு வந்தார். இதனாலே இறைவனுக்கு 'பரிமேலழகர்' எனும் பெயர் ஏற்பட்டது. ஏராளமான உயர் ரகக் குதிரைகள் மதுரையை நோக்கி வரும் செய்தியை ஒற்றர்கள் மன்னனுக்குச் சொல்லவே மன்னன் மகிழ்ந்தான். குதிரை அணி வகுப்புக்குப் பின் ''இவை

இமைப்பொழுதும்என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க'

ஈசன், வாதவூராரின் அமுத மொழியை கேட்டு அவருக்கு மாணிக்கவாசகர் என்று பெயர் சூட்டி அங்கே ஒரு கற்றளி அமைக்க ஆணையிட்டு மறைந்தார்.

ஆண்டவன் ஆணையிட்ட பின் அரசன் ஆணையை மறந்து, குதிரைகளை வாங்க வைத்திருந்த பொன் அனைத்தையும் கோயில் கட்டுவதில் செலவிட்டார் மாணிக்கவாசகர். குதிரை வாங்கக் கொடுத்துவிட்ட பணம் கோவில் கட்டப் பயன்படுவதை அறிந்த மன்னன், உண்மைநிலை அறிந்து வர ஒற்றர்களை அனுப்பி வைத்தான். மாணிக்க வாசகரோ ''குதிரைகள் இன்னும் அரேபியாவிலிருந்து வரவில்லை. ஆவணிமாத மூல நட்சத்திர நாளன்று மதுரைக்குக் குதிரைகள் வந்து சேருமென்று போய்ச் சொல்'' என்று ஒற்றரைத் திருப்பி அனுப்பினார்.




**அட்டைப்பட விளக்கம்:** நரியைப் பரியாக்கி பரியை நரியாக்கிய பெருமை பெற்றது இத்தலம். எனவே கோழைகளைக்கூட சிறந்த வீரனாக மாற்றிவிடும் தத்ரூபம் கொண்ட குதிரைகளினதும் குதிரை வீரர்களினதும் சிற்பங்கள் இங்குள்ள குதிரைச்சாமி மண்டபத்தில் காணப்படுகின்றன. தூணுடன் ஒரே கல்லில் இச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.



குறவன்



கோபுரத்தை அடுத்துள்ள கற்தாழ்வாரம்






கீழேபாயும் குரங்கும் மேலேறும் உடும்பும்



கருங்கல்லினாலான குத்துவிளக்கு

உன்னுடையவை'' என்று கூறி அரசனிடம் குதிரைகள் ஒப்படைக்கப்பட்டன. அன்றிரவே குதிரைகள் மீண்டும் நரியாக மாறி, அந்த லயத்தில் முதலில் இருந்த குதிரைகளையும் கடித்துக் குதறிவிட்டு ஓடிமறைந்தன. இதை அறிந்த மன்னன் மிகவும் கோபம் கொண்டான். கொடுத்த பொன்னையெல்லாம் திருப்பித் தரும்வரை மாணிக்கவாசகரை வைகையாற்று சுடுமணலில் நிற்குமாறு உத்தரவிட்டான். சிவபெருமானுக்கு தனது அடியாரின் துன்பம் பொறுக்க முடியவில்லை. கங்கையை வைகையாற்றில் பெருக் கெடுக்கச் செய்தார். அணைக்கட்டை உடைத்து வைகை பெருக்கெடுத்தது. உடனே வரகுணபாண்டியன் மன்னன் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு நபர் வீதம் வந்து உடைப்பை அடைக்க தொண்டு புரியவேண்டும் என்று முரசு அறிவித்தான். யாருமற்ற அநாதையாகிய செம்மனச்செல்வி என்ற வந்திக் கிழவி, பதட்டத்துடன் யோசித்துக் கொன்டிருக்கையில் சிவபெருமான் ஓர் இளைஞன் வடிவில் வந்து ''வேலை செய்யட்டுமா'' என்று கேட்டார். ''செய், ஆனால் நான் கூலியாக உதிர்ந்த பிட்டு மட்டுமே தருவேன்'' என்று வந்திக் கிழவி கூறினாள். அதற்கு உடன்பட்ட சிவபெருமான் மூக்கு முட்ட உதிர்ந்த பிட்டைச் சாப்பிட்டு விட்டு, மர நிழலில் உறங்கினார். மன்னன் வந்து பார்த்தபோது வந்திக்கிழவியின் பங்கு மட்டும் நிரப்பப்படாமல் உடைந்திருந்தது. கோபம் கொண்ட அரசன் கூலியாளான இளைஞனைப் பிரம்பால் அடித்தான். கூலியாளோ ஒரு கூடை மண்ணை அணைக்கட்டிலுள்ள உடைப்பில் கொட்ட, உடைப்பு மாயமாக நின்றுபோனது. கூலியாளும் திடீரென மறைந்து போனான். ஆனால் அவன் மீது பட்ட பிரம்படி உலகிலுள்ள அனைத்து உயிர்களின் மேலும்படவே வரகுணபாண்டியன் கலங்கிப் போனான். அப்போது சிவபிரானின் குரல் கேட்டது, ''மன்னவா! வாதவூராரின் பொருட்டு இத்திருவிளையாடலை நாம் செய்தோம். இதனை அறியாது நீ கோபம் கொண்டாய்''



என்று அக்குரல் சொல்லியது. பாண்டியன் வாதவூராரான மாணிக்கவாசகரின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டார். குதிரை வாங்குவதற்கு கொடுத்துவிட்ட பணத்தை கோவில் கட்ட அனுமதியளித்தார். தானும் விரும்பித் திருப்பணிகள் செய்தார்.

இதன்பின்னர் மாணிக்கவாசகரின் திட்டப்படி கட்டப்பட்டதே ஆவுடையார் கோவிலாகும். கருவறை, அர்த்த மண்டபம், அமுது மண்டபம் ஆகியன மாணிக்கவாசகரின் நேரடி மேற்பார் வையின்கீழ் கட்டப்பட்டன. ஏனைய நிலைகள், மண்டபங்கள் அனைத்துமே மாணிக்கவாசகரின் திட்டப்பப்படி வெவ்வேறு கால கட்டங்களில் சோழர், பாண்டியர், நாயக்கர் ஆகிய மன்னர்களால் கட்டப்பட்டன. இப்போது கோவில் நான்கு பிரகாரங்கள், ஆறு மண்டபங்களைக் கொண்டு சிறப்புப் பெறுகின்றது.

51 பகுதிகள் கொண்ட திருவாசகத்தின் 20 பகுதிகள் இங்கு தான் அருளிச் செய்யப்பட்டன. அவை சிவபுராணம், திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, செந்திலாப்பத்து, அடைக் கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தப்பத்து, உயிருண்ணிப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், திருவேசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா, பண்டாயநான்மறை ஆகியனவாகும்.

இறைவன் மீது நம்பிக்கை, நாட்டமில்லாதவர்களுக்கு கூட பூரண மனத் திருப்தி தரும் கலை விருந்து ஆவுடையார் கோவிலில் கிடைக்கின்றது. உயிர் என்ற அந்த ஒன்றின் அடையாளமாகிய நாளநாடித் துடிப்புகளின் அசைவைத்தவிர மற்ற எல்லா அம்சங்களும் இங்குள்ள கலைப்படைப்புகளில் உள்ளன. இதற்கான ஒப்புமைச் சான்றாக பின்வருவனவற்றை அடையாளம் காணமுடியும்.

1. கற்தாழ்வாரங்கள்
2. உடும்பும் குரங்கும்
3. கற்சங்கிலிகள்
4. இரண்டே இரண்டு தூண்களில் ஈராயிரம் தூண்கள்
5. பலநாட்டுக் குதிரைச் சிற்பங்கள்
6. 27 நட்சத்திர உருவங்கள்



கருங்கல்லைத் தகடாக்கி அமைக்கப்பட்ட கற்தாழ்வாரம்


7. நடனமுத்திரை பேதங்கள்   8. இசைத்தூண்கள்


**கற்தாழ்வாரங்கள்**

கருங்கல்லைத் தகடாக்கி அதிலே பல வளைவுகளை உருவாக்கிக் தாழ்வாரக் கூரை போட்டது போல் அமைத்திருக்கும் திறம் பெரும் வியப்பைத் தருகின்றது. ஒரு வீட்டிற்கு தாழ்வாரம் அமைக்கும்போது, பனை அல்லது தேக்கு மரங்களினால் பக்கவாட்டுக் கைகள் அமைத்து அதனை இரும்புக் கம்பிகளால் இணைப்பார்கள்.

தாழ்வார மர வளைகளைகளும் அதனை இணைக்கும் குறுக்குக் கம்பிகளும் கருங்கல்லிலே செதுக்கப்பட்டு (இக்கம் பிகள் கூட நான்கு நூல், ஆறுநூல், முறுக்கு மற்றும் உருண்டை வகைப்பட்ட கம்பிகள்) ஆலயத்தின் தாழ்வார கூரை வேலைகள் முழுவதும் மரத்தினாலேயே வேயப்பட்டது போன்ற தோற்றமளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒன்றுடன் ஒன்றைப் பொருத்துவதற்கு குமிழ் ஆணிகள் அறைந்திருப்பது போல செய்திருப்பது சிற்பக் கலையில் வியக்கத்தக்க ஒப்பற்ற திறனாகும். இந்தத் தாழ்வாரம் எனப்படும் கொடுங்கைக் கூரை ஐந்தடி நீளமும் இரண்டரையடி அகலமும் மூன்றங்குல கனமும் உள்ளதாகும்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தின்போது ஆவுடையார் கோவிலை பார்வையிட வருகை தந்திருந்த ஆங்கிலேய உயரதிகாரி ஒருவர் கற்தாழ் வாரங்களை கருங்கல் என்று நம்ப மறுத்து, அதை துப்பாக்கியால் சுட்டுப் பார்த்து, கருங்கல் என்று உறுதி செய்தார். கைத்துப்பாக்கியால் சுட்ட போது, இந்த கொடுங்கைக் கூரை சுக்கு நூறாக சிதறிவிடவில்லை; வெடிப்புகள் ஏற்படவில்லை; குண்டு பாய்ந்த இடத்தில் மட்டும் துப்பாக்கிக் குண்டின் அளவிற்கு துளை உருவானது. இன்றளவும் இந்த அடையாளத்தை தியாகராஜ மண்டபத்தில் காண முடியும். அந்த அளவிற்கு கல் ஓட்டுக் கூரை மென்மையும் திண்மையும் வாய்ந்ததாக அமைந்துள்ளது.



மனிதனின் முதுமைப் பருவத்தை சித்திரிக்கும் காட்சி


கற்தாழ்வாரத்தின்மீது ஆங்கிலேய அதிகாரியினால் துப்பாக்கியால் சுட்ட துளைகள்


கோவில் கருங்கற்சிற்பங்கள் மரத்தில் செதுக்கப்பட்டு தேரை அலங்கரிக்கின்றன


27 நட்சத்திரங்கள்



ஒவ்வொரு தூண்களிலும் சிற்பங்கள்


கற்சங்கிலி


கூரையைத் தாங்கும் தூணிலும் கலையம்சம்


மரச்சட்டத்தின் குறுக்கே கம்பிகளினால் இணைத்து ஆணிகள் பொருத்தப்பட்டிருப்பதுபோன்ற தோற்றம்தரும் கற்தாழ்வாரம்


சங்கீதமண்டபம்


இசைத்தூண்

யாரேனும் ஒருவர் கோவில் கட்டுவதற்கு தீர்மானித்து சிற்பாச்சாரியிடம் சிற்பங்கள் செய்ய ஒப்பந்தம் செய்யும் போது, ஒப்பந்த ஓலையில் 'ஆவுடையார் கோவில் கொடுங்கை நீங்கலாக' என்று எழுதி சிற்பங்களை பட்டியலிட்டு கையொப்பமிடுவது வழமை. அந்தளவிற்கு சிற்ப வேலைகளில் மிகவும் கடினமான பணியாக இந்தக் கொடுங்கைக் கூரை திகழ்கின்றது.

கொடுங்கை என்ற தாழ்வாரத்தைக் கடந்து சென்றால் பெரிய மண்டபத்தில் உள்ள இரண்டு தூண்களில் ஆயிரம் சிறிய தூண்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதைத்தாண்டி இரண்டாம் பிரகாரத்தில் பஞ்சாட்சர மண்டபம் அல்லது குதிரைச்சாமி மண்டபம் என்ற மண்டபம் காணப்படுகின்றது. குதிரைகள் பின்னிரண்டு கால்களை ஊன்றி முன்னிரண்டு கால்களை தூக்கி மேலே பாய்வது போல இருக்கிறன. குதிரைகளின் ஒவ்வொரு சதையிலும், நரம்பிலும் இருந்து எழும் வேகம், அதன் மேல் அமர்ந்திருக்கும் வீரன், அதனுடன் ஒன்றாய் கலந்து, காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும் அனுபவம் - பார்க்கும் கோழையின் இரத்தத்தைக் கூட வீரனாக மாற்றிவிடும் தத்ரூபம் தெரிகின்றன. குதிரை, குதிரை வீரன், அணிகலன், ஆபரணம், வீரனின் ஆயுதங்கள், தலையில் கொண்டை, குதிரை வீரர் அணியும் ஆடை, கையில் சவுக்கு என்று ஒவ்வொரு சின்னச்சின்ன அம்சத்தைக் கூட விடாமல் தூணுடன் ஒரே கல்லில் செதுக்கிய வேலைப்பாடுகள் மிக அருமை. குதிரைக்குக் கீழே நரிகளும் உள்ளன. இங்குள்ள எல்லா உருவச் சிலைகளிலேயும் நரம்புகளின் புடைப்பு தத்ரூபமாக வெளியே தெரிகின்றன. பெருமளவிலான சிலைகளின் தலைமுடி கூட சன்னமாக அளந்து நீவிவிடப்பட்டுள்ளன.


இரண்டாம் பிரகாரத்தில் உள்ள தில்லை மண்டபத்தில் அர்ஜுனனுக்கு பாசுபதம் கொடுத்த சிவன், அம்பாள் சிற்பம்,


வீரபத்திரர்

புலையன் புலத்தியன் சிவ சிற்பவடிவங்களும் உள்ளன. இதில் அம்பாள் கழுத்தில் சங்கிலி, கையில் சுருள் வளையல் அணிந்து இருக்கிறாள். நவநாகரீக அணிகலன்கள் என்று தற்காலத்தில் அணியப் படும் நகைகளின் அலங்கார வடிவங்கள் அனைத்தும் 1000 ஆண்டுகளுக்கு முன்னரேயே மக்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. இதனுடன் மலைக்குறத்தியின் சிலை ஒன்று அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது. ஓலைகூடையினை இடுப்பில் கையினால் இடுக்கிக் கொண்டு குறி சொல்ல வருகின்ற குறத்தியாக அமைந்துள்ளது இச்சிலை. ஆவுடையார் கோவிலில் நவக்கிரக சன்னதி கிடையாது. ஆனால் தூண்களிலும் வாயில் நிலையளிலும் கூரைகளிலும் நவக்கிரகள் செதுக்கப் பட்டுள்ளன.

சித்ர மண்டபத்தில் துவார பாலகராய் சிவாம்சமாகிய இரண்டு வீரபத்திரர்கள் உள்ளே நோக்கிய வண்ணம் நின்ற நிலையில் காட்சி தருகின்றனர். இவர்களை முறையே ஆகோர வீரபத்திரர் இரணவீரபத்திரர் என்றும் புராணங்கள் பேசுகின்றன. ஒருவர் தனது காலினால் மனிதனை மிதித்துக் கொண்டு, தன் கையில் இருக்கும் ஈட்டியினால் அவனைச் சிதைக்கிறார். மனிதனின் சஞ்சலங்களுக்கு எல்லாம் புலன்களே காரணம் என்று அறிவுறுத்தி வீரபத்திரர்கள் பாடம் புகட்டுகின்றனர்.

அடுத்துக் காண்பது நடன மண்டபம். இங்கு பதஞ்சலி, வியாக்கரபாதர் முதலியவர்களுடன்


குதிரைச்சாமி

மாணிக்கவாசகர் சிவ உபதேசத்திற்கு முன் அரசமிடுக்குடன் கூடிய தோற்றத் துடனும் உபதேசத்திற்குப் பின் உடலில் ஏற்பட்ட பணிவுடன் காட்சி தருவது ஓர் அற்புதக் காட்சியாகும். காணக் காண தெவிட்டாத சிற்ப வடிவங்கள் கொண்டதாக இம்மண்டபம் அமைந் துள்ளது.

சிவன் கோயில்கள் பொதுவாக கிழக்கு நோக்கித்தான் இருக்கும். அரிதாக சில தலங்கள் மேற்கு பார்த்திருக்கும். ஆனால், ஆவுடையார் கோவில் தெற்கு நோக்கியபடி இருக்கிறது. சிவானந்த லயத்தைக் கற்றுத் தருவதே திருப்பெருந்துறை சிவாலயம் காட்டும் வழிபாட்டு வழி முறையாகும். சாதாரணமாக எல்லா கோவில்களிலும் ராஜ கோபுரத்தை தாண்டியதுமே கொடிமரம், நந்தி, பலிபீடம் பின்பு கருவறையில் மூலவர் என்றிருக்கும். இந்த ஆலயத்தில் எல்லா

கோவில்களிலும் நாம் பார்த்துப் பார்த்து பழகிப்போன இந்த ஆன்மீக அடையாளச் சின்னங்கள் இல்லை. சோதியாய்த் தோன்றும் இறைவனை வாயிலிருந்தே இடையூறு இல்லாமல் வழிபடமுடிகின்றது.

கருவறையில் சுவாமி, அம்பாளுக்கு உருவம் கிடையாது. லிங்கம் கிடையாது. அடிப் பகுதியான சதுர வடிவ ஆவுடையார் மட்டுமே உண்டு. அதன் மீது செம்பு பாத்திரம் கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளது. செம்பு உடலாகவும் அதனுள் இருப்பது ஆத்மாவாகவும் கருதப்படுகிறது. ஆறு கால பூஜையின் போது 108 மூலிகைகள் கலந்த தைல அபிஷேகம் நடைபெறுகின்றது. கருவரைக்கு அருகில் இரண்டு கிணறுகள் உள்ளன. இவற்றில் ஐந்து அடி ஆழத்தில் தண்ணீர் ஊற்று காணப்படுகின்றது. கருவறையிலிருக்கும் ஆவுடைக்குப்பின் சிகப்பு, மஞ்சள், பச்சை விளக்குகள் எந்நேரமும் ஒளிர்ந்து கொண்டிருக்கும். வெள்ளை நிறம் சூரியன், சிவப்பு நிறம் அக்னி, பச்சை நிறம் சந்திரனாக ஒளிரும் முக்கண் சுடர்களைக் கண்டுணர்ந்து வணங்குவதால் இங்கு வருகின்ற பக்தர்களுக்கு மற்ற கோயில்களைப் போல தீபாராதனை தட்டை தொட்டு வணங்கும் வழமை கிடையாது.

அடுத்து அம்மாள் சன்னதி எப்போதும் அடைத்தே இருக்கும். சன்னதி முன்புள்ள நாற்பது துளைகள் கொண்ட கருங்கல் ஜன்னல் ஊடாக அம்பாளைத் தரிசிக்க இயலும். இங்கு அம்பாளுக்கும் விக்ரகம் இல்லை. தட்சனின் யாகத்திற்கு சிவனை மீறிச் சென்றதற்கு மன்னிப்பு பெறுவதற்காக, அம்பாள் இத்தலத்தில் அரூப வடிவில் தவம் செய்த போது, பதிந்த பாதத்திற்கு மட்டுமே பூஜை நடக்கிறது. இந்த பாதத்தை பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக, கண்ணாடியில் பாதம் பிரதிபலிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அபிஷேக தீர்த்தம் மற்றும் குங்குமம் பிரசாதமாக தரப்படுகின்றது.

ஆவுடையார் மூலஸ்தானத்தில் அமுது மண்டபத்தில் படைகல் என்ற ஒரு மேடான கல் இருக்கிறது. இந்தக் கல் மூன்று அடி உயரம்; ஏழு அடி நீளம்; ஆறு அடி அகலம் கொண்ட ஒரே பாறையாகும். இந்தக் கல்லில்தான் ஆறு கால பூசைகளுக்கும் உரிய அமுது படைக்கப்படுகின்றது. புழுங்கல் அரிசி சோறுதான் நைவேத்யம் செய்யப்படுகிறது. சுடச்சுடச் அடுப்பில் இருந்து இறக்கப்பட்ட சோற்றை அப்படியே படைக் கல்லில் ஆவி பறக்க கொட்டுகின்றனர். அப்போது சன்னதி கதவுகள் சாத்தப்பட்டு, சிறிது நேரம் கழித்து திறக்கப்படும்.


அக்கினி தீர்த்தம்


தலவிருட்சம்


1000 தூண்கள்
பொறிக்கப்பட்ட தூண்


வெளிப்பிரகாரத்தில் வெயிலுவந்த பிள்ளையார் ஆலயம்,
அக்னி தீர்த்தம், சங்கீத மண்டபம்

சுவாமி அரூப வடிவானவர் என்பதால், அரூபமாகி விடும் ஆவியுடன் நைவேத்யம் படைக்கப்படுகிறது. சூரிய, சந்திர கிரகணங்களின்போது கோயில்களின் பூஜை செய்வதில்லை. ஆனால், ஆவுடையார் கோயிலில் கிரகணநாளிலும் ஆறு கால பூஜை நடக்கிறது. அருவ வடிவ சிவனுக்கு எந்த காரணத்தாலும் பூஜை தடைபடக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது.

கருவறைக்கு தென்மேற்கே, சோமாஸ்கந்தர் ஸ்தானத்தில் விளங்குகின்றார் அருள்மிகு மாணிக்கவாசகப் பெருமான். இவரே இச்சிவதலத்தின் உற்சவர். மாணிக்கவாசகரை தெய்வமாக வழிபடுவது இங்கு மட்டுமே. விழாக்காலத்தில் இடப வாகனம் மற்றும் தேரில் பவனிவருபவரும் இவரே. ஆண்டுக்கு இரண்டு முறை (ஆனித் திருமஞ்சனம், மார்கழித் திருவாதிரை) ஆகியன மாணிக்கவாசகரை முதன்மைப்படுத்தி நடைபெறும் திருவிழாக்களாகும். மனிதன் தெய்வமாக முடியும் என்ற இக்கோட்பாடு இத்தலத்தில் நிறைவு பெறுகிறது. மனிதன் ஒருவன் சிவனாரின் திருவருளால் பணி கொள்ளப்பட்டு உற்சவமூர்த்தியாக விளங்கி வரும் சிறப்பு திருப்பெருந்துறை ஆலயத்திற்கு மட்டுமே உண்டு.

இந்த ஆலயத்தின் வெளி பிரகாரத்தில் வெயிலுவந்த விநாயகர் ஆலயம், அருகில் அக்னி தீர்த்தம், சங்கீத மண்டபம் எனப்படும் தியாகராஜர் மண்டபம் என்பன உள்ளன. இங்கு தான் கற்சங்கிலிகள் காணப்படுகின்றன. இன்றும் மூன்று முதல் ஐந்து வளையங்கள் கொண்ட ஒரே கல்லிலான கற்சங்கிலி கூரையில் தொங்கிக்கொண்டுள்ளன. சங்கிலியின் முதலாவது வளையத்தில் பாம்பின் தலை செதுக்கப் பட்டுள்ளது.

இந்த மண்டபத்தின் மூலையில் இசைத்தூண்கள் உள்ளன. ஒரே கல்லினாலான தூணின் தூண்களைத் தட்டினால் இரும்பு குழாயை தட்டுவது போல்ச் சத்தம் கேட்கும். 27 நட்சத்திரங்களின் உருவச் சிற்பங்களும் இந்த மண்டபத்தின் மேற் கூரையில் மிக அழகாக செதுக்கபட்டுள்ளன.

தியாகராஜ மண்டபத்துக்கு அப்பால் வடமேற்கு மூலையில் வெளிமதிலை ஒட்டினாற்போல் தலவிருட்சமான குருந்த மரம் உள்ளது. மணிவாசகரும் தன் குருநாதனை 'நிறைமலர் குருந்தம் மேவிய சிவனே' என்று அழைத்தார். குருந்தமரத்தையும் சிவனாகக் கருதுவதால், கார்த்திகை சோமவாரத்தில் இந்த மரத்தின் முன்பாக 108 சங்காபிஷேகம் நடக்கிறது.

இங்கு செப்போடு வேயப்பட்ட விமானம் இருக்கிறது. இந்தச் செப்போடு விமானத்தின் இணைப்பும் வடிவும் விசேடமானவை. விமானத்திலுள்ள மரங்கள் தேவதாரு மரத்தாலானவையாகும். தேவதாரு மரம்மோ சுமார் ஐயாயிரம் ஆண்டுகள் தாங்கும் சக்தியை படைத்தன. இந்த தேவதாரு மரம் பர்மாவில்தான் உள்ளது. இந்த தேவதாரு மரத்தின் பலகைச் சட்டத்தை இன்று பார்த்தாலும் நேற்று அறுத்தது போன்ற பளபளப்பைக் காணலாம்.

ஆவுடையார் கோயிலுக்குள் என்னென்ன அதியற்புத கற்சிலைகள் இருக்கின்றனவோ அவை அனைத்துமே மரத்தினால் செய்யப்பட்டு இந்தத் தேரின் எட்டுப் பக்கங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன.

பிரார்த்தனை: மாணிக்கவாசகருக்கு ஈசனே குருவாய் வந்து உபதேசித்த தலம் என்பதால் இந்த தலத்தில் வழிபடுவோர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதோடு சிறந்த ஞானம் பெற்றவராகத் திகழ்வர். தொழில் விருத்தி, உத்தியோக உயர்வு, திருமணவரம், குழந்தை வரம் ஆகியவற்றுக்காகவும் இத்தலத்தில் பக்தர்கள் பிரார்த்தித்துக் கொள்கின்றனர்.


தன் ஆன்மா இறைவன் கடாட்சத்தால் மேன்மையுற்றதுபோல், அனைத்துயிர்களினதும் ஆன்ம மேன்மையடைய வேண்டுமென்ற தத்துவார்த்தங்களோடு இத்திருக்கோவிலை நமக்கு அளித்துள்ள மாணிக்கவாசகர், குருந்த மரத்தடி ஞானாசிரியன் பணித்தவாறு,

'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க'


என்று நமக்கும் ஆத்மீக வழிகாட்டுகின்றார்.

**செல்லும்வழி :** புதுக்கோட்டையிலிருந்து தென்கிழக்கில் 44 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அறந்தாங்கியிலிருந்து சுமார் 14 கிலோமீட்டர் கிழக்கில் அமைந்துள்ள இத்தலத்திற்கு பஸ் வசதிகள் பல ஊர்களிலிருந்தும் நிறையவே உள்ளன. சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து பஸ் வசதி அடிக்கடி உள்ளது.


**- பஸ்ரியாம்பிள்ளை ஜோண்சன்**




மாணிக்கவாசகர் நயன தீட்சை, பஞ்சாட்சர தீட்சை, நயனதீட்சை பெறுவதை காட்டும் சிற்பங்கள்





அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை இணைந்து நடாத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலையானது பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து மேளதாளங்கள் முழங்க அறநெறி மாணவர்கள் நந்திக் கொடி பிடித்த வண்ணம் பவனியாக வருகை தந்து களுவாஞ்சிக்குடி முகாமைப் பிள்ளையார் ஆலயத்தில் பூசைகள் நடைபெற்று பின்னர் இராச மாணிக்கம் மண்டபத்தை சென்றடைந்தது. சைவ அறிஞர்களது உரைகளும் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.




















# நாடக உலகில் ஒரு சகாப்தம் படைத்த கலையரசு கே.சொர்ணலிங்கம்

-கலைமாமணி பொன்.தெய்வேந்திரன்

ஆடியடங்கும் மனிதன் ஓடி ஆடி உழைத்தாலும், கலைகளை நாடாவிட்டால், மனங் கனன்று போகும் அல்லவா? இத்துன்பம் நீங்கவே இளங்கோவின் சிலம்பு உதயமானது. களைப்பெய்திய கடின உழைப்பாளி இளைப்பாற கலையை நாடியதில் வியப்பேதும் இல்லை. பண்டையத் தமிழர் கண்ட முடியாட்சியில் குடிமக்கள் குதூகலிப்புக்கு இதுவே உதவியது. தென்னாட்டுக் கலைகள் எம் நாட்டில் பரவ ஆரம்பித்ததும் விரிவு பெறத்துவங்கியது.

குடாநாட்டில் நவாலி மானிப்பாய் ஊர்கள் சேர் பொன். இராமநாதன் அவர்களின் வருகையால், கல்வி செல்வத்திலும் பொருட் செல்வத்திலும் மெல்ல வளர்ச்சி பெற்றது. தென்னிந்திய நாடக வல்லுனர்களின் வருகையும் இதற்கு உரம் சேர்த்தது. அக்கால எம் நாட்டு புலவர்களான, நாவலரின் தந்தையார் ஆராய்ச்சியார் கந்தப் பிள்ளை, தெல்லியூர் பார்குமாரகுலசிங்க முதலியார் போன்றவர்கள் நல்ல நாடக ஆக்கங்களை எழுதி மேடையேற்றினர். 1778ஆம் ஆண்டில் இருந்து பலர் நாடகக் கலைக்கு ஊக்கம் கொடுத்தனர். காவிய புராண இதிகாச கதைகள் அவர்களுக்குக் கை கொடுத்தன.


1933ஆம் ஆண்டில் யாழ் றோயல் தியேட்டர் மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் 'பாதுகாபட்டாபிஷேகம்' என்னும் தலைசிறந்த நாடகம் 63ஆம் ஆண்டுவரை சக்கைக்போடு போட்டது. இதற்கு பிரதான காரணமாக அமைந்தது கூனியாய் வந்த கலையரசைப் பார்ப்பதற்கு தான்!

டி.கே. எஸ். சகோதரர்கள் என்று புகழ் பூத்தவர்களில் ஒருவரான சண்முகம் அவர்கள் ஔவையாராக வந்து மக்களைப் பெரிதும் கவர்ந்தவர். பாரதத்தில் தமிழர் வாழ்ந்த இடமனைத்திலும் ஔவையார் வலம் வந்தார். அதே போன்று நமது நாட்டிலும் தமிழ்ப் பிரதேசம் எல்லாம் கூனியும் வலம் வந்தார். கலையரசின் கூனி பாத்திரத்தைப் பார்த்து அவர் பெண் என்றே மூதாட்டிகள் நம்பினர். கைகேயியாக வந்த சரவணமுத்துவும் கலையரசரும் போட்டியாய் நடித்தனர். சரவணமுத்து செக்கச் சிவந்த மேனி அழகர்.

கலையரசர் நிறம் குறைவானவரெனினும் கரை போட்ட வெள்ளாடையில், கைப்பொல்லும் ஆட, கண்களை உருட்டி, 'இன்னமும் புத்தியில் சித்தி பெறவில்லை நீ' என்று ஒரு முகச்சுழிப்புடன் முத்து மாலையை வீசி எறியும் காட்சி அன்று பார்த்த ரசிகர்களால் மறக்கக் கூடியதா என்ன? கூனிக்காக இந்நாடகம் மேடை பல கண்டது.

1920ஆம் ஆண்டுகளில் சொர்ணலிங்கம் அவர்கள் நாடகத்தில் வளர எண்ணிய காலமெல்லாம் 'இவருக்கு படித்துப்போட்டு, ஏன் இந்த பைத்தியம், என்றும் கூத்தடிக்கிறான் கூத்தாடி' என்று கூச்சல் போட்டவர்க ளெல்லாம் நாடகத்தில் கூனியைப் பார்த்ததும் வாயை மூடிக் கொண்டார்கள். நாடகத்தில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் அவர் பின்னால் நின்றார்கள். பின் யார் வாய் திறப்பர்?

சொர்ணலிங்கம் அவர்களின் பேச்சும் மூச்சும் நாடகமே. ஆங்கிலத் தேர்ச்சி அவருக்கு கை கொடுத்தது. அகவை தொண்ணூற்றுக்கு மேல் வாழ்ந்து ஆயிரம் பிறைகள் கண்ட கலையரசு ஐயா நாடக உலகில் ஒரு சகாப்தம் படைத்து நிலையரசை நிறுவிய அற்புதக்கலைஞர்.



வயது முதிர்ந்த நிலையிலும் உருட்டும் விழிகள் மருட்டிக் கொண்டு தான் நின்றன. எந்த நேரமும் தூய வெள்ளை ஆடையே அணிவார். பம்மல் சம்பந்த முதலியாரும் இப்படித்தான். தியாகராஜ பாகவதரும் எந்நேரமும் வீட்டில் சில்க்ஜிப்பா அணிந்து கொண்டுதான் இருப்பார். 1982ஆம் ஆண்டு வரை வாழ்ந்த கலையரசருக்கு சீடர்கள் இறுதிவரை மிக விசுவாசமாக இருந்தனர்.

'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை' என்று பாடிய தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் சூழல் இவருக்கு ஊக்கம் தந்தது. புலவர் தான் கற்பித்த பாடசாலைச் சிறுவர்களுக்காக எழுதி மேடை ஏற்றிய 'உயிரிளங்குமரரன்' நாடகம் 1936 ஆம் ஆண்டில் நூல் உருப்பெற்றுப்பரவியது.


ஆனால் தூய சைவ சித்தாந்தக் கொள்கை நாடகமாகும். பாடல்களும் நிறைய. எந்த வகை நாடக உரு ஆக்கத்திற்கும் இது சிறிது உதவியது. எந்த ஒரு ஆசிரியருக்கும் நடிக்கத்தெரிதல் ஒரு வரைவு இலக்கணமே. இது ஆங்கிலக் கல்வியில் அபரிதமாக வளர்க்கப்பட்டது.

அன்னியர் ஆட்சியில் இம்முறை உத்தேவகம் கண்டது. சொர்ணலிங்கம் அவர்கள் அகவை நாலிலேயே நாடகத்தில் ஈர்க்கப்பட்ட செய்தியை அவரே தெரிவித்து உள்ளார். கல்வியும் தொடர பாடசாலையில் நாடக ஆற்றலும் வளர வழியேற்பட்டது. வசதியான குடும்பமாதலால் ஊக்கமும் நண்பர்கள் ஆக்கமும் கிடைக்க வழிசமைத்தது.

அக்காலத்தில் ஊர்காவற்துறைக்கு,கோடிக்கரையிலிருந்து வியாபாரத்திற்கு அழகான கொம்புகள் உள்ள 'வடக்கண் எருதுகள்' என்று சொல்லப்படும் எருதுகளை விற்பனைக்குக் கொண்டு வருவர். அக்குழுவில் நடிகர்களும், பாடகர்களும் இருப்பர். அவர்களின் தொடர்புகள் மூலம் கலையரசருக்கு நூல்களும் ஒப்பனைப் பொருட்களும் கிடைத்தன.

எனது அண்ணா பொ.முத்துக்குமரன் கலையரசருடன் கொண்ட நட்பின் பேறாக அரிச்சந்திரன், நல்லதங்காள் போன்ற நாடகங்களில் எனக்கும் நடிக்கும் சந்தர்ப்பம், பாட்டுப்பாட முடிந்ததால் கிடைத்தது. கலையரசரின் மதிப்பும் மரியாயதையும் பெருமையும் படிப்படியாக வளர்ந்தது. கல்விமான்கள், உத்தியோகத்தர் எனப் பலரும் அவருக்கு நல்ல ஆதரவு நல்கினர். யாழ் றோயல் தியேட்டர் மேடை, கல்விக்கூட மேடைகள், ஆலய முன்றில்கள், சன சமூக நிலையங்கள் என எல்லா மேடைகளிலும் கலையரசு குழுவினரின் நாடகங்கள் மேடை ஏறத் தவறவில்லை.

தலைநகர் வரை நாடக பயணம் தொடர்ந்தது. இவரது குழுவில் பலர் கொழும்பிலே உத்தியோகம் பார்த்த ஆட்களாயிருந்ததால் கொழும்பும் பழகி விட்டது. தென்னிந்தியக் கலை வல்லுனர்கள் கொழும்பு, கண்டி, மாத்தளை, பதுளை போன்ற பல இடங்களில் நாடங்களை



நடத்தினர். சுப்பையா பாகவதர், தியாகராஜ பாகவதர், கிட்டப்பா சுந்தராம்பாள், என்.எஸ் கிருஷ்ணன் குழுவினரும் பிற்காலத்தில் ஆர் எஸ்.மனோகர் (இளங்கேஸ்வரன்) மற்றும் டி.கே.எஸ்.சகோதரர்கள் குழுவினர்கள் ஆகியோரது நாடகங்களும் நடைபெற்று ரசிகர்கள் கூட்டமும் பெருகிய காலம் அது. இவர்களுடன் போட்டி போடக்கூடியதாக கூனிபாத்திரமும் 'வெனிஸ் வணிகன்' நாடகத்தில் ஷைலொக் பாத்திரமும் கலையரசரை உச்சிக்கு எழுப்பி விட்டது.

ஷைலொக் பாத்திரம் மிக மிகப் பேசப்பட்ட ஒன்றாகும். ஷைலொக்கின் உடை அலங்காரமும் சூது நிறைந்த வாதமும் தோற்ற போது விட்ட பெருமூச்சும் இலக்கிய ரசிகர்களைக் கிறங்க வைத்ததுமன்றி ஷேக்ஸ்பியரின் இந்த நாடகத்தை தேடிப்படிக்க வைத்தது.

அன்று புகழ் பூத்த புலவர்கள் எழுதிய நாடகங்களில் பாடல்கள் அதிகம். இசை நாடகச் சாயல் எனலாம். கூத்தாக இருந்தது இசை நாடகமாகி, கலையரசரின் தோற்றத்தில், பின் மேடை நாடகம் 'டிறாமா' வாக நடைபெற்றது. கூத்தும் இசை நாடகமும் பாடவல்லவர்கள் இருந்தால், நாடகம் தீப்பந்த ஒளியில் தொடங்கி, விடிய விடிய நடைபெறும்.

சித்திரை மாதமெனில் பத்தரைக்கு நித்திரை வருவது இயல்பு. ஆனால் 'கோமாளி' ஒரு தொங்குத்தொங்கி துள்ளல் பாட்டுப்பாடினால் தூக்கம் பறந்து விடும்.


அமரர் கலைமாமணி
பொன்.தெய்வேந்திரன் அவர்கள்
கலைக்கேசரிக்காக முன்னர் எழுதிய
கட்டுரை

கோமாளி பின்னர் பபூனாக மாறி நகைச்சுவை மன்னன் என்று பெயர் மாற்றம் பெற்றது. அக்கால 'பபூன்' வேடம் தரித்தவர் பெயருக்கு முன் பபூன் அடை மொழி இருக்கும். இவையாவற்றையும் காலம் அறிந்து நாடகத்தில் சேர்த்ததால் நாடகங்களும் இந்திய தரத்திற்கு அமைவாக இருந்தன.

கலையரசர் நாடகத்தை ஒரு ஊடகமாக்கி அவ்வப்போது இலகு தமிழில் நல்ல கருத்துக்களையும் புகுத்தியிருந்தார். பம்மல் சம்பந்த முதலியார், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகங்களும் இவரது நாடக வளர்ச்சிக்கு ஏதுவாக இருந்தன. கூத்துக் காலத்தில் மரப்பொம்மைகளை உருவகப்படுத்திப் பூட்டி ஆடினார்கள். கலையரசு காலத்தில் அண்மனை, வீடு, தோட்டம், ஆலயம் என்பன சீலைளில் பல வர்ணக் கலர்களால் வரையப்பட்டு, மேடையில் பாவித்தனர். ஒளியும் மெல்ல மெல்ல காஸ்லைற் பிரயோகமாக மாறியது.

இவரது காலத்திற்கு முந்திய கூத்துக்கள், ஊர்களில் உள்ள பாரிய வேம்பு, புளி போன்ற மரங்களில் நீள வடக்கயிறுகளில் 4இல் இருந்து 6 வாங்குகள் வரை பிணைத்துக்கட்டி அதை மேடையாக்கி ஆடி வந்தனர்.

பின் 'டிறாமா' சாயல் வந்ததும் சீன், ஒப்பனை, பாட்டு, பக்கவாத்தியமாக ஆர்மோனியம், மிருதங்கம், டோலக் கெஞ்சிரா ஆகியவற்றைப் பாவித்துக் கலகலப் பாக்கினர். ஆரம்ப காலத்தில் வங்காசுபேத விலாசசபா என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் கலையரசு, சுப்பிரமணியம், டாக்டர் கதிரவேலு, எஸ். மனுநாயகம், இரத்தினம் போன்றவர்களுடன் கையேயி சரவணமுத்துவும் வேறு பலரும் முக்கிய உறுப்பினராயிருந்தனர்.

இவர்கள் யாவரும் நடிகர்களே. சமூக அந்தஸ்த்தும் நன்கு கிடைத்தது. பணியும் பணமும் சுலபமானது குத்தகையாக வாகனமும் அமர்த்தப்பட்டது. குடா நாடு முழுவதும் வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டுநகர், கொழும்பு என்று எங்கும் நாடகம் நடைபெற்றது.

1945க்குப் பின் மிகமிகப் பிரபலமானது இவரது நாடகங்கள். ஓவியக்கலை நிபுணர் சானாவும் K.K.V செல்லையாவும் இவருடன் சேர்ந்தனர். அரிச்சந்திரா மயானக் காட்சியைக் கண்டவர்கள் சபையில் கதறி அழுதனர்.

கூனி, ஷைலொக், கையேயி, தேரோட்டிமகன் ஆகிய நாடக பாத்திரங்கள் பெரு வரவேற்பைப்பெற்றன.







சரவணமுத்து அவர்கள் தையல் நாயகி அச்சக உரிமையாளரானார். அதனால் விளம்பரங்கள், ஒப்பனைக்குரிய காட்போட் கிறேப் பேப்பர், மினுங்கல் பேப்பர், காக்காய் பொன் ஆகியன சுலபமாகக் கிடைத்தது. கலையரசு குழுவும் சரவணமுத்து குழுவும் இணைந்தும் நாடகங்களை நடத்தின. கலையரசுவின் ஆங்கிலப் புலமையால் ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் தமிழாக்கம் பெற்றன. நல்ல குரல்வளமுள்ள பாடகர்கள் வாத்தியக் காரர்கள் பிற்பாட்டுக்காரர் ஆகியோரை கலையரசரே தெரிவு செய்வார்.

கோடையிடி தம்பாப்பிள்ளை சங்கரன், விஸ்வநாத சர்மாகணேசு ஆகியோர் பக்க வாத்தியத்தில் முக்கிய மானவர்கள். பிற்காலத்தில் லைற் என்ஜின்களை மூளாய் முருகேசு, சண்டிலிப்பாய் ஐயா ஆகியோர் உதவினர். 50ஆம் ஆண்டுக்குப்பின் கலர் லைற்றும் பூட்டி நடித்தனர். இத்தனைக்கும் முக்கிய காரணம் கலையரசரின் ஆளுமையே.

அவரது வாய்மை, தூய்மை, ஒழுக்கம், பண்பு, அன்பு எனில் மிகையாகாது. ஒத்திகையில் கண்டிப்பு, நாடகம் வெற்றி பெற்றதும் பாராட்டு. ஒரு உயிரமாயினும் பாத்திரத்திற்கேற்ப உடம்பை எப்படி குறுக்குவாரோ கூனியும் ஷைலொக்கும் அத்தன்மையதே.

இன்னுமொரு பண்பு கலையரசு ஐயாவின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்தது. அவரது குடும்பத்தின் ஒத்துழைப்பு ஆகும். உற்றார் உறவினர், நண்பர்கள், நடிகர்கள் வீட்டு நன்மை தீமைகளில் தவறாது பங்கு கொள்ளல் ஆகியவையும் கேட்டவர்களுக்கு உதவும் பண்பும் மக்கள் மனதை வசீகரிக்க வைத்தது. இலவச தேனீருடன் தாராளமான ஒத்திகைகளும் வேடம் அணிந்த வெள்ளோட்டமும் பிற்காலத்தில் தவறாது செய்தார்.

தன்னில் நம்பிக்கை வைக்கும் படியாக நடந்து கொண்டதால் அரை நூற்றாண்டு காலம் எவ்வித தடையுமின்றி இடை விடாது நாடகம் நடைபெற்றது. தங்கத் தாத்தாவின் சூழலல்லவா? இலக்கிய நாடகங்களில் இலக்கியத் தமிழைக் காணலாம்.

ஆங்கிலத்தழுவல் நாடகங்களும் அத்தன்மையதே. பாடல்களைக் குறைத்தார். விடிய விடிய கூத்துப்பார்த்த போதிலும், சலிப்படையாதிருக்க நேரத்தையும் மட்டுப் படுத்தி காட்சிகளையும் கட்டுப்படுத்தி விறு விறுப்பாக்கி தனது சிறந்த இயக்குனர் தன்மையை வெளிப்படுத்தியதால் கல்வி மான்கள் அதிபர்கள், பல்தொழில் வல்லுனர்கள் புகழத்தொடங்கினர்.

விரும்பியும் நாடகம் பார்த்தனர். குடாநாட்டில் அனேக கிராமங்களில் இவரது நாடகங்கள் இடம்பெறத் தவறவில்லை. இவரை நாடகத் தந்தை என்றே அழைத்தனர்.

இவரது ஆங்கில நாடகத் தமிழாக்க வாணிபுர வணிகன் பாதுகாபட்டாபிஷேகம், பாமா சபதம், அரிச்சந்திரா, இழந்த காதல், அசட்டு வேலைக்காரன், உடையார் மிடுக்கு, தேரோட்டி மகன் (இவைகொழும்பிலும் மேடை ஏற்றப்பட்டன) மனோகரா, எல்லாள அரசன், வேதாள உலகம், விரும்பிய விதமே, சாரங்கதாரா போன்றவை புகழை ஈட்டிக் கொடுத்தன.

பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களையே இவர் தெரிவு செய்தார். ஒவ்வொருவரும் தொழில் வாய்ப்புப்பெற்று வெளியேறும் நிலையில் அவர்களை அவரணைத்து ஆசீர்வதித்து பாராட்டியே அனுப்புவார். தூய வெள்ளை வேட்டி, நாஷனல் மெல்லியகரை போட்ட அங்கவஸ்திரம் பிற்காலத்தில் பிரமுகர் ஒருவர் அன்பளிப்புச் செய்த சந்தன ஊன்று கோலுடன் கம்பீரமான, நிமிர்ந்த நடையுடன், கூர் விழிகளால் எம்மை நோக்கின் எமது வாய் அடைபட்டு விடும்.

எனது நாடகக் குருவான நவாலி செல்வத்துரை (ஆசிரியர்) அவரது மாணவன். மேலும் நடேசன், ரகுநாதன், (திரை நாடகக் கலைஞர் - கடமையின் எல்லை) சானா, K.K.Y மேலும் பலர்.

ரகுநாதன் அவர்கள் இறுதிவரை அவருடனேயே குழுவில் இருந்தார். எம் நாடகப்பரம்பரை அவரை மறக்கவில்லை. 82 வரை நாடகத்தில் ஒரு நிலையரசை நிலைநாட்டி, வளர்ச்சி குலையாமல் காத்த பெருமை கலையரசு கே.சொர்ணலிங்கம் ஐயாவையே சாரும்.

# "குறையொன்றுமில்லை இசைக்கு"

சில வருடங்களுக்கு முன்பு செம்மங்குடி சீனிவாச ஐயர் அவர்களுடன் ஒரு சங்கீத விழாவில் கலந்து கொண்ட நல்லி குப்புசாமி செட்டியார் ''அடுத்த ஜென்மத்தில் சங்கீத வித்வானாகப் பிறக்க விரும்புகிறேன்'' என்றார். பிரபல பட்டுத் தொழிலதிபரான அவருக்கு அந்த அளவுக்கு இசை ஆர்வம் உண்டு. அவரை அடுத்துப் பேசிய செம்மங்குடி சீனிவாச ஐயர், ''சங்கீத வித்வான்கள் அடுத்த ஜென்மத்திலும் அதிகம் பிறக்கலாம். எங்களுக்கு போஷகர்கள் கிடைப்பதுதான் கஷ்டம். எனவே இந்த ஜென்மம் போல்





நீங்கள் அடுத்த ஜென்மத்திலும் போஷகராகவே இருக்கக் கடவது என்று ஆசிர்வதிக்கிறேன். நீங்களும் வித்வானாகி விட்டால் நாங்கள் போஷகருக்கு எங்கே போவது?'' அப்படி ஒரு பிதாமகர் வித்வானால் புகழப்பட்ட கலா போஷகரான பத்மஸ்ரீ, கலைமாமணி நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களுடன் ஒரு பேட்டி.

**தங்களுக்கு இசை ஆர்வம் எப்படி எப்படி ஏற்பட்டது என்று சொல்ல முடியுமா?**

''நான் 1956-ல் குடும்ப ஜவுளி வியாபாரத்திற்கு வந்தேன். அப்போதும் எங்கள் கடை இதே இடத்தில்தான் இருந்தது. தெருவில் கடைசிக் கட்டடத்தில் ஸ்ரீ கிருஷ்ண கான சபா இருந்தது. அப்பொழுது தி. நகர் மிகவும் அமைதியான பகுதி. சத்தம் சந்தடி கிடையாது எங்கள் கடை வாசலில் நின்று கொண்டிருந்தால் நான்கு கட்டடங்கள் தாண்டியிருந்த ஸ்ரீ கிருஷ்ணகான சபாக் கச்சேரிகளைத் துல்லியமாக கேட்கலாம். என் சித்தப்பா ரெங்கசாமி செட்டியார் ஆஸ்திக சமாஜம், ஸ்ரீ கிருஷ்ண கான சபா ஆகிய அமைப்புகளில் உறுப்பினராக இருந்தார். அவருடனும் சில நிகழ்ச்சிகளுக்குச் செல்வேன். இப்படித்தான் இசை ஆர்வம் பிறந்தது. சபாக்காரர்களும் பழக்கமானார்கள்.

**இப்போது எந்தெந்த சபாக்களில் தலைவராக இருக்கிறீர்கள்?**

ஸ்ரீ கிருஷ்ணகான சபா, ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபா, முத்ரா, பைரவி, பிரம்மகான சபா, சென்னை கல்ச்சுரல் அகாடமி, மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப், இன்னும் சில.

**ஒவ்வொரு சபாவுக்கும் தனிச் சிறப்பு என்னவென்று சொல்ல முடியுமா?**

சொல்லலாமே. ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி சபா தொடங்கப்பட்டு 112 வருஷங்களாகி விட்டன. சென்னையின் மூத்த கலை அமைப்பு. நாட்டின் புராதன அமைப்பு என்றும் சொல்லலாம் அவ்வளவு பழமையானது. வருடா வருடம் ஜீயர்கள், சைவ சமய ஆச்சாரியர்கள் என்று சமயத் தலைவர்கள்தான் சிறப்பு விருந்தினர்களாக

விழாவைத் தொடங்கி வைக்கிறார்கள். இதன் நூற்றாண்டு விழாவில் என் வேண்டுகோளை ஏற்றுக் கச்சேரி செய்தவர் ஸ்ரீ செம்மங்குடி சீனிவாச ஐயர். அப்போது அவருக்கு வயது 92. அந்த வயதிலும் இரண்டரை மணிநேரம் நன்றாகக் கச்சேரி செய்தார்.

'முத்ரா' என்பது 15 வருடங்கள் நிரம்பிய இளம் சபா. ஸ்ரீபாஸ்கர் என்ற மிருதங்க வித்வானும் அவரது மனைவி ஸ்ரீமதி ராதா என்கிற விதூஷியும் தம்பதியாக இதை நடத்தி வருகிறார்கள். இவர்கள் எல்லா வயதினரும் ரசிக்கும்படி பல புதுமையான நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். இவர்கள் நடத்திய பள்ளிச் சிறுவர் சிறுமியர் பங்குபெற்ற ஒரு விழாவுக்கு அப்போது ஜனாதிபதியாக இருந்த அப்துல் கலாம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஸ்ரீகிருஷ்ண கான சபாவின் சிறப்பு பற்றிச் சொல்கிறேன். இது சஷ்டியப்த பூர்த்தி சபா. இதில் சுமார் 50 வருடகாலம் செயலாளராக இருந்தவர் என் மதிப்பிற்குரிய நண்பர் பெரியவர் ஆர். யக்ஞராமன் அவர்கள். இந்த சபாவை வளர்த்த பெருமை முழுவதும் அவரையே சாரும். ஒரு காலத்தில் எருமைமாடுகள் சேற்றில் புரண்ட இடம் கிரிஃபித் சாலையின் ஓரம் அந்தப்பகுதியில் இப்போது ஒரு கோயிலின் சாந்நியத்துடன் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட கலை அரங்கு உருவாகி வருகிறது.

ராஜா அண்ணாமலை மன்றம் புதுப்பிக்கப்பட்ட போது சில மர பெஞ்சுகளையும் சோபாக்களையும் ஏலத்தில் வாங்கினோம். அவற்றில் அந்தக் காலத்தில் எத்தனை பெரிய மனிதர்களும் கலைஞர்களும் கலா ரசிகர்களும் அமர்ந்திருப்பார்கள் என்று யோசித்துப் பார்க்கும் நாங்கள் அவற்றைப் புனிதமான பொக்கிஷங்களாகவே கருதுகிறோம்.


**கிருஷ்ண கான சபா போல் பிற சபாக்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் உண்டா?**

சிலவற்றிற்கு உண்டு. பலவற்றிற்கு இல்லை. நாரதகான சபா அரங்கு நகரின் மையப் பகுதியில் உள்ள பிரம்மாண்டமான அரங்கு. செயலாளர் ஸ்ரீ கிருஷ்ணசாமி மற்றும் அவரது நண்பர்களின் முயற்சியினால் உருவானது அது. சொந்த கட்டடங்கள் உண்டா இல்லையா ஒருபுறம் இருக்கட்டும். ஒரு காலத்தில் தி.நகரில் சபாக்களே இல்லை என்ற நிலைமை இருந்தது. சுமார் அறுபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு மயிலாப்பூரில் ஒரு கச்சேரியில் கலந்து கொண்ட பிறகு தி. நகர் வருவதற்குள் மழையில் நனைந்து விட்ட ரசிகர்களைக் கண்டு வருந்திய ஒரு பிரபல நடிகர் அந்த ரசிகர்களைத் தன் காரிலேயே அழைத்துச் சென்றார், எல்லா நபர்களையும் அழைத்துச் செல்ல அந்த இரவில் மூன்று முறை அவர் தன் காரைப் பயன்படுத்தினார். அவர்தான் பிரபல குணசித்திர நடிகர்




புகழ்பெற்ற திரைப்பட நெறியாளர் எஸ்.பி. முத்துராமன் மற்றும் நெல்லி குப்புசாமி செட்டி ஆகியோர் பிரபல எழுத்தாளர் ரி.எஸ்.ஸ்ரீதருக்கு கிருஷ்ண கான சபாவில் விருது வழங்கிய போது எடுத்த படம்.







சித்தூர் வி. நாகையா. மழையில் நனைந்த கலா ரசிகர்களைக் கண்டு அனுதாபப்பட்ட நடிகர் நாகையாவுக்கு கவலையினால் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலையில் முதல் வேலையாக தி.நகரில் ஒரு சபா தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இரண்டு நண்பர்களிடம் பேசினார். ஒருவர் டாக்டர் வி. ராம ஐயங்கார். மற்றவர் ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார். பிரபல சரித்திர நாவலாசிரியர் 'சாண்டில்யன்.' இவர்கள் 1944ல் தொடங்கியதே தியாகபிரம்ம கான சபா. இன்று வாணிமஹால் என்ற கட்டடத்தின் பெயர் சபாவை விட பிரபலமாகி விட்டது. சமீபத்தில் ரூ.1.12 கோடி ரூபாய் செலவில் அந்தக்கட்டடம் புதுப்பிக்கப் பட்டது. என்னுடன் படித்த வக்கீல் கிருஷ்ணமாச்சாரிதான் அந்த சபாவின் செயலாளர்.


சொந்தக் கட்டடங்கள் அமையாமல் இருப்பதற்கு நிதிப் பற்றாக்குறை முக்கிய காரணம். அடுத்தது நகரின் மையப்பகுதிகளில் மனை தேவைப்படும். அதுவும் இப்போது சிரமம். மேலும் அந்த சபா வருஷம் பூராவும் நிகழ்ச்சி நடத்துவதாக இருந்தால் சொந்தக் கட்டடம் தேவை. சீசனுக்கு மட்டும் என்றால் வாடகைக் கட்டடங்கள் போதும். நூறு வயதைத் தாண்டிய சபாவாகிய ஸ்ரீபார்த்தசாரதி சபாவுக்கே சொந்தக் கட்டடம் இல்லை. முத்ராசபாவின் நிகழ்ச்சிகள் ஸ்ரீராமகிருஷ்ணா மெட்டிரிகுலேஷன் பள்ளியில் உள்ள இன்ஃபோசிஸ் கலையரங்கத்தில் நடைபெறுகின்றன. இதைக் கட்டிக் கொடுத்தவர் இன்போசிஸ் அறக்கட்டளைத் தலைவரான ஸ்ரீமதி சுதா மூர்த்தி. இதே போல் ஆள்வார்

பேட்டையில் எம்.சி.டி பள்ளியில் பெத்தாச்சி அரங்கம் என்ற அழகான அரங்கம் இருக்கிறது. அதில் ஸ்ரீ பிரம்மகான சபா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இனி சபாக்கள் தமக்கெனக் கட்டிடங்கள் கட்ட முன் வரலாம். இப்போது நிகழ்ச்சிகளை ஸ்பொன்சார்கள் கிடைப்பது போல விரைவில் கட்டிடங்களுக்கும் ஸ்பொன்சார்கள் கிடைப்பார்கள் என்று நம்புகிறேன். கீழே கலையரங்கு. மாடித் தளங்களில் அலுவலகங்கள் என்று புதிய கட்டடங்கள் உருவாகலாம். கலையரங்குக் கட்டடங்களில் அலுவலகங்கள் இருந்தால் அமைதிக்குப் பங்கமில்லை. ஆனால் கடைகள் வந்துவிட்டால் அமைதி கெட்டுவிடும்.

**சபாக்களின் வளர்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இப்போது அதிக சபாக்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதே நேரம் இளைஞர்கள் அதிகமாகக் கச்சேரிகளுக்கு வருவதில்லை என்றும் சொல்கிறார்களே. இது ஒரு முரண்பாடாகத் தோன்றவில்லையா?**

முரண்பாடு என்று சொல்லமாட்டேன். சபாக்கள் நிறைய உருவாகியிருக்கின்றன என்பது உண்மை. அதுபோல இளம் வயது இசைக்கலைஞர்கள் அதிகம் இருக்கிறார்கள். கம்ப்யூட்டர், இண்டர்நெட், பாடச்சுமை, போக்குவரத்து வசதிகள் போன்ற பல காரணங்களினால் இப்போது இளைஞர்கள் அதிக அளவு பாரம்பரிய நிகழ்ச்சிகளுக்கு வராமலிருக்கலாம். பிறகு வருவார்கள் என்றே நம்புகிறேன். அப்போது அவர்கள் நடுத்தர வயதினராகிவிடலாம். அதனாலென்ன அந்தந்த வயதுக்கென்று ரசனைகள் இருக்கின்றன. இவரது நம்பிக்கை நிறைவேறவேண்டும் என்று வாழ்த்தி விடைபெற்ற போது சென்னையில் கலை உலகத்தை இவரது பார்வையில் கண்டுகளித்த பரவசம் ஏற்பட்டது.


**பேட்டி: ஆர். நடராஜன்**

















## சென்னை திருவையாறு இசைத் திருவிழா

சென்னை திருவையாறு, இசைத் திருவிழா காமராஜர் அரங்கில்
சிறப்பாக நடைபெற்றது. அதில் சில காட்சிகள்.
புல்லாங்குழல் கலைஞர் சசாங் புல்லாங்குழல் வாசிக்கிறார்.
காயத்திரி அவர்களின் கர்நாடக இசைக்கச்சேரி.
கலைஞர் சவும்யா கர்நாடக இசைக்கச்சேரி செய்கிறார்.
உன்னி கிருஷ்ணனின் அவர்களின் கர்நாடக இசைக்கச்சேரி
சுதா ரகுராமன் கர்நாடக இசைக்கச்சேரி செய்கிறார்.
லலிதா நந்தினி வயலின் இசைக்கிறார்கள்.
(சென்னை வீரகேசரி காரியாலயம்)
















# உணவே மருந்து

டாக்டர் (திருமதி) எஸ்.விவியன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துவம்
யாழ்.பல்கலைக்கழகம்.

சித்த மருத்துவம் தமிழர்களின் வாழ்க்கை முறையையும் சமய, கலாசாரத்தையும் அடித் தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதால், அதில் பாரம்பரியமான சிறந்த உணவுப் பழக்க வழக்கங்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. எனவே தமிழர்களின் உணவு முறைகளில் மருத்துவ சம்பந்தமான பல உண்மைகள் அடங்கியிருப்பதில் வியப்பேதும் இல்லை. மக்களின் நாளாந்த வாழ்க்கையிலும், நோய் நிலையிலும் உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உரிய உணவு முறைகளைச் சித்த வைத்தியம் நிறையவே போதித்துள்ளது.

நல்ல ஆரோக்கியமான உணவை உட்கொள்ளுதல் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். ஆகாரம், நல்லுறக்கம், நெறிப்படுத்தப்பட்ட தாம்பத்திய வாழ்க்கை இவற்றை வாழ்க்கையின் முக்கிய மூன்று தூண்களாக ரிஷிகள் பல இடங்களில் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் உணவு இன்றியமையாது ஆகும். ஸ்தூல பிராணனான உணவானது சூட்சும பிராணனை உடலில் நிலை நிறுத்த உதவுகிறது. உணவில் பொதுவாக அறுசுவைகளும் இன்றியமையாதவை ஆகும். அதிலும் கைப்புச் சுவை உள்ள உணவுகளை கட்டாயம் சேர்த்துக் கொள்ளல் அவசியம். கைப்புச் சுவையான உணவுகள் எமது உடற் கலங்களில் ஏற்படும் தேய்மானங் களை புதுப்பிக்க அவசியமாகின்றன.

மேலும் சாப்பிடுகின்றவற்றை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். பழைய காலத்தில் இருமுறை உணவுப் பழக்கமே இருந்துள்ளது. இப்பொழுது அது பலமுறையாக மாறிவிட்டது. உண்ணும்போது கீழ்கண்ட கருத்துக்களை மனதில் வைத்திருப்பது நல்லது. 'உணவை சாப்பிடும் போது எப்படிச் சாப்பிட வேண்டும்' என சித்த மருத்துவம் அழகாக எடுத்துரைக்கிறது.





பத்தியமான உணவையும், அபத்தியமான உணவையும் ஒருவன் கலந்து சாப்பிட்டால் அதற்குச் 'சமாஸனம்' என்று பெயர் ஆகும். 'சமாஸனம்' என்றால் உடம்புக்கு வேண்டிய உணவையும், தோஷம் தரக்கூடிய உணவையும் சேர்த்து தாறுமாறாகச் சாப்பிடுவது. 'அத்யஸனம்' என்றால் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுதல் (Overeating). பட்டினியால் ஏற்படுவதைவிட, அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதாலேயே நோய்கள் அதிகளவில் ஏற்படுகின்றன என்பதுதான் உண்மை.

'விஷமாஸனம்' என்றும் ஒன்று இருக்கிறது. அதாவது உணவை விஷமாகச் சாப்பிடுவது. எந்த நேரத்தில் சாப்பிட வேண்டுமோ அதை விட்டு விட்டு அகாலத்தில் சாப்பிடுவது 'விஷமாஸனம்' ஆகும். அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவது, குறைவாகச் சாப்பிடுவது அல்லது ஒழுங்கீனமாக உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவது ஆகிய மூன்று பழங்க வழக்கங்களையும் தவிர்க்க வேண்டும்.

> ***தமிழர் பாரம்பரியம் மற்றும் சித்த மருத்துவ முறைப்படி ஆரோக்கியமாக வாழ்வதற்கு எந்த வகை உணவைச் சாப்பிட வேண்டும்? உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.***

ஆரோக்கிய நிலையில் ஒருவருக்கு தரமான போசாக்குணவு எவ்வளவு அவசியமோ அதேபோன்று நோயுற்ற நிலையில் பத்திய உணவு அவசியமாகின்றது. நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நோய்களைப் பொறுத்த வரையில், மருந்துகளிலும் பார்க்க ஒருவர் தனது உணவு முறைகளை மாற்றி அமைத்துக் கொள்வதே சிறந்தது. அதனால் குறிப்பிட்ட நோய் மேலும் விருத்தியடையாமல் தடுக்கப்படும். இதில் நீரிழிவு, குடற்புண், மூல நோய்கள், வாத நோய்கள் போன்றன அடங்கும்.

அக்னி வாயுவாகிய பகவானுக்கு நாம் அளிக்கக்கூடிய உணவானது அன்ன ரஸமாக மாறி அது உடலுக்கு புஷ்டியைத் தருவது மட்டுமல்லாமல் மனோபாவத்தையும் பாதிப்பதால் சாப்பிடும் முறையை சிரத்தையுடன் செய்ய வேண்டும். மேலைநாட்டிலே சாப்பிடுவது என்பது சமூக நிகழ்வு (Social Event) ஆகிவிட்டது. வெளி இடங்களில் கூடிப் பேசிக் கொண்டே சாப்பிடுவார்கள். ஆனால் நம் நாட்டில் அது ஒரு சமயாசார நிகழ்வு (Ritual act). அமைதியாக உட்கார்ந்து பரமாத் மாவைத் தியானித்து, ஒவ்வொரு கவளத்தையும் தெய்வமாக மதித்து சாப்பிடுதல் வேண்டும். சாப்பிடும்போது முதல் கவளத்தை நெய் கலந்து சாப்பிட வேண்டும். வயிற்றில் உள்ள அக்கினியை முதலில் நெய் விட்டு உத்தீபனம் செய்ய வேண்டும். கொழுப்புச் சத்து சேரக்கூடாது என்ற விழிப்புணர்ச்சி தேவைதான். ஆனால் உடலில் மிதமான அளவில் எண்ணெய் பசை இருக்க வேண்டும்.





இரைப்பையில் நான்கில் இரண்டு பகுதியில் அன்னத்தையும் ஒரு பகுதியில் பானத்தையும் நிரப்பவேண்டும். மற்றுமொரு பகுதியை வாயுவுக்கு விட்டு விட வேண்டும். சாப்பிட்ட பின்புதான் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன்னாலோ, இடையிலோ குடிக்கக் கூடாது. 'இடையில் குடியேல் கடையில் மறவேல்' என்பது முன்னோர் வாக்கு. முற்காலத்தில் குடி நீரை நன்கு கொதிக்க வைத்து ஆறியதும் இறக்கி ஒரு மண் பானையில் இட்டு சிறு துண்டு சுக்கு, துளசி இலை என்பவற்றை போட்டு மூடி வைப்பார்கள். இது பருகு வதற்கு இலேசாகவும் ஆரோக்கியத்தைப் பேணவும் உதவும்.



*'நீர் கருக்கி மோர் பெருக்கி*
*நெய்யுருக்கி உண்பவர் தம்*
*பேருரைக் கப்போமே பிணி'*

என்ற பாடல் வரிகள் இங்கு நோக்கத்தக்கது. அதாவது நீரை









நன்கு கொதிக்க வைத்து (கருக்கி), மோரை நன்கு நீர் விட்டு கரைத்தும் நெய்யை உருக்கியும் உண்டால் பிணி வராது என்பதாகும். சற்று இளஞ்சூடான நிலையில் அருந்தும் நீரை 'உஷ்ணோதகம்' என்பர். இதன் குணங்கள் ஐடராக்கினியை தூண்டுதல், பசியை விருத்தியாக்கல் (தீபனம்), ஆகாரங்களை நன்கு ஜீரணமடைய உதவுதல், சிறுநீர் மார்க்கத்தில் உண்டாகும் தோஷங்களை போக்கி சிறுநீரை தாராளமாக வெளியேறச் செய்தல், தொண்டைக் கோளாறுகளை போக்கித் தொண்டைக்குப் பலத்தைக் கொடுத்தல் என்பதாகும். இதன் பயனாக விக்கல், வயிற்றுப் பொருமல், கபரோகம், வாதரோகம் முதலியன மாறும்.

பானங்களைக் குடிப்பதற்கு ஒரு விசேட முறை உள்ளது. அதை 'அனுபானம்' என்று கூறுவோம். மாப்பண்டங்கள் சாப்பிட்டால் உஷ்ணஜலம் சாப்பிட வேண்டும். பயறு வகைகள் சாப்பிட்டால் தயிர், நீர் மோர் சாப்பிட வேண்டும்.

கொழுப்புணவு சாப்பிட்டால் குளிர்ந்த ஜலம் பருக வேண்டும். உடல் பருத்துள்ளவர்கள் சாப்பிட்டதும் நீரில் தூய தேன் கலந்து சாப்பிட உடம்பு குறையும். உணவைச் சாப்பிட்டதும் நீர் குடிப்பதால் கெட்டியான உணவு குழைந்து ஜீரணமாக உதவும்.

சாப்பிட்ட உடனே சிரமமான வேலை எதையும் செய்யக்கூடாது. நாற்பந்தைந்து நிமிடங்கள் வரை ஓய்வு எடுத்து விட்டு மற்ற வேலைகளில் ஈடுபட வேண்டும். நாம் உண்ணும் உணவு எத்தகைய தன்மை உடையதோ அதுபோலத்தான் நம்முடைய தன்மைகளும் இருக்கும். பரம்பரையாகவே சிலர் சாத்வீகமாக இருப்பதன் காரணம் என்னவென்று பார்த்தால், அவர்கள் உணவு மரபு ரீதியாக சாத்வீகமாக இருப்பதுதான்.

உணவு என்பது உடம்பை போஷாக்குச் செய்வதற்கு மட்டுமில்லாமல், மனநிலையையும் நிர்ணயிக்கிற விடயமாக இருக்கிறதனாலே உணவுப்பழக்க வழக்கங்களில் கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டும். ஒருவன் பால், நெய், கனி, கீரை, பருப்பு வகை போன்றவற்றை மிகச் சரியான அளவில் சாப்பிட்டு வருவானென்றால் அவனுடைய மனநிலை அமைதியாக இருக்கும். சாத்வீகமாகவும் இருப்பான். காரம், புளி, உப்பு, எண்ணெய்ப் பலகாரங்களை அதிகமாகச் சாப்பிடுபவனின் மனநிலை 'ராஜஸிகமாக' இருக்கும். ஆசாபாசங்கள் நிறைந்தவனாக உணர்ச்சி பூர்வமாக இருப்பானாம்.

அசுத்தமானது, புளித்துப் போனது, பழையது, கெட்டுப்போனது போன்றவற்றை சாப்பிடுபவன் தாமஸிகமாக இருப்பான். தாமஸிகம் என்றால் மந்தம். நாம் சாப்பிடும் பொருட்கள் அக்கினியாலே பாகம் செய்யப்பட்டு அன்ன ரஸமாக மாறுகிறது. அதுதான் முதல் ரஸதாது. இந்த ரஸதாதுவிலிருந்துதான் மற்ற இரத்தம், மாமிசம், கொழுப்பு, அஸ்தி, மஜ்ஜை (Marrow), சுக்கிலம் போன்ற தாதுக்கள் எல்லாம் உருவாகின்றன.



சுவைகள் எல்லாம் பஞ்ச பூதங்களின் சேர்க்கையே. அறு சுவை என்பது இரண்டிரண்டு பூதங்களின் சேர்க்கைதான். நாம் சாப்பிடும் உணவானது அறு சுவை மிக்கதாக இருக்க வேண்டும். அறுசுவை உணவென்பது நாம் விரும்பிச் சாப்பிடும் உணவைக் குறிப்பதல்ல. ஒவ்வொரு சுவையும் மனித உடலின் தாதுக்களையும் தோஷங்களையும் (வாத, பித்த, கபம்) பாதிக்கின்றன. எனவே உடல் மனத் தன்மைக்கு (யாக்கை/பிரக்கிருதி) ஏற்ப சாப்பிட வேண்டும். என்றுமே அறுசுவைகளும் சமமாக இருந்தால் வாத, பித்த, கப தோஷங்களை சமமாக வைத்திருக்க உதவும். ஏதாவது ஒரு சுவை கூடியோ குறைந்தோ இருந்தாலும் அது கெடுதலே. சுவைகள் என்பன இரண்டிரண்டு பஞ்ச பூதங்களின் சேர்க்கையே. இனிப்பு, புளிப்பு, உப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு என்பனவே ஆறுசுவை ஆகும். முதல் மூன்று ரசங்களாகிய இனிப்பு, புளிப்பு, உப்பு மூன்றுமே உடலைப் போஷிக்கக் கூடியவை (Nourishing taste) ஆகும். அடுத்துவரக் கூடிய கார்ப்பு,துவர்ப்பு, கசப்பு மூன்றுமே உடலை மெலியச் செய்யும் (Degenerative taste) சுவை ஆகும்.

எனவே இச் சுவையுள்ள உணவுகள் மிகுதியாக அல்லது குறைவாக உணவில் இடம்பெற்றால் 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்ற தத்துவதற்திற்கமைய நோய்கள் ஏற்படும். அத்தகைய நிலையில் எந்தச் சுவை மிகுந்ததால் நோய் ஏற்பட்டதோ அந்தச் சுவையுள்ள உணவுகளை குறைப்பதன் மூலம் நோயை குணமாக்கலாம். அல்லது எந்தச் சுவை குறைவதால் நோய் ஏற்பட்டதோ அந்தச் சுவையுள்ள உணவுகளை வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட தோஷத்தை சம நிலைக்கு கொண்டு வந்து நோயை குணமாக்கலாம்.

உணவிலுள்ள சுவைகள் மனத்தின் முக்குணங்களை வளர்ப்பதிலும் அவசிய மாகின்றமை புலனாகிறது. இனிப்புச் சுவையும் குளிர்ச்சியான சுவையும் உள்ள உணவுகள் சாத்வீக குணத்தை விருத்தி யாக்குவன. புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு சுவையான உணவுகள் உஷ்ண வீரியம் உள்ள உணவுகள் ஆகும். இவை இரஜோ குணத்தை விருத்தியாக்கும். நன்கு சமைக்கப்படாத உணவு, சமைத்து நீண்ட நேரம் வைத்த புளிப்படைந்த உணவு முதலியன சுவை வீரியம் முதலியவற்றில் இயல்புக்கு மாறாக வேறுபடுவதால் ஏமோ குணத்தை விருத்தியடையச் செய்கின்றன. ஆகவே உண வானது உணவாக மட்டு மன்றி ஆரோக்கிய வாழ்விற்குரிய மருந்தாகவும் அமைகின்றது.





# பொய்க்கால் குதிரை ஆட்டம்

**திருமதி. ஷார்மிளா ரஞ்சித்குமார்**
**- விரிவுரையாளர், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.**

'கிராமிய நடனங்கள்' புராதன வழக்காக அல்லது இன்னாரால் ஆக்கப்பட்டவை என்று உணர முடியாத வகையில் நமக்கு வந்துள்ளது. சாஸ்திரீய நடனம் போலல்லாது, அவற்றின் வளர்ச்சிக்கு இலக்கணம் வகுக்கச் சங்கீதகாரர்கள் ஒருவரும் இல்லை. ஒரு தனிக் கவர்ச்சியுள்ளவை. அவற்றைப் பார்த்த மாத்திரத்தில் அவை மகிழ்ச்சியூட்டும்

இந்த நாட்டுப்புற நடனங்களைக் கிராமிய நடனங்கள் என்றும் நாடோடி நடனங்கள் என்றும் அழைக்கின்றனர். இந்த நடன வகைகள் மிகவும் தொன்மை வாய்ந்தவை. மக்கள் மனத்தில் எழும் உணர்ச்சிகளை வெளிப் படுத்துவதற்கு நடனமே முதலில் எளிய சாதனமாய் இருந்து வந்திருக்கின்றது. இந்த ஆடல்களில் இருந்துதான் பின்னர் நாகரிகம் படைத்த ஒவ்வொரு சமு தாயத்திலும் இலக்கண விதிகளையும் காட்சி முறைகளையும் ஏற்படுத்திக் கொண்ட உயரிய சம்பிரதாய நடன வகைகள் உண்டாகி இருக்கின்றன' என்று திரு. கிருஷ்ணய்யர் கலைக்களஞ்சியத்தில் கூறுகிறார்.



**பொய்கால் குதிரை ஆட்டமுறை**

குதிரையின் மீது இருந்து ஆடும் ஆட்டம் இது.

ஆனால் அக் குதிரை பொய்க்குதிரை. அதன் கால்களும் பொய்யானவை. இதனை புரவி ஆட்டம் Dummy Horse Dance என்றும் அழைப்பர். பொய்யான கால்களில் நின்று குதிரையை ஆட்டுவதால் பொய்க்கால் குதிரை என பெயர் பெற்றது என்றும் இயல்பான கால்களால் பொய்யான குதிரையை ஆட்டுவதால் பொய்க் குதிரை ஆட்டம் எனப் பெயர் பெற்றதாகவும் கருத்து உண்டு.

குதிரையின் உருவத்தை அட்டைகளாலும் மூங்கில் கீற்றுகளாலும் செய்து அதைப் பல வண்ணத் துணிகளால் ஒப்பனை செய்வார்கள். அட்டைக் குதிரையின் முதுகுப் பகுதியில் ஒரு மனிதன் நிற்கும் அளவுக்குக் கூடாக இடம் விட்டு வைப்பர். அதற்குள் ஆடுபவர் புகுந்து நின்று குதிரையைப் பிடித்திழுத்து ஆடுவார். கால்களில் மரக் கட்டைகளைக் கட்டிக்கொண்டு குளம்பு ஒலியை எழுப்புவார். கையில் சவுக்கு அல்லது வாள் வைத்திருப்பார். கால்களில் கட்டப்பட்ட சலங்கை இனிய இசையை எழுப்பும்.

குதிரை துள்ளுவதும் மிரள்வதும் பாய்வதும் பார்க்க வேடிக்கையாக இருக்கும். சிலர் புராணக் கதைகளையும் சிவாஜி, கட்டபொம்மன், சின்ன மருது, பெரிய மருது, தேசிங்கு போன்ற வரலாற்றுக் கதைகளையும் ஆடிக் காட்டுவர். இராஜா ராணி வேடங்கள் சிறப்பாக அமையும்.

பொய்க்கால் குதிரையின் ஆட்டம் தனியாகவும் நிகழ்த்தப் படும் அல்லது கரகாட்டத்தின் துணைக் கலையாகவும் நிகழ்த்தப்படுகிறது. பொதுவாக இந்த நடனம் சமயம் சார்ந்த ஊர்வலங்களில் ஆடப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் திருமண ஊர்வலம் விளம்பர ஊர்வலம் தனிப்பட்டவர்களின் ஊர்வலங்களிலும் ஆடப்படுகின்றது. இஸ்லாமிய, கிறிஸ்தவ விழாக்களிலும் தற்போது ஆடப்படுகிறது.

### பொய்கால் குதிரை ஆட்ட வரலாறு


பொய்க்கால் குதிரை ஆட்ட வரலாற்றினை நோக்கு வோமானால் தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் தஞ்சைக்கு வந்து பின் தமிழ் நாட்டின் பிற பகுதிகளுக்குப் பரவியது என்று பொதுவாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

'நாட்டார் நிகழ்த்தும் கலைகள் களஞ்சியம்' எனும் நூலில் ஆசிரியர் இக்கலையைக் குறித்து விரிவாக ஆராய்ந்துகு.முருகேசன் வேறு விதமாக கூறுவதாகக் கூறுகின்றார்.

இவர் ஆய்வு செய்து, இது குறித்த செய்திகளை இக்கலைஞர்களிடம் விவாதித்துள்ளார். நாகப்பட்டனத்தில் வாழ்ந்த அல்லாபிச்சை என்பவர் எழுதிய நாடகத்தில் அப்பாஜி குதிரை மீது வருவதாக ஒரு காட்சி வருகிறது. இந்த நாடகக் காட்சியின் ஒப்பனைப் பொருட்களைத் திருவையாறு இராமகிருஷ்ண நாயுடு என்பவர் வாடகைக்குக் கொடுத்திருக்கிறார். அவர் குதிரையின் முகத்தைக் கல்யாண முருங்கையாலும் உடல் பகுதியை மூங்கில் பிளாச்சுகளாலும் செய்து அதில் வர்ணம் தீட்டி அலங்கரித்திருக்கிறார். இந்தக் குதிரைக் கூட்டில் அமர்ந்து நடப்பதற்குக் கால்









கட்டைகளைத் தேக்கு மரத்தால் தயாரித்திருக்கிறார். இந்த நிகழ்ச்சி 1905-10 அளவில் நடந்திருக்க வேண்டும்.

அப்பாஜி நாடகக் குதிரையே பிற்காலத்தில் பொய்க் குதிரையாக மாறியது என்பது கு.முருகேசனின் கருத்து. முதல் குதிரையைத் தயாரித்த இராமகிருஷ்ண நாயுடுவிடம் கொந்தளம் இசைக்கருவியை இசைக்கும் தொழிலைச் செய்து வந்த தஞ்சை மராட்டியர் ஒருவர் பொய்க்கால் கட்டையை வைத்துக் குதிரைக் கூட்டை ஆடப் பயிற்சி எடுத்தார் என்றும் இதுவே பின்னர் பொய்க்கால் குதிரை ஆட்டமாக வளர்ச்சியடைந்தது என்றும் கு.முருகேசன் கருதுகிறார்.

**ஒப்பனை இசைக்கருவி**

ஆரம்ப காலத்தில் பொய்க்கால் குதிரை ஆட்டத்துக்குரிய இசைக்கருவியாக கொந்தளம் மட்டுமே இருந்தது. கொந்தளம் மராட்டியர்களுடன் தொடர்புடையது. மராட்டியர் நிகழ்த்தும் தோல்பாவைக் கூத்திலும் இந்த இசைக்கருவியே பயன்படுத்தப்பட்டது. பொய்க்கால் குதிரை ஆட்டத்தையும் மராட்டியர்களே ஆடியதால் கொந்தளம் இசைக்கருவி பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பின்னர் கரகாட்டத்தின் துணை ஆட்டமாகவும் தனியாட்டமாகச் சிறப்புடனும் ஆடப்பட்ட பிறகு நையாண்டி மேளக் கருவிகளின் பின்னணியில் இக்கலை நிகழ்த்தப்பட்டது.

இக்கலையை நிகழ்த்தும் ராஜா, ராணி ஆகிய இரு ஆட்டக்காரர்களும் அந்தப் பாத்திரத்திற்குரிய ஒப்பனையைச் செய்து கொள்கின்றனர். ராஜாவாக ஆடுபவர் கிரீடம், வாள் ஆகியவற்றுடன் விளக்கொளியில் மின்னும் வண்ண ஆடைகளை அணிந்திருப்பார். ராஜாவின் இடுப்புப் பகுதிக்குக் கீழே உள்ள பகுதிகள் குதிரைக் கூடாலும் கூட்டின் கீழே தொங்கும் துணியாலும் மறைக்கப்பட்டிருக்கும். எனவே இடுப்புப் பகுதிக்கு மேலே ஒப்பனையில் கவனம் செலுத்துகின்றனர். ராணியாக ஆண் கலைஞர் பெண் வேடமிடுதலும் பெண்ணே ராணியாக வேடமிடுதலும் வழக்கில் உள்ளது. ராணியாக ஆடுபவர் கொண்டை போட்டுக் கொள்கிறார். கழுத்தில் கண்ணாடிக் கல் பதித்த போலி நகைகளை அணிகின்றனர். ஒரே நிகழ்ச்சியில் இடைவெளி விட்டு வேறு உடை மாற்றிக் கொண்டு ஆடவும் செய்கின்றனர்.

**குதிரை செய்யும் முறை**

இக்கலைக்குரிய குதிரை, இந்த ஆட்டத்தில் முதன்மைப் பொருளாகக் கருதப்படுகிறது. குதிரையின் அழகும் ஆடுபவரின் ஒப்பனையும் மிக முக்கியமாகும். பொய்க் கால் குதிரை செய்யும் முறை குறித்த செய்திகளை ஆறு. இராமநாதன் விரிவாகக் கள ஆய்வு மேற்கொண்டு சேகரித்திருக்கிறார். முதலில் குதிரைக் கூட்டைத் தயார் செய்ய மண் குதிரை மாதிரி ஒன்றைத் தயாரித்துக் கொள்கின்றனர். இந்த மண் குதிரை களிமண் ஆற்றுமணல் சேர்த்த கலவையால் ஆனது. இந்த மண் மாதிரிக் குதிரை









நன்றாக உலர்ந்த பின்புதான் காகிதக் குதிரையைத் தயார் செய்யத் தொடங்குவர். முதலில் இந்த மண் மாதிரிக்குதிரையின் மீது தண்ணீரில் நனைத்த செய்தித்தாளை ஒட்டுவர். மண் மாதிரிக்குதிரையின் எல்லாப் பகுதிகளிலும் ஒட்டிய பின்பு பசை தடவிய செய்தித்தாளை ஒட்டுவர். இப்பசை வஜ்ரம், மயில்துத்தம், கிழங்கு மாவு ஆகிய மூன்றையும் கலந்து காய்ச்சித் தயாரிக்கப்பட்டது. இந்தப் பசை தேய்த்த செய்தித்தாள் ஒட்டப்பட்ட பின்பு குதிரையை வெயிலில் உலர வைப்பர். பின் பசை தடவிய காடாத் துணி செய்தித்தாள் ஆகியவற்றை ஒட்டுவர். இந்தக் கூடு உலர்ந்த பின் காகிதக் குதிரையை நெடுக்குவாக்கில் இரண்டாக வெட்டிப் பிரித்துக்கொள்வர். இந்தக்கூட்டை மறுபடியும் நூலால் தைத்து இணைத்துக் கொள்வர்.

கூட்டின் நடுவில் சம சதுர இடைவெளி இருக்கும்படி குதிரைக் கூட்டைத் தயார் செய்வர். இதன் பின் குதிரைக் கூட்டின் மேல் வண்ணக் கண்ணாடித் துண்டுகள், ஜிகினா காகிதங்கள் ஆகியன ஒட்டப்படும். வெள்ளை நிறச் சாயம் அடிக்கப்படும் குதிரையின் கீழ்ப்பகுதியில் வண்ணத் துணி தொங்க விடப்படும். மண் மாதிரிக்குதிரையில் காகிதக் கூழை அரைத்துப் பூசி, சாயம் பூசி குதிரை தயாரிப்பதும் உண்டு. ஆட்டக்காரர் காலில் கட்டும் கட்டை ஆலம் விழுதால் செய்யப்படும். இதில் பாதம் வைக்கும் பகுதி மாமரத்தாலோ தேக்கு மரத்தாலோ இருக்கும்.

தரையில் கட்டையில் நுனிப்பகுதி படும் இடத்தில் டயரைப் பொருத்துகின்றனர். குதிரை 25 முதல் 30 கிலோ எடை கொண்டதாக இருக்கும். ஆட்டக்காரர் குதிரைக் கூட்டுப் பொக்கு வழியாகத் தலையை நுழைத்து குதிரைப் பொக்குப் பகுதியில் இணைக்கப்பட்ட நீண்ட துணிக்கயிற்றைத் தோளில் மாட்டிக் கொள்வர். இத்தகவல்கள் நாட்டார் நிகழ்த்துக் கலைக் களஞ்சியம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். இக்கலை பொழுதுபோக்காக மட்டுமல்லாது தெய்வபக்தி, நல்லொழுக்கம், அழகுணர்ச்சி ஆகியவற்றைப் புகட்டி மக்களின் வாழ்வைப் பண்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வளர்ந்து வருகின்றது எனக் கூறின் மிகையாகாது.

# திரு நந்தி வாகனம்

கலாபூஷணம் வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன்

உழைப்பின் உறுதிக்கு காளை மாட்டையே உதாரணமாகக் காட்டுவார்கள். காளை வலிமை மிக்கது. பாரம் அனைத்தையும் சுமப்பது. தோற்றப் பொலிவு மிக்கது. சிவபெருமானின் வாகனம் காளையாகும். இந்தக் காளை மாடே சிவனுக்கு பல நிலைகளிலும் பல பெயர்களுடன் பணி செய்கிறது. கொடியாக உயரும் பொழுது 'ஏறு' என்றும், வாகனமாகப் பெருமானையும் பெருமாட்டியையும் சுமக்கும்பொழுது 'ரிஷபம்' என்றும், ஆலயத்தில் பலிபீடத்தில் இருக்கும்பொழுது 'நந்தி' என்றும் பெயர் பெறுவார் இவர்.

திருக்கையிலையில் காவல் காக்கும் தொழிலை ஏற்றுப் பணிபுரிகையில், கையில் பொற்பிரம்புடன் அதிகார நந்தி பதவியேற்று, சிவபெருமானை தரிசிக்க வரும் முப்பத்து முக்கோடி தேவர்களை வரிசைப்படுத்துகையில் அவர்களின் மணிமுடிகளினின்று சிந்தும் நவரத்தினங்கள் திருக்கையிலை மலையில் குப்பைகளாகிச் சிதறிக் கிடக்கின்றன. அதனைத் திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்,

'வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்ட ரலகிடுங்குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாத நகை மலர் முடிமேல் வைப்பாம்'

என்று திருநந்தி தேவருக்கு வணக்கம் கூறுகிறார். இந்த திருநந்தி தேவர் யார்? இவருக்குக் கிடைத்த பதவியின் சிறப்பு என்ன? சிந்திப்போமா...

சிலாதர் என்பவர் மிகச் சிறந்த தபோதனர். புத்திரப் பேறு இல்லாதவர். சென்றடையும் 'புத்' என்னும் நரகத்தை ஒரு சமயம் கண்ணால் பார்த்தார். அதன் கொடுமையைக் கண்டு அஞ்சினார். தமக்கு ஒரு புதல்வன் வாய்க்க வேண்டும் என்று திருவையாற்றுத் தலத்தை அடைந்து கடுந்தவம் மேற்கொண்டார். அவரது தவத்திற்கு மனமிரங்கி சிவபெருமான் காட்சி தந்தார்.

'தெள்ளு மாணிக்க வெற்பில்
செழும் பச்சை மணிபோய் ஒன்ற
வெள்ளிமால் வரையின் மேலோர்
வியன்மலை நடந்தா லென்ன
உள்ளமார் திருவை யாறன்
உமையுடன் விடைமேல் தோன்றிக்
கள்ளமில் சிலாதன் முன்னே
கட்புலன் காண நின்றார்'

தம்முன்னே அற்புத காட்சியளித்த இறைவனை நோக்கித் தனக்கு ஒரு நற்குணம் மிகுந்த மகன் வேண்டுமென்று இரந்து



நின்றார் சிலாதர். அவ்வாறே அருளினார் சிவபெருமான். ஆனால் அவனது ஆயுள் 16 ஆண்டுகள் மட்டுமே.

*'கோத்திரம் சிலம் வாய்மை*
*குறைவிலா அறிவுமிக்க*
*சாத்திரம் சகல வித்தை*
*சார்ந்துளன் தவத்தினாலே*
*பாத்திர வானோர் மைந்தன்*
*பதினாறு யாண்டு நின்பால்*
*காத்திரம் கொண்டு நிற்பன்*
*கருத்துறத் தந்தோம்.'*

மேலும் அருளினார். 'சிலாதரே! நீ புத்திர காமேஷ்டி யாகம் செய். யாக பூமியை உழும்பொழுது பெட்டகம் ஒன்று கிடைக்கப் பெறும். அப்பெட்டகத்தில் அரும்பெறல் புதல்வன் இருக்கக் காணப் பெறுவாய்' என்று திருவாய் மலர்ந்தார் பெருமான். அங்கனமே சிலாதர் புத்திர காமேஷ்டி யாகம் செய்ய நிலத்தை உழும்பொழுது இறைவன் குழந்தையாக அவதரித்து அருளினார். பெற்றோரும் குழந்தைக்கு 'செபேசர்' என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

**செபேசர் தவம்**

செபேசுவரர் 14 வயதிற்குள் சகல கலை, புராண, ஆகமங்கள், சாத்திரங்கள் அனைத்தையும் கற்று வல்லவர் ஆனார். தன்னுடைய ஆயுளின் எல்லையான 16ஆம் ஆண்டில் திருவையாற்று பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தை அடைந்து கடுமையான தவம் மேற்கொண்டார். தவத்தினை மெச்சிய இறைவன் நேரில் தோன்றி 'நீ வேண்டும் வரம் யாது?' என்று வினாவ, 16 பேறுகளை வரமாக வேண்டினார். அவர் பெற்ற 16 வரங்களும் வருமாறு.

1) மறைகள் நிந்தனை பொறாமனம்.
2) சைவ நிந்தனை பொறாமனம்.
3) ஐம்புலங்களுக்கு ஏவல் செய்யாத் திறன்.
4) பிறவி தீதெனாப் பேதையர் தம்மோடு பிணக்கு.
5) உறுதி, நல்லறம் செய்வாரோடு உறவு.
6) நல்லன்பர் யாது கேட்கினும் உதவும் இயல்பு.
7) மாதவத்தினர் ஒறுப்பினும் வணங்குதல்.
8) ஓதும் நல்லுபதேசம் மெய்யுறுதியுடைய அன்பர் தீது செயினும் சிவன் செயல் எனக்கொளும் தெளிவு.
9) மனமும் வாக்கும் நின் அன்பர்பால் ஒருப்படும் செயல்.
10) கனவிலும் உனதன்பர்கட்கு அடிமையாம் கருத்து.
11) நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலை.
12) புனிதா! நின்புகழ் நாள்தொறும் உரைத்திடும் பொலிவு.
13) தீமையாம் புறச்சமயங்கள் ஒழித்திடும் திறன்.
14) வாய்மையால் பிறர்பொருள் விழைவுறா வளன்.
15) பாதாரம் நச்சும் நன்னோன்பு.
16) தூய்மை நெஞ்சினன் யான் என்னும் செருக்குறாத் துறவு.






இத்துணை வரங்களையும் செப்பேசர் தவத்திற்கு மெச்சி அருளித் திருவருள் பாலித்தார்.

நந்திகேசர் ஆனமை

செப்பேசுவரர் சிவபெருமானை 'கங்கையின் நீர், கமலத்தோன் கமண்டல நீர், உமையம்மை கொங்கையின் நீர், கொண்டல் நீர், குண நந்தி வாய் நுரை நீர்' என்ற ஐவகைத் தீர்த்தங்களால் அபிஷேகம் செய்து மகிழ்ந்தார். செப்பேசுவரது இச்செய்கைக்கு மெச்சி உளங்கனிந்து 'திருநோக்கால், ஸ்பரிசத்தால், திகழ்வாக்கால், பாவனையால், யோகத்தால், அருள் நூலால், அருள் பெருக்கி'த் திருவடி தீட்சை செய்து, மலங்களைந்து' திருநந்திதேவன்' என்று திருநாமம் சூட்டியருளினார். வசிட்ட முனிவரின் பௌத்திரியும் வியாக்ரபாத முனிவருடைய புதல்வியும் உபமன்யுவின் தங்கையுமாகிய 'சுயம்பிரகாசாம்பிகை'யை பங்குனி மாத புனர்பூச நட்சத்திரத்தில் திருமழபாடியில் திருமணம் செய்து வைத்தார்.

**சாரூப பதவி**

பதமுத்திகள் நான்கு. அவையாவன் சிவபெருமானுடன் ஒரே உலகத்தில் இருக்கும் பேறு 'சாலோகம்'.

சிவபெருமானுக்கு சமீபத்தில் இருப்பது 'சாமீபம்'. சிவபெருமானின் திருவுருவத்தைப் பெற்றிருப்பது 'சாரூபம்'. 'சாயுச்யம்' என்பது முக்திபேறு. நந்திகேஸ்வரருக்கு சாரூப நிலையைப் பெருமான் அருளினார்.

*'நெற்றியிற் கண் நாலு புயம்*
*நெருப்புருவம் பிறைகொள்முடி*
*சற்றுமொரு குறைவிலாச்*
*சாரூபம் பணித்தருளிப்*
*பிரம்பும் அருள் செய்தனனே'*

இந்த அதிகார நந்தியின் செப்புப் படிமத் திருக்கோலம் திருக்கேதீச்சரத்திலுள்ளது.

நந்தீசனின் சிறப்பியல்புகள்

'நந்தி' ஞானத்தின் குறியீடு. முழுதுணர் ஞானம், வரம்பிலா ஆற்றல், மங்கலம், தூய்மை, செம்மை என்ற பல பொருட்களின் கொள்கலன். திருமந்திரத்தில் நந்திகள் நால்வர் என்பது குறிப்பு.

1) சிவயோக மாமுனி 2) பதஞ்சலி 3) வியாக்ரபாதர்
4) திருமூலர்

இராமனது பாதுகையை பரதன் வைத்துப் பூசித்த இடம் 'நந்திக் கிராமம்'. திருத்தணி மலை மீது ஏறும் பகுதியில் உள்ள குகை 'நந்திக் குகை'. பாலாறும், வடபெண்ணையாறும் உற்பத்தியாகும் இடம் 'நந்திவர்க்கம்'. நந்திதேவர் செய்த ஹூங்கார நாதத்தால் உண்டானது 'நந்தி நாதோற்பவம்' என்ற நதி. ஸ்ரீசைலத்தில் நந்திதேவர் தவம் செய்த இடம் 'நந்தியால்' என்ற பகுதி. மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்ற இலக்கியம் 'நந்திக் கலம்பகம்'.


தஞ்சாவூர் பெரியகோவிலிலுள்ள நந்தி

குஷான வம்சத்து அரசர்களுள் ஒருவரான வாசுதேவனுடைய நாணயங்களிலே நந்தியின் வடிவமும் திரிசூலமும் பொறிக்கப்பட்டிருந்தன. கி.பி. 13ஆம் நூற்றாண்டிற்கு முன்பே நந்தியின் உருவம் அரச சின்னமாக்கப்பட்டது. பல்லவர்கள் இடபத்தினை அரச சின்னமாகக் கொண்டிருந்தனர். இலங்கையில் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஆரியச் சக்கரவர்த்திகள் 'நந்தி'யின் உருவத்தை அரச சின்னமாகப் பயன்படுத்தினார்கள்,


அதிகார நந்தி

சப்த நந்திகள்

ஆலயங்களில் பஞ்ச நந்திகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. அவையாவன்

**1) போக நந்தி**

இந்திரன் இடப வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். இதனை 'இந்திர நந்தி' அல்லது 'போக நந்தி' என்பர்'.

**2) வேத நந்தி**

பிரமன் நந்தி வடிவம் கொண்டு இறைவனைத் தாங்கினான். வேதனான பிரமன் தாங்கியதால் இதற்கு 'வேத நந்தி' அல்லது 'பிரம்ம நந்தி' எனப் பெயர். பிரமம் என்ற சொல்லுக்குப் பெரியது, கம்பீரமானது என்று பொருள் சொல்லுவர். இந்த நந்தியை மிகப் பெரியதாக சுண்ணாம்புச் சாந்தினால் அமைப்பர். திருஇடை மருதூர், இராமேஸ்வரம், காஞ்சிபுரம் முதலான தலங்களில் இவ்வகை நந்திகளை அமைத்துள்ளனர்.

**3) ஆன்ம நந்தி**

ஆலயத்தில் கொடி மரத்தையொட்டி இறைவனை நோக்கி அமைந்திருப்பது ஆன்ம நந்தியாகும். பிரதோஷ காலங்களில் இந்த நந்திக்கே அறுகுமாலை, காப்பரிசி முதலியவற்றை சமர்ப்பிப்பது சிறப்பு வழிபாடாகும். நந்தியின் கொம்புகளின் வழியாக இறைவனின் பிரதோஷ கால நடனத்தைத் தரிசிப்பது புண்ணியத்தைத் தரும்.

**4) மால்விடை**

திரிபுர தகனத்தின்பொழுது தேவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு சிறந்த தேரினை அமைத்தனர். தேரினை அமைத்ததோடல்லாமல் தாங்கள் இல்லாவிட்டால் சிவன்

முப்புரங்களை வெல்ல முடியாது என்ற அகங்காரமும் கொண்டனர். இதனை உணர்ந்த பெருமான் தேர்த்தட்டின் மீது தன் வலக் காலை ஊன்றினார். தேர் பொடிப் பொடியாக நொருங்கியது. அனை வரும் வெட்கினர். அகந்தை அழிந்தனர். அப்பொழுது திருமால் விடையாகி உருவெடுத்து சிவ பெருமானைத் தாங்கி மகிழ்ந்தார். இதுவே 'மால்விடை' ஆகும். ஆலய இரண்டாம் ஆவரணத்துள் இந்தப் பெருமான் அமர்ந்திருபாராக.

**5) தரும நந்தி**

மகா மண்டபத்தில் அமைந்திருக்கும் சிறு நந்தியே 'தரும நந்தி' ஆகும். சர்வ சங்கார காலத்தில் தருமமே இடபவடிவெடுத்து இறைவனைத் தாங்கியது.

பெரிய ஆலயங்களில் இந்தப் பஞ்ச நந்திகளும் இருப்பதைக் காணலாம். திருவண்ணாமலை, காஞ்சிபுரம் முதலான தலங்கள் இதற்கு உதாரணங்களாகும். இதனைத் தவிர உட்கோபுர வாயிலின் உட்பகுதியில் 'அதிகார நந்தி'யும், கருவறைக்குப் பின்னால் 'வ்ருஷபர்' என்ற நந்தியும் என பூரணமான சிவாலயத்தில் 'ஏழு நந்திகள்' சப்த நந்தி'களாக இருப்பதும் உண்டு.

**பிற செய்திகள்**

சிவனிடம் உபதேசம் பெற்ற நந்தியம் பெருமானே அகச் சந்தானக் குரவருள் முதன்மையிடம் பெறுகிறார். தஞ்சை பெரிய கோயிலில் உள்ள மிகப் பெரிய நந்தி ஒற்றைக் கல்லால் ஆனது. அது போலவே மைசூர் சாமுண்டேஸ்வரி குன்றிலுள்ள நந்தியும் பெரியதும் அழகானதும் ஆகும். ஆண்டுக்கு ஒரு முறை நந்திக்குப் பலவிதமான அணிகலன்களை அணிவித்து 'நந்திவிழா'க் கொண்டாடுவார்கள். திருஆவடுதுறை கோமுத்தீஸ்வரர் ஆலயத்தில் மதில் சுவர்களில் நந்தி காணப்பட மாட்டாது. காரணம் என்னவெனில், திருவிசைப்பா ஆசிரியரான 'திருமாளிகைத்தேவ'ரை காடவர் கோன் கழற்சிங்கனின் சிற்றரசனான 'நரசிங்கன்' தனது நால்வகைப் படைகளையும் அனுப்பிக் கட்டி இழுத்து வருமாறு பணித்தான். இதனை அறிந்த திருமாளிகைத்தேவர் மாசிலாமணியீசனின் பங்கிலுறை ஒப்பிலா முலையம்மையிடம் குறையிரந்து நின்றார். அம்மையும் ஆலயத்தின் மதில்களில் உள்ள நந்திகளையெல்லாம் அழைத்து ஒரு நந்தியாக்கி, நரசிம்மனைக் கட்டி இழுத்து வரச் செய்து அவனது கொட்டத்தை அடக்கினாள். இவ்வரலாற்றுக்கேற்ப திருமதில்களில் நந்திகள் இல்லை. இறைவன் திருமுன்பு உள்ள நந்தி விஸ்வரூப நந்தியாக 18 அடி உயரத்துடன் விளங்குகின்றது.



திருநாளைப்போவார் என்னும் நந்தனாருக்காகத் துருப்புன்கூர் நந்தி விலகியது. அதேபோல திருஞான சம்பந்தரைக் காண்பதற்காக நந்தியை விலகியிருக்குமாறு இறைவன் பணித்த தலம் திருப்பட்டீச்சரம். இவ்வாறு பல்வேறு பெருமைகளையும், சிறப்புக்களையும் பெற்றுள்ள திருநந்திதேவர், சிவபெருமானுக்கு வாகனமாகவும், கொடியாகவும், திருக்கயிலைக் காவலனாகவும், அகச் சந்தானசாரியாரில் முதல்வராகவும் சைவப் பெருமக்களால் போற்றப் படுகிறார்.

இன்று நந்தியம் பெருமானின் சிறப்பிற்கு சிறப்புச்சேர்க்கும் வகையில், சின்னத்துரை தனபாலா அவர்களின் அரிய முயற்சியால் சமய விழாக்களிலே சைவக் கொடியாம் 'நந்திக் கொடி' ஏற்றப்படுகிறது. சமய நிறுவனங்களிலும், ஆலயங்களிலும், பள்ளி விழாக்களிலும் நந்திக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. இது சைவ மக்கள் ஒவ்வொருவரும் பெருமை கொள்ள வேண்டிய நிகழ்ச்சியாகும்.



# ராஜஸ்தானின் ஒட்டகத் திருவிழா

'பாலைவனக்கப்பல்' என்று அழைக்கப்படும் ஒட்டகங்களை மேன்மைப்படுத்திக் காட்டும் பொருட்டு ஒரு திருவிழா நடைபெறுகிறது என்றால், அது ஒரு தனித்துவமான விடயமே. இப்படி ஒட்டகங்களுக் கெனத் திருவிழா நடத்துபவர்கள், வேறு யாருமல்ல, ராஜஸ்தான் பாலைவனத்து மக்கள் தான்.

ராஜஸ்தானின் பாலைவனப் பிரதேசத்தின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் பிக்கனெர் என்னும் பிரதேசத்தின் வரலாற்றில் ஒட்டகத்துக்கு மிகத் தனித்துவமான இடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பிக்கனெர் என்ற பிரதேசம் எப்போதுமே மக்கள் சென்றடைய முடியாத ஓர் இடமாகவே இருந்து வருகிறது.


நவீன மோட்டார் வாகனங்கள் கண்டுபிடிப்பதற்கு முன்னர், பிக்கனெர் மக்களின் வாழ்விற்கு ஒரே ஆதாரம் இந்த 'பாலை வனத்துக் கப்பல்' ஆன ஒட்டகம் தான். சமாந்தர பூமியாக இருப்பின் போக்குவரத்துக் கஷ்டங்கள் ஓரளவு குறைவாக இருந்திருக்கக் கூடும். ஆனால் பாலை வனப்பிரதேசத்தின் மையத்தில் அமைந்திருந்த பிக்கனெர் பகுதிக்கு, ஒட்டகத்தைத் தவிர வேறு எந்த மிருகம் செல்லமுடியும்?

மக்களைக் கொண்டு திரிவதற்கு மட்டுமன்றி, அவர்களது பொருட்களைக் காவிச்செல்லும் இந்த ஒட்டகம் தான் ஒரே ஆதாரம். எனவே அவர்தம் வாழ்க்கையோடு, ஒட்டகம் பிரிக்க முடியாத ஒன்றாகி விட்டது. ராஜஸ்தான் ஒட்டகங்கள், அவற்றின் பலத்துக்கும் அழகுக்கும் கூட பெயர் பெற்றவை. இன்று மோட்டார் வாகனங்கள் பாவனைக்கு வந்து, இந்த பாலைவனத்துக் கப்பலின் சுமையை பெருமளவு குறைத்திருக்கிறது என்றாலும், அங்கு ஒட்டகங்களின் முக்கியத்துவம் நிலையான ஒன்றுதான்.

பிக்கனெர் ராணுவம் ஓர் ஒட்டகப் படையையும் வைத்திருக்கிறது 'கங்கா றிசல' என்னும் அழைக்கப் படும் இந்த ஒட்டகப் படை, இரண்டு உலகப் போர்களிலும் தீவிர பங்கு வகித்திருக்கிறது. பாரதம் சுதந்திரம் பெற்ற பின்னரும், ராணுவத்தில் 'கங்கா றிசல' ஓர் ஒட்டகப் பிரிவாக விளங்கியதுடன் இந்தோ - பாகிஸ்தான் போர்களிலும் பங்குபற்றியுள்ளது. அத்துடன் பிக்கனெர் தான் ஒட்டகங்களை வளர்க்கும் ஒரே இடமாக இருக்கும் பெருமையைக் கொண்டது.

ஒட்டகத்துடன் அத்துணை நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கும் ஒரு பிரதேசத்தில், அரசு ஒட்டக விழாவை நடத்துவது இயல்பானதுதான்.





ராஜஸ்தானின் ஜுனாகார்ஹ் கோட்டையில் சிவப்பு மண் கல் சுவர்களின் பின்னணியில் அழகாக அலங்கரிக்கப் பட்ட ஒட்டகங் களின் கம்பீர மான ஊர் வலத்துடன் ஒட்டகத் திருவிழா ஆரம்பமாகும். ஒட்டகத்தின் சொந்தக்காரர்கள் தமது ஒட்டகத்தை, வண்ணம் வண்ணமாக அலங்கரித்து, மற்றைய ஒட்டகங்களை விட அழகாக தோன்ற வேண்டும் என்று போட்டி போடுவார்கள்.

ஒட்டகங்கள் வெளி மைதானத்திற்கு வந்த பின், போட்டிகள் ஆரம்பமாகும். அதாவது மிகச் சிறப்பாக வளர்க்கப்பட்ட ஒட்டகம், மிக சிறப்பாக அலங்கரிக்கப் பட்ட ஒட்டகம், ஒட்டகத்தில் மிகச் சிறப்பாக செய்யப் பட்ட கேச வெட்டு அலங்காரம் என்பதை எல்லாம் மத்தியஸ்தர்கள் கவனித்துப் பரிசளிப்பார்கள் அத்துடன் ஒட்டகம் நடனமாடுவதைப் பார்க்கின்ற ஒரு சந்தர்ப்பமும் இங்கு மட்டும் தான் கிடைக்கும்! தங்கள் எஜமானர்களைத் திரும்பித் திரும்பி பார்த்தவாறு, ஒட்டகங்கள் தலையை அசைத்து ஆடுவதைப் பார்க்க மிகவும் ஆச்சரிமாக இருக்கும்.

இதை பார்க்கவென்றே பார்வையாளர்கள் மிக மிக ஆர்வமாக அங்கு வந்து குழுமுவார்கள். எஜமானர்களும் தத்தம் ஒட்டகங்களுக்கு, தாளத்துக்கேற்ப கால்களை எடுத்து வைத்து ஆடப் பயிற்சி கொடுப்பார்கள். பார்வையாளர்கள் மயிர்க்கூச் செறியப்பார்க்கும் ஒரு நிகழ்ச்சி இதுவென்றால் மிகையில்லை. சூரிய அஸ்தமனத்தின்போது, பாலைவன மஞ்சள் மணலில், ஒட்டகங்களின் நடன நிழல்களைப் பார்ப்பது மிகவும் அற்புதமான அனுபவந்தான். பார்வையாளர்கள் மகிழ்ச் சியால் கைதட்டி ஆரவாரஞ் செய்ய, அதனை வரவேற்று மகிழும் ஒட்டகங்களும், சலங்கை சப்திக்க, நிலத்தில் காலைத் தட்டி ஆடிக்காட்டும். நூற்றுக்கணக்காண உல்லாசப் பயணிகளும் மற்றும் பிரமுகர்களும் இதனைப் பார்த்து ரசித்து மகிழ்வார்கள்.

மறுநாள் ஒட்டகங்களின் ஓட்டப் போட்டி நடைபெறும். பார்வையாளர்களின் ஆரவாரக் கூச்சல்களுக்கு மத்தியில், ஒட்டகங்கள் இலக்கு முனையை நோக்கி ஓடுவதைப் பார்க்க மிகவும் விறு விறுப்பாக இருக்கும்.

சில வேளைகளில் ஒட்டகங்கள் போட்டிக்கு போக மறுத்து படுத்து விடும்! அப்போது அதனை எழுப்பி போட்டியில் கலந்து ஓடச் செய்ய சொந்தக்காரர்கள் படும்பாடு பெரும் நகைப்பை உண்டாக்கும்.

சில தனியே இலக்கு முனைக்குப் போகும்! சில ஒட்டகங்கள் போட்டியில் ஓடிக்கொண்டிருக்கும்போது, திரும்பி ஆரம்பித்த இடத்துக்குத் ஓடி வந்து விடும்! இவற்றைப் பார்க்கும்போது சிரிப்பு மேலிடும்!

இருநாள் நிகழ்ச்சிகள் முடிவுறும் வேளை, ராஜஸ்தான் தலைநகரின் கலை கலாசார நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று மக்களைக் கவரும்!



இறுதிநேர நிகழ்ச்சியில் மிகக் கவர்ச்சியான வாண வேடிக்கை இடம்பெற்று பெரும் ஆரவாரமான இருக்கும். பிக்கனேர் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியில் வந்து கலந்து கொள்ளும் நிகழ்ச்சி இந்த ஒட்டகத் திருவிழாவாகும். ராஜஸ்தான் மக்களின் வாழ்க்கை முறை, கலை கலாசாரம், பண்பாடுகளை நேரடியாகப் பார்ப்பதற்காக உல்லாச பயணிகளும் பெருமளவில் இங்கு வந்து கூடும் காலமும் இதுவாகும். இதைத்தவிர, கடைத் தெருக்கள், கைவினைப் பொருட்கள், வித விதமான வேறு பல பொருட்களையும் அப்போது இங்கு நடைபெறும் சந்தைகளில் காணலாம். அப்போது உல்லாசப் பயணிகள் தமக்கு விரும்பிய வினோதப் பொருட்களை ஆர்வமாக வாங்குவார்கள்.


ராஜஸ்தானுடன் மானிலத்தின் விட மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பிக்கனேர் நாட்டின் பிரதான நகரங்களுடன் எல்லாம் புகையிரதம் மற்றும் வீதிகளால் நன்கு இணைக்கப்பட்டுள்ளது.

பிக்கனேரின் ஒட்டகத் திருவிழா போன்று, மிகவும் பிரபலமாக விளங்கும் மற்றுமொரு மகத்தான நிகழ்ச்சியாக அமைவது ராஜஸ்தானின் புஷ்கார் பகுதியில் வருடாந்தம் நடைபெற்று வரும் ஒட்டகச் சந்தையாகும். வடக்கு ராஜஸ்தானினில் உள்ள அஸ்மீர் என்னுமிடத்துக்கு சுமார் 14 கிலோ மீட்டருக்கு அப்பால், பள்ளத்தாக்கொன்றில் உள்ள சிறிய, அழகிய நகரமே புஷ்கார் ஆகும். மூன்று பக்கமும் மலைத் தொடர்களும், ஒரு பக்கம் மணல் பாங்காகவும் விளங்கும் இவ்வழகிய நகரத்தின் வருடாந்த சமய நிகழ்வும் கால்நடைச் சந்தையும் உலக பிரசித்தமானதாகும். இவற்றைப் பார்ப்பதற்கு, உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் இங்கு விஜயம் செய்கிறார்கள்.

புஷ்காரில் அதி கூடுதலான சீதோஷ்ண நிலையே உள்ளது. எனவே அக்டோபரில் இருந்து மார்ச் வரையான காலப்பகுதி அங்கு விஜயம் செய்ய உகந்த சீதோஷ்ண நிலையாக இருக்கும்.

பிரதி வருடமும் நவம்பர் மாதத்தில் ஆயிரக்கணக்கான ராஜஸ்தானி பழங்குடிகள் புஷ்கார் நகருக்கு வந்து கூடுகிறார்கள். இந்து யாத்திரீகர்களும் இங்கு பெருமளவில் விஜயம் செய்கின்றார்கள். படைத்தல் கடவுளான பிரமாவுக்கு இங்கு மட்டும் தான் கோயில் உள்ளது. ஒட்டகங்கள் மற்றும் கால் நடைகளை வாங்கவும் விற்கவும் வரும் இம்மக்கள், இந்துக்களால் புனித வாவி எனக் கருதப்படும் புஷ்கார் வாவியில் தீர்த்தமாடுவதை முக்கிய கடமையாக மேற்கொள்வார்கள். அத்துடன் ஆடைகள், கண்ணாடி வளையல்கள் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் வாங்குவார்கள். ஆண்கள் வெள்ளை வேஷ்டி மற்றும் வர்ண தலைப்பாகையுடன் காணப்படுவார்கள். பெண்கள் தலையணியும் மற்றும் ஆபரணங்களோடும் மகிழ்ச்சியாகத் திரிவார்கள். இங்கு உல்லாச பயணிகள் சில நாட்களைக் கழிக்கும் வேளை, ராஜஸ்தானின் செழுமையான கட்டிடக்கலை மற்றும் கலாசார மரபு களைக் கண்டு மகிழ முடியும்.

-ஜெனிஷா




சமகாலம்
எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/165/News/2012
எதை நோக்கி போகிறது இலங்கை?
நீதித்துறைச் சுதந்திரத்தின் நிலை
ஜெசிந்தாவின் மரணம்
CANADA........CAN$ 10.00
AUSTRALIA...AUS$ 10.00
SWISS.............CHF 10.00
USA...........US$ 10.00
UK.............GB£ 5.00
EUROPE..EU€ 5.00
உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நிலைவரங்களை முழுமையாக எடுத்துரைக்கும் செய்திச்சஞ்சிகை
சிறப்பு இலங்கை விலை 100/-
இப்பொழுது விற்பனையில்
தொடர்புகளுக்கு
Surainie: 0759 685658 / 0117 322741
Shara: 0728 497720 / 0117 322731
சகல பத்திரிகை விற்பனையாளர்களிடமும்
வீரகேசரி கிளைக்காரியாலயங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
வீ எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் வெளியீடு




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.